www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 14 | யூன் 2007 | பக்கம் 16 | விலை 20/= | சுழற்சி 103

# இந்திய ஆலோசனையை ஏற்பதா? அமெரிக்க காலடிக்கு செல்வதா?

"நாங்கள் இப் பிராந்தியத்தில் பெரும் வல்லரசு. இலங்கை எங்களை மீறி பாகிஸ்தானிடமோ சீனாவிடமோ செல்ல முடியாது. தேவை இருப் பின் இலங்கை எங்களிடமே வரவேண்டும்." இவ் வாறு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் எம்.கே. நாராயணன் மே 31ம் திகதி சென் னையில் கருத்து வெளியிட்டார். மேலும் அவரது கருத்துரைப்பில் "நாங்கள் இலங்கைக்கு தாக்கு தல் ஆயுதங்கள் வழங்கவில்லை. தற்காப்பு ஆயுத ங்களையே வழங்கியுள்ளோம்" என்று தெரிவித்து ள்ளார்.

மே மாத இறுதிவாரத்தில் இலங்கையின் பாது காப்புச் செயலாளரும் படைத்தளபதிகளும் புது டெல்லியில் நான்கு நாட்கள் தங்கி இருந்து இந் திய அரசின் உயர் அதிகாரிகள் படைத் தளபதி களுடன் முக்கிய பேச்சுக்கள் நடத்தியிருந்த னர். அதனைத் தொடர்ந்து ராணுவ விமானம் மூலம் ஆயுத தளபாடங்கள் கொழும்புக்கு வந்த தாகவும் செய்திகள் வெளிவந்தன.

இந் நிலையிலேயே பாதுகாப்பு ஆலோசகர் சென்னைக்கு அவசரப் பயணம் மேற்கொண்டு முதல்வர் கருணாநிதியைச் சந்தித்தார்.

2ம் பக்கம் →





மர நிழலும்
மழை வெள்ளமும்
கொழுத்தும் வெய்யிலும்
கூடார வாழ்வும்
கடும் பசியும்
கொடும் பிணியும்
கொடுமை ! கொடுமை !
எங்கள் வாழ்வை
பறித்த கயவர் யார்?









சமாதானத்தின் சின்னம் சுண்டப் பட்டு இரத்தம் கக்க தலை குப்புறக் கிடக்கிறது







www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தடுத்து வைக்கப்பட்டுள்ள புதிய- ஜனநாயக கட்சியின் ஐந்து தோழர்களையும் விடுதலை செய்!



கடந்த ஏப்பிரல் 14ம், 15ம் திகதிகளில் அவசரகால சட்ட விதிகளின் கீழ் கைது செய்யப்பட்ட புதிய- ஜனநாயக கட்சியின் ஐந்து தோழர்களான வெ. மகேந்திரன் ஆர். ஜெயசீலன் எஸ். சுகேசனன், எஸ். மோகன்ராஜ், என். கிருஷ்ணப்பிரியன் ஆகியோர் தொட ர்ந்தும் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர். இம் மாதம் 14ம், 15ம் திகதிகளில் அவர்கள் கைது செய்யப்பட்டு நான்காவது மாதம் முடிவடைகின்றது. ஆனால் இதுவரை எந்தவொரு நீதிமன்றத்திலும் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்தும் அவசரகால விதிகளின் கீழான சட்ட ஒழுங்கின் கீழ் தடுத்துவை க்கப்பட்டுள்னர். அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அல்லது நீதிமன்றத்தில் விசாரணைக்கு நிறுத்த வேண்டும். இதனையே புதிய- ஜனநாயக கட்சியும் மக்களும் வற்புறுத்தி வருகின்றனர். இவ் ஐந்து தோழர்களில் மூவர் ஆசிரியர்கள். இருவர் மாணவர்கள். இவர்கள் வெறும் ஆசிரியர்கள் மாணவர்க அல்லர். தமது மக்கள் சேவையல் மலையகத்தின் தொழிலாளர்கள் ஆசிரியர்கள் மாணவர்களிடையே அன்பும் மதிப்பும் பெற்றவராவர். எங்கு அநீதியும் அடக்குமுறையும் இடம் பெறுகின்றதோ அந்த இடத்தில் சென்று கட்சியைப் பிரதிநிதித்துவும் செய்து பல நிலைகளிலும் பிரச்சினைகளுக்கு மக்கள் பக்கத்தில் நின்று மகம் கொடுப்பவர்கள். அண்மைக்காலம் வரை மலையகத்தில் இடம் பெற்றுவந்த சகல வெகுஜனப் போராட்டங்களிலும் முன்னணியில் நின்று செயல்பட்ட தோழர்களாவர் மலையகத்தில் தொழிலாளர்களும் மக்களும் தொடர்ந்து ஆதிக்க தொழிற்சங்க அரசியல் தலைமைகளால் ஏமா ற்றப்படுவதை அம்பலப்படுத்தி வந்தவர்கள். மாற்று அரசியலாக மாக்சிச லெனினிசப் புரட்சிகர அரசியலை முன்னெடுப்பதில் முன்னின்ற தோழர்கள் ஆவர். அதற்கு அடிப்படை அவர்களது மாக்சிச லெனினிச நிலைப்பாடும் கட்சி மீதான பற்றுதியுமாகும். அத்தகைய தோழர்கள் மீண்டும் விரைவாக மக்கள் மத்திக்கு வரவேண்டும் அவர்களை விடுவிப்பதற்கு வெகுஜன வற்புறுத்தல் இயக்கம் பல நிலைகளிலும் முன்னெடுக்கப்படல் வேண்டும் அதேவேளை சட்ட ரீதியில் அவர்கள் நிரபராதிகள் என்பதை நிரூபிப்பதற்கு ஏற்ற வழி முறைகளில் செய ல்பட வேண்டியும் உள்ளது அதற்கான நிதி ஆதரவும் தேவைப்படுகின்றது.

**இந்திய ஆலோசனையை**

1ம் பக்க தொடர்ச்சி

அச் சந்திப்பிற்குப் பின்பே நாராயணன் தனது பிராந்திய மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். இக் கருத்தும் ஆதிக்கத் தொனியும் பலருக்கு ஆச்சரியம் தரலாம். ஆனால் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கம் பற்றிப் புரிந்தவர்களுக்கு எவ்வித ஆச்சரியத்தையும் கொடுக்கவில்லை. புதிய பூமி தொடர்ச்சியாக இந்திய மேலாதிக்க அபாயம் பற்றி எடுத்துக் கூறி வந்தமையை நாராயணனின் கருத்து மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

மேற்படி கருத்தானது இலங்கையின் ஆளும் தரப்பினர் எதிர்த்தரப்பினரிடம் மட்டுமன்றி அரசியல் சமூகத் தலைவர்களிடமும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரு இறைமையுள்ள நாட்டிற்கு மற்றொரு அயல் நாடு கூறக் கூடிய கருத்தா இது என்ற கேள்வி பல மட்டங்களிலும் கிளப்பப்பட்டு வருகின்றது. இப் பிராந்தியத்தின் பெரியண்ணன் பாத்திரத்தை வகித்து இலங்கையின் இறைமைக்கும் சுதந்திரம் சுயாதிபத்தியத்திற்கும் மிரட்டல் விடுவது போன்று எம். கே. நாராயணன் வெளியிட்ட கருத்தை நேர்மையான எவரும் ஏற்றுக் கொள்ள முடியாது. அது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

அதே வேளை இந்திய ஆளும் வர்க்கம் இவ்வாறான ஆதிக்க மிரட்டலை விடுவதற்குரிய சந்தர்ப்ப சூழலை இங்கு வளர்த்து வந்த பேரினவாத ஆளும் வர்க்கம் உரிய பதிலைக் கூற வேண்டும். குறிப்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் யுத்தமாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தீவிர யுத்தத்தையே தேர்ந்தெடுத்துள்ளது. அரசியல் தீர்வு யோசனைகளை உரியவாறு முன்வைப்பதற்கு பதிலாக ஆயுதங்கள் வாங்குவதிலேயே அக்கறையாக உள்ளது. முன்வைத்த யோசனைகள் கூட பேரினவாதிகளை விட வேறு எவரையும் திருப்திப்படுத்துவதாக இல்லை. இந்தியா எதிர்பார்த்த அளவுக்கு எதுவும் மகிந்த சிந்தனை யோசனைகளில் காணப்படவில்லை. எனவே நாராயணனின் கருத்தில் தங்களது ஆலோசனைகளை இலங்கை அரசு கணக்கிலெடுக்காது புறந்தள்ளி வருகின்றது என்ற சினமும் உள்ளடங்கி இருக்கவே செய்கிறது.

நாரயணன் ஏன் பாகிஸ்தான் சீனாவிடம் செல்லக் கூடாது எனக்கட்டளை பிறப்பித்துள்ளார் என்பதும் கவனத்திற்குரியதாகும். அமெரிக்கா இஸ்ரேல் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிடம் இலங்கை ஆயுதம் வாங்கி வருகின்றமை பற்றி ஏன் அவர் குறிப்பிடவில்லை. அவை தன்னைவிடப் பெரிய சக்திகள் என்பதாலா? அல்லது சீன பாகிஸ்தான் மீதான வெறுப்புணர்வை தமிழகத்திலும் இந்தியாவிலும் தூண்டிவிடவா? அமெரிக்கா கடந்த வருடத்தை விட இலங்கைக்கு ஆறு கோடி எண்பது லட்சம் டொலர் பெறுமதியான ஆயுதங்கள் வழங்கியுள்ளமை இந்தியா அறியாத ஒன்றல்ல. அத்துடன் இந்தியா இலங்கைக்கு வழங்கிய ஆயுதங்களுடன் ஒப்பிடுகையில் பாகிஸ்தான் சீனா வழங்கியவற்றின் தொகையும் பெறுமதியும் பல மடங்கு குறைவானவையாகும்.

எனவே இந்தியாவும் நமது தமிழ்த் தரப்பினர் உட்பட இந்திய விசுவாசிகளும் பாகிஸ்தான் சீன விரோதம் கக்குவதும் அமெரிக்க இஸ்ரேல் ஆயுதங்கள் பற்றி மௌனம் காத்து வருவதும் தற்செயலானவை அல்ல. எனவே ஆதிக்கங்களும் ஆயுதங்களும் எங்கிருந்து வந்தாலும் எதிர்த்து நிற்கும் நிலைதான் நாட்டிற்கும் மக்களுக்கு உரிய நிலைப்பாடாகும். தத்தமது ஆட்சி அதிகார ஆதிக்க நீடிப்பிற்கும் தங்களது. அதிகார இருப்பிற்குமாக மக்களும் நாடும் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற நிலையில் அந்நிய சக்திகளில் தங்கி நிற்க முற்படுவது தான் நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும்.

இந்தியாவின் உள்ளார்ந்த நோக்கும் போக்கும் வெளிப்பட்டிருக்கும் சூழலில் இலங்கையின் ஆட்சியாளர்கள் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகிறார்கள். இந்தியாவின் ஆதிக்க ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்களா? அல்லது அதனை மீறி அமெரிக்காவின் காலடிகளில் "சாமியே சரணம்" என வீழ்ந்து கொள்ளப்போகிறார்களா?

இலங்கை பல்லின மக்களது நாடு என்ற யாதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு தேசிய இனங்களின் சமத்துவத்தையும் அவர்களது நியாயமான உரிமைகளையும் அங்கீகரித்து அரசியல் தீர்வுக்கு வருவதே சரியானதோர் நிலைப்பாடாக அமைய முடியும். அதற்கு முன்வராது யுத்தத்தை தீவிரமாக முன்னெடுக்கும் பேரினவெறிபிடித்து நின்றால் அந்நிய சக்திகளின் கரங்களில் சிக்குண்டு அவர்களது காலடிகளில் வீழ்ந்து நாட்டையும் அனைத்து மக்களையும் மேன்மேலும் அழிவுப்பாதையில் இட்டுச் செல்லவே முடியும்.

## தொழில்முறையான மல்யுத்தம்

மே மாத நடுப்பகுதியில் 'றெஸ்ட்லிங்' எனப்படுகிற ஆபத்தான விளையாட்டுப்பற்றியும் அதில் எத்தனையோ பேர் உயிர் இழந்துள்ளதாகவும் ஒரு தமிழ்ச் செய்தி ஏட்டில் விரிவான ஒரு கட்டுரை இருந்தது. கொஞ்சம் நேரம் யோசித்த பிறகு தான் விளங்கியது அது றெஸ்லிங் என ஆங்கிலத்திற் கூறப்படும் மல்யுத்தம் என்று. உலகில் பிரதேசத்திற்குப் பிரதேசம் பலவேறு விதமாக நடக்கும் மல்யுத்தம் குத்துச்சண்டையை விடக் குறைவான அளவே உயிராபத்தானது. எனினும் 1950 களிலேயே அது வணிகமயமாக்கப்பட்டு ஒரு முழு நாடகமாக அதற்கான கோதாவில் நடத்தப்படுகிறது. அதில் அடிக்கப்படுகிற அடிகளும் விழுகிற உதைகளும் கை, கால் கழுத்தை முறுக்கித் திரிப்பதும் உண்மையென்றால் அடிவாங்கியவர் எழுந்திருக்க சில நாட்களாகும். அடுத்த சண்டைக்கு இரண்டு வாரமாவது ஓய்வு தேவைப்படும். ஆனால் தமிழ் சினிமாக்களில் வருகின்ற சண்டைக் காட்சிக் கதாநாயகன் உதைவாங்கி இரத்தஞ்சொட்டச் சொட்ட எழுந்து நின்று முப்பது பேரை வரிசையாக விழுத்துகிறமாதிரி விழுந்து எழுந்து சண்டையிட ஒவ்வொரு மல்யுத்தக்காரருக்கும் இயலுமாகிறது.

மேற்கில் இதை ஒரு பொழுது போக்கு என்று பார்க்கிறார்கள். சிறு வயதினர் மட்டும் அதை உண்மை என்று நம்பினாலும் விரைவிலேயே முன்னேற்பாட்டின் படி தான் எல்லாம் நடக்கிறது என்று விளங்கிவிடும்.

கொஞ்சம் யோசித்த பிறகு மேலை நாட்டுப் பாராளுமன்ற அரசியலும் இப்படித்தான் என்பது தோன்றியது. அங்கேயும் ஆபத்தில்லாத ஆட்டம் தான் நடக்கிறது. நமக்குத்தான் விளையாட்டின் விதிகள் சிலசமயங்களிற் குழம்பிப் போகிறதால் பார்வையாளர்கள் வரிசையிலிருந்து ஆட்டக்காரர்கட்கு உயிராபத்து ஏற்படுகிறது போலத் தெரிகிறது.

## நாலு நடக்கும் உலகிலே நற்குணன்

## இந்தியக் கடற்படை மீனவரின் நண்பனா?

இந்திய மீனவர்களை இரண்டு மாதங்கள் முன்பு நடுக்கடலில் தாக்கியது இலங்கைக்கடற்படையா விடுதலைப் புலிகளா என்று விவாதம் நடந்து கடற்படையினரே என்று கருணாநிதி சட்டசபையிற் சொன்னார். சில வாரங்களின் பின்பு தமிழகப் பொலிஸ் தரப்பிலிருந்து விடுதலைப் புலிகளே பொறுப்பு என்று கூறப்பட்டதையடுத்து ஜெயலலிதா தமிழக மீனவர்களைக் காப்பாற்றக் கருணாநிதி அரசு தவறிவிட்டது என்றும் விடுதலைப்புலிகளுக்கு உடந்தையாக இருக்கிறது என்றும் ஒரு பிடி பிடித்து விட்டார். ஈழத் தமிழ் மக்களின் பிரதான ஆதரவாளர் எனப்படும் கோபாலசாமி வாயே திறக்கவில்லை. இப்போது இந்தியக் கடற்படைத் தகவல்கள் இலங்கை அரசாங்கத்தையே குற்றங்கூறுகின்றன.

யார் பொய் சொல்லுகிறார்கள்? பொறுப்பற்ற முறையில் ஊடகங்கட்குப் பொய்த்தகவல்களை வழங்குகிற அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? எது எப்படியிருந்தாலும் தமிழக மீனவர்களைக் காரணங்காட்டி இந்தியக் கடற்படையினரின் கடல் ரோந்து நடவடிக்கைகள் அதிகப்படுத்தப்படும். குறுகிய காலத்தில் இது இலங்கைக் கடற்படையின் நோக்கங்கட்கு உதவலாம். நீண்டகாலத்தில் நடக்கப்போவது என்ன?

## அவர்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான

ஜே. வி. பி ஒரு பேரினவாதக் கட்சியேயொழிய அது எந்த வகையிலும் இடதுசாரிக் கட்சியல்ல என்பது நமது தமிழ்த் தேசியத் தலைமைகள் அனைத்தும் அறிந்த விடயம். ஏகாதிபத்தியம் பேரினவாதத்துக்கு உடன்பாடாகச் செயற்படுகிற அளவில் ஜே. வி. பிக்கு ஏகாதிபத்தியம் பற்றி எவ்விதமான் மனத்தாங்கலும் இல்லை. ஜே. வி. பியின் சந்தர்ப்பவாதம் நாட்டின் தொழிலாளர், விவசாயிகளைக் காட்டிக் கொடுக்கிற விதமாக நடக்கிற போதெல்லாம் தமிழ்த் தலைவர்களோ தமிழ் ஊடகங்களோ கண்டுகொள்வதில்லை. அதன் நடத்தை இடதுசாரித் தன்மையுடையதா என்ற கேள்வி கூட எழுவதில்லை. எனினும் ஜே.வி.பியின் பேரினவாதம் தனது கோரப் பற்களைக் காட்டுகிற போது மட்டும் ஜே.வி.பி ஒரு மார்க்சியவாதக் கட்சி என்று பிரசாரப்படுத்துகிறார்கள். இது அறியாமை என்று இன்னமும் சொல்ல இடமில்லை. திரும்பத் திரும்ப ஜே. வி. பி ஒரு இடதுசாரிக் கட்சியே அல்ல என்று இடதுசாரிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எடுத்துரைத்து வந்த பின்பும் அதை ஒரு இடதுசாரிக் கட்சி என்று அறிமுகப்படுத்துகிறவர்களின் நோக்கம் இடதுசாரி விரோதமே. அதற்கான காரணம் அவர்களுள் ஊறிக் கிடக்கிற முதலாளிய- ஏகாதிபத்திய சார்பான பார்வையும் நிலவுடைமைக் காலத்துக்குரிய சிந்தனை முறையுமே.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வடபுலத்து கல்விச் சமூகத்தை அச்சுறுத்தும் ஆயுத கலாச்சாரம்!

சுகன்

வடக்கு கிழக்கின பொருளாதார அரசியல் சமூக கல்வி பண்பாடு யாவும் பேரினவாத யுத்தத்தால் சீரழிக்கப்பட்டு சின்னாபின்னமாகி வந்துள்ளன. இந் நிலையில் வடபுலத்து கல்வியானது பலமுனைத் தாக்குதல்களைப் பெற்று நிற்கின்றது. அங்கு தனிப் பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரி, ஆசிரிய பயிற்சி கலாசாலைகள், தொழில் நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக் கழகப் பிரிவு என்பனவற்றுடன் தேசியப் பாடசாலைகள் உள்ளிட்ட பல முக்கிய பாடசாலைகள் ஆரம்பகல்வி முதல் உயர்தர வகுப்பு கல்வி வரை பரந்தளவில் இருந்து வருகின்றன. அவற்றுக்குரிய அனைத்து வளங்களும் நிறைவற்ற நிலையிலேயே காணப்படுகின்றன. இவற்றுடன் எதிர் நீச்சலிட்டே வடபுலத்தின் கல்விச் சமூகமானது தமது அன்றாட செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக கடந்த ஒரு வருடகாலத்தில் கடுமையான அடக்கு முறைகளை வடபுலத்து கல்விச் சமூகம் எதிர் கொண்டு வந்துள்ளது. குறிப்பாக உயர் கல்வித்துறை மாணவர்கள் பல்வேறு நிலைகளிலும் அச்சுறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் எதிர் நோக்க வேண்டிய நிலைக்கு உளளாகி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடபுலத்தின் இரண்டு முக்கிய உயர்தரப் பாடசாலைகளின் அதிபர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர். சில ஆசிரியர்கள் அதிபர்கள் அச்சுறுத்தி மௌனமாக்கப்பட்டனர். வேறு சிலருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. மேலும் மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்டனர். இவற்றைத் தொடர்ந்து உயர் கல்வி மாணவர்கள் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டனர்.

கடந்த மே 4ம் திகதி சிவில் உடையணிந்த ஆயுததாரிகள் நான்கு உயர்தர வகுப்பு மாணவர்களை வீடுகளில் இருந்து கடத்திச் சென்றுள்ளனர். இவர்கள் யாழ்- பரியோவான், யாழ் இந்துக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களாவர். அதேவேளை யாழ்- பல்கலைக்கழகத்தினுள் இரவு புகுந்த ஆயுததாரிகள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துச் சென்றுள்ளனர். அப் பிரசுரத்தின் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் ஊழியர்கள் உள்ளிட்ட 323 பேருக்கு மிரட்டலும் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டிருந்தன. இதனால் வடபுலத்து கல்விச் சமூகமே பயப்பீதியில் உறைந்து போனது. இவை போதாதென்று சிலருக்கு கப்பம் கேட்ட கடிதங்களும் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவையாவும் அடையாளத்தை அறிந்து கொள்ள இயலாதவாறான வழிகளிலேயே செய்யப்பட்டு வருகின்றன. எனவே இதற்கு எதிராக யாழ். பல்கலைக்கழக சமூகமும் உயர்கல்வி மற்றும் பாடசாலைகளும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன. இருவார காலத்தின் பின் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் பகிஸ்கரிப்பு கைவிடப்பட்டது. ஆனால் கல்விச் சமூகத்தை இலக்கு வைத்துள்ள கொலை மிரட்டல்களும் கைது தடுத்து வைத்தல் முயற்சிகளும் முடிவுக்கு வந்து விட்டதாகக் கூற முடியாது. இவ் அச்சுறுத்தல் பயப்பீதி சூழலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றே மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர் விரும்புகின்றனர். ஆனால் அவர்களின் நியாயமான விருப்பங்களுக்கு ஆயுததாரிகளான எவர் தான் செவி மடுப்பார்கள் என்பதே பிரச்சினையாகும். மக்கள் மௌனமாக்கப்பட்டு ஆயுதங்கள் பேசி வருகின்ற சூழல் நீடிக்கிறவரை நீதி நியாயம் எவ்வாறு நிலை நிறுத்தப்பட முடியும். வடபுலத்து கல்விச் சமூகம் தனது கல்வி முயற்சிகளை எவ்வாறு சமூகமானதாக முன்னெடுக்க முடியும்.

# கொழும்பில் தமிழருக்கு எதிரான அச்சுறுத்தல்கள்!

கொழும்பு நகரில் திடீர்திடீரென இடம் பெறும் குண்டுவெடிப்புகளால் தமிழ் மக்கள் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். சுற்றிவளைப்பு தேடுதலில் கைது செய்யப்படும் தமிழர் மோசமான இனவன்மத்துடன் நடாத்தப்படுகின்றனர். விசாரணையில் கடுமையான வரையறைகள் பின்பற்றப்படுகின்றன. சிலர் சிறைகளுக்கும் தடுப்பு முகாம்களுக்கும் அனுப்பப்படுகின்றனர். பொலீஸ் நிலையங்களில் சோதனைச் சாவடிகளில் மிகவும் கீழ்த்தரமாக நடாத்தப்படுகின்றனர். வசை மொழிகளும் மிரட்டல்களும் ஏனைய துன்புறுத்தல்களும் தமிழர்கள் என்ற காரணத்தால் செய்யப்படுகின்றன.

இதன் மற்றொரு நடவடிக்கையாக கொழும்பு நகரில் உள்ள தங்கு விடுதிகளில் இருந்து வரும் தமிழர்கள் கொழும்பை விட்டு வெளியேற வேண்டும் எனப்பொலிசாரால் ஆணையிடப்பட்டுள்ளனர். அல்லாது விடில் அனைவரையும் தாங்களே வாகனங்களில் ஏற்றி சொந்த இடங்களுக்கு கொண்டு சென்று விடப் போவதாகவும் மிரட்டியுள்ளனர். கொழும்பு புறக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஐம்பதுக்கு மேற்பட்ட தங்கு விடுதி உரிமையாளர்கள் பொலீஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டே மேற்படி விடயம் கூறப்பட்டது. இதனால் தமிழ் மக்கள் மத்தியில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. மேற்படி விடயம் பிரச்சினையானதும் கூறப்பட்டவை அப்படி அல்லவென்று மழுப்பப்பட்டது. ஆனால் உள்நோக்கம் அவர்களது வாயிலிருந்து வந்ததை மறைக்க முடியாது.

இன்றைய அவசரகாலச் சட்டத்தை வைத்து பூனையை புலியாக்க மட்டுமன்றி பசுவையும் புலியெனக் காட்டவும் முடியும். தமிழ் மக்களுக்கு எதிராக இவ்வாறு தலைநகரில் அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விடுவது இது தான் முதல் தடவை அல்ல. தங்கு விடுதிகளில் இருந்து தமிழர்களை அப்புறப்படுத்தும் திட்டம் முன்பு சந்திரிகா ஆட்சிக்காலத்திலும் சில உயர் பொலீஸ் அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதன் நடைமுறையை சந்திரிகா அமுல்படுத்த அனுமதிக்கவில்லை. இப்பொழுது அதே அதிகாரிகள் அன்று செய்ய முடியாததை இன்று மகிந்த சிந்தனையின் கீழ் நடைமுறைப்படுத்த முயலுகின்றனர்.

ஏற்கனவே நாட்டில் அடிப்படை உரிமை மீறல்கள் தலைவிரித்தாடி வருகின்றன. அதன் மத்தியில் தமிழ் மக்களின் நடமாடும் உரிமை மட்டுமன்றி வாழும் உரிமையும் மறுக்கப்படுகிறது. கொழும்பில் பல்வேறு தேவைகளின் பொருட்டே தமிழ் மக்கள் தங்கியிருந்து வருகின்றனர். அரசாங்க உத்தியோக பூர்வத் தேவைகள் மருத்துவம் தொழில்கள் உட்பட வடக்கு கிழக்கின் அவல நிலை காரணமாகவும் பலர் கொழும்பில் தங்கி இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்து வருகின்றனர்.

எனவே அத்தகைய மக்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் பேரினவாத அடக்குமுறை நடவடிக்கைகளை கண்டித்து எதிர்ப்பது நீதி நியாயம் கோரும் சகலரினதும் கடமையாகும்.

# படுகொலைகள் ஆட்கடத்தல்களுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

நாட்டில் இடம் பெற்று வரும் படுகொலைகள். ஆட்கடத்தல்கள். காணாமல் போதல், தடுத்து வைத்தல் மற்றும் அடக்கு முறைகளுக்கு எதிராக மக்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் கடந்த மே 16ம் திகதி பகல் 12 மணிக்கு கொழும்பு லிப்ரன் சுற்று வட்டத்தில் நடைபெற்றது. சுமார் எண்ணூறு பேர் வரை கலந்து கொண்ட இவ் ஆர்ப்பாட்டம் இன்றைய மோசமடைந்துள்ள நிலையை எதிர்த்து அம்பலப் படுத்துவதாக அமைந்திருந்தது. பல்வேறு சமூக அமைப்புகளை உள்ளடக்கிய அவசரகால சட்டங்களைப் பற்றி அறிவூட்டும் ஒன்றியம் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடாத்தியது. இவ்வார்ப்பாட்டத்திற்கு முன்பு கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இவ் அமைப்பினர் ஒரு கருத்தரங்கை நடாத்தினர். இக் கருத்தரங்கின் நோக்கம் இன்றைய அவசர காலச் சட்ட விதிகள் பற்றி மக்களுக்கு விளக்கி அறிவூட்டுவதாகவும் அதன் பாதக விளைவுகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதாகவும் அமைந்திருந்தது. இக் கருத்தரங்கில் புதிய- ஜனநாயக கட்சியினதும் ஏனைய இடதுசாரிக்கட்சிகளினதும் தொழிற்சங்கங்களினதும் பிரதிநிதிகள் உரையாற்றினர். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அரசியல் சமூக அக்கறை யாளர்கள் இக் கருத்தரங்கிலும் அதன்பின் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டனர். "அவசரகாலச் சட்டத்தை ரத்துச் செய்" "இனவாத யுத்தம் வேண் டாம்" "காடைத்தன அரசியலைக் கண்டிப்போம்" "கொலைகளை நிறுத்து" "காணாமல் போவதை தடுத்து நிறுத்து" மனித உரிமை மீறல்களை நிறுத்து போன்ற முழக்கங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் முழங்கினர். சுமார் ஒரு மணி நேரம் இடம் பெற்ற மேற்படி ஆர்ப்பாட்டம் மக்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்டதுடன் உணர்வும் உத்வேகம் கொண்டதாகவும் காணப்பட்டது.



# வவுனியா பதிவாளர் அலுவலகத்தின் அவலம்

வவுனியா பிரதேச செயலகத்தில் மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கும் பொதுமக்களுக்கு அவை அவர்கள் கூறும் காலத்திற்குள் கிடைப்பது இல்லை. அதாவது பொதுமக்கள் அவசர தேவையின் பொருட்டு விண்ணப்பம் செய்யும் போது அவை மந்த கதியிலேயே செயற்படுகின்றன. பிறப்பு இறப்பு, விவாகப் பிரதிகளுக்கு விண்ணப்பம் செய்து பல மாதங்களாகப் பிரதிகள் கிடைக்காக நிலைமையும் இங்கு காணப்படுகின்றது.

மக்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்றக் கூடியவாறு நிர்வாகத்தை பரவலாக்கும் வகையில் பொது நிர்வாக அமைச்சர் பிரதேச செயலகங்களுக்கு பதிவு சேவைகள் பாரமளிக்கப்பட்டன. ஆனால் வவுனியா பிரதேச செயலகப் பதிவாளர் அலுவலக நடவடிக்கைகள் அதற்கு நேர் மாறான விளைவுகளையே காட்டிக் கொண்டு வருகிறது.

இது தொடர்பாக அதிகாரிகளிடத்தில் மக்கள் வினவும் பட்சத்தில் அதிகாரத் தோரணையிலும் அசட்டைத் தொனியிலும் பதில்கள் கிடைக்கின்றன. அது மட்டுமன்றி இது தொடர்பாக பிரதேச செயலகம் வவுனியா மக்களின் மேற்படி தேவைகளை புரிந்து கொள்ளவில்லையா? அல்லது பதிவுச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக வவுனியா பிரதேச செயலக பதிவாளர் அலுவல்கள் முடக்கப்பட்டுள்ளதா? என எதுவும் புரியாத நிலையில் வவுனியா பொது மக்கள் அல்லலுறுகின்றனர். இது பற்றி எவரும் கவனமெடுப்பதாகவும் தெரியவில்லை.

அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகள் மக்களுக்கு சேவை புரிவோர் என்றே கூறப்படுகிறது. மக்களது பணத்தில் சம்பளம் பெறுபவர்கள் இவர்கள். இத்தகைய மக்கள் சேவைக்குரிய அரசாங்க ஊழியர்கள் அரச திணைக்களங்களையும் கிடைத்த பதவிகளையும் ஏதோ தமது வீட்டுச் சொத்துப் போலவும் அதனை அனுபவிப்பவர்கள் போன்றும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு அதிகாரத்துடனும் அசட்டையீனங்களுடனும் நடந்து கொள்கிறார்கள். மக்கள் அலைச்சல் படுவதையோ அல்லற்படுவதையோ கவனித்தில் கொள்ளாத அதிகாரிகள் ஊழியர்கள் மக்களுக்கு சேவை செய்யாதவர்களே ஆவர்.

இன்றைய நெருக்கடிகளும் அவலங்களும் நிறைந்த வவுனியாச் சூழலில் பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் மக்களை இம்சிக்காது உரியவாறு செயல்பட வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

.பாதிக்கப்பட்ட மக்கள்

# யார் பொறுப்பு


கலை

கண் கட்டியும் கடத்திச் சென்றும்
கண்டதுண்டமாய் கழுத்து வெட்டுண்டு
அலங்கோலமாய் அங்கங்கள் சிதைந்து
அட்டதிக்கும் பிணக்கோலமாய்
அலங்கரிக்கும் நம் நாட்டில்
"பிணம் பொறுக்கும்" அமைச்சொன்றை
நிறுவவேண்டியதை யார் உணர்வார்,
அமைச்சுக்கள் நாட்டில் தாராளம்.
ஆனாலும் அதிவிசேட அமைச்சை
அமைக்கத் தவறியமைக்கு யார் பொறுப்பு?
நாளாந்தம் ஒவ்வொரு அபிவிருத்தி
மாதாந்தம் பற்பல திட்டங்கள்
பணிகள்பற்றி ஆரவாரமாய் பேசுவதும்
அங்கலட்சணமாய் தொலைகாட்சிகளில்
வலம் வந்து எரிச்சலூட்டுவதும்
உலக நாடுகளுக்குப் பயணிப்பதும்
வார்த்தை ஜாலங்களை அள்ளி வீசி
உல்லாசமாய் வலம் வருவதும்
எமக்கு வேண்டாத விடயங்கள்!
எமக்கு வேண்டிய தெல்லாம் ஒரு
"பாதுகாப்பான சுதந்திர வாழ்க்கை"!
இதைக் கேட்பதால் இந்த
பேனாமீது கூட பழிசுமத்தி
"பயங்கரவாதியென" சித்தரிக்கலாம்.
ஆனால்- நிச்சயமாக இந்த பேனா
"பயங்கரவாதியாக" இருக்கமுடியாது.
ஏனெனில்! அவர்களின்
கைகளில் எப்பொழுதும்
இருப்பதெல்லாம் ஆயுதங்கள் மட்டும் தான்!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சந்தாப் பணம் சேர்க்க தொழிற்சங்க தலைவர்கள் அறிக்கை விடுகின்றனர்



மலையக தொழிற்சங்கங்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் வீரம் வந்துவிட்டதாக யோசிக்கத் தேவை இல்லை. யூன் மாதம் தொழிற்சங்கங்களுக்கு அங்கத்தவர்களைச் சேர்க்கின்ற மாதமாகும். அதனால் இ.தொ.க. தலைவர் தொண்டமான் முதல் அவரைப்போன்றே மலையகத்தில் இருக்கும் புதிய தலைவர்கள் வரை மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் மீது மிகவும் கரிசனை கொண்டவர்கள் போன்று ஊடக அறிக்கைகளை வெளியிட்டுவருகின்றனர்.

மலையகத் தோட்டப்புறங்களை ஒரு சில நிமிடங்களிலேயே சுற்றி வளைக்கும் நிலையிலே மலையகத்தில் இராணுவ முகாம்கள் இருப்பதாக ஆறுமுகன் தொண்டைமான் கவலை தெரிவித்துள்ளார். மேல் கொத்மலைத் திட்டத்துடன் மலையகத்தில் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கும் என்றும் இராணுவ முகாம்கள் பல அமைக்கப்படுமென்றும் இதனால் சாதாரண மக்களுக்கு நெருக்கடி கள் ஏற்படுமென்று சுட்டிக்காட்டப்பட்ட போதெல்லாம் இ.தொ.கா மௌனம் காத்தது. மேல்கொத்மலைத் திட்டத்திற்கு ஆதரவு கொடுத்ததன் மூலம் தலவாக்கலை மண்ணை தாரை வார்த்துக் கொடுத்தனர். அத்திட்டத்தை எதிர்த்து உறுதியாக இருந்திருந்தால் இன்றைய கெடுபிடிகள் ஏற்பட்டிருக்கமாட்டாது என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இப்போது மக்களை ஏமாற்றுவதற்காக நீலிக் கண்ணீர் வடிப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

அத்துடன் தனியார்துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூபா ஐயாயிரத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்திருப்பது போன்று தோட்டத்தொழிலாளர்களுக்கும் ஆகக் குறைந்த ரூபா ஐயாயிரம் அடிப்படை சம்பளமாக இருக்கவேண்டுமென்று ஆறுமுகன் தற்போது கோரிக்கை விடுக்கிறார்.

ஆனால் தோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பளஉயர்வை கோரி பல பக்கங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றபோது அப்போராட்டங்களுக்கு எதிராக செயற்பட்டதுடன் மிகவும் குறைவான சம்பள உயர்விற்காக தோட்டக்கம்பெனிகளுடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டவர் ஆறுமுகனாவார்.

இன்னொரு பக்கத்தில் ம.ம.மு யின் தலைமை மலையகத்தில் ஆங்கிலமொழி அறிவை வளர்க்கப் போவதாக கூறிவருகிறது. தோட்டப்பகுதிகளில் இருக்கும் மிதமிஞ்சிய மதுபாவனையை தடுக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் புகைப்பிடித்தலுக்கு எதிராக பிரசாரம் செய்யப்போவதாகவும் அறிவித்து வருகிறது.

ம.ம.மு இலிருந்து பிரிந்து சென்று டி. அய்யாத்துரையுடன் இணைந்து தொழிலாளர் விடுதலை முன்னணி என்ற தொழிற்சங்கத்தை அமைத்த மத்திய மாகாண கல்வி அமைச்சராக இருக்கும் அருள்சாமி, அவர்களிலிருந்து பிரிந்து சென்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவராக இருக்கும் திகாம்பரம் போன்றவர்களும் மலையகத்தைத் தலைகீழாக மாற்றப் போவதாக அறிக்கைகள் மீது அறிக்கை விட்டுவருகின்றனர். இதற்கு மலையகத்திலுள்ள 'பத்திரிகை நிருபர்கள்' அவர்களுக்கே புரிந்த காரணங்களுக்காக பிரச்சாரம் கொடுத்து வருகின்றனர்.

இதைவிட மேலக மக்கள் முன்னணியும் அதன் தொழிற்சங்கமான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆட்களை சேர்ந்து வருகிறது. கொழும்பிலிருந்து மலையகத்திற்கு மலையகத் தமிழர்களால் தாம் அழைத்து செல்லப்பட்டதாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பிரபா கணேசன் கூறுகிறர்.

இவர்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் சாடினாலும் இவர்களின் நோக்கம் என்ன? தொழிற்சங்கங்களுக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதும் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளை உறுதி செய்து கொள்வதுமாகும். ஆனால் தொழிற்சங்கத்திற்கு ஆட்கள் சேர்ப்பதோ அல்லது வாக்குகள் பெறுவதோ தமது நோக்கம் இல்லையென்றும் உரத்து பேசி வருகின்றனர். இதுதான் சிரிப்பின் மேல் சிரிப்பாகும். இதுவரை ஏமாற்றி தொழிற்சங்க அரசியல் பிழைப்பு நடாத்திய இவர்கள் இப்போது சும்மா இருப்பார்களா?

மலையகத்தில் 3149 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டமைக் காக ஆறுமுகனுக்கு சிலர் பாரா ட்டு விழா நடத்துகின்றனர். சிலர் அருள்சாமிக்கு பாராட்டு விழா நடத்துகின்றனர். அந்நியமனங்களுக்காக நடைபெற்ற போரா ட்டங்களை ஏறக்குறைய எல்லோரும் மறந்து விட்டனர். அந்நியமனங்கள் அரசியல் வாதிகளால் கொடுக்கப்பட்ட கொடையாக எண்ணுகின்றனர். நியமனங்களை பெற்றுக் கொண்ட சிலர் தொழிற் சங்கத் தலைவர்களுக்கு தாளம் போடுபவர்களாகியுள்ளனர்.



இந்த தொழிற்சங்க வாதிகள் யார்? இவர்கள் என்ன அரசியல் செய்து வருகிறார்? மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள பொய்வாக் குறுதிகளை அள்ளிவீசுவதும் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அவர்கள் மக்களுக்கு கொடுத்த வாக் குறுதிகளை மறந்துவிடுவார்கள் மக்களும் மறந்துவிடுவர். தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பேரினவாத முதலாளித்துவ அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு அமைச்சர் பதவிகளை பெற்றுக் கொள்வர். அதற்கு ஆயிரத்தியெட்டு நியாயங்கள் கூறுவர். அவர்களின் சொந்த நலன்களுக்கு பாதிப்பு வருகின்றபோது அரசாங்கத்திலிருந்து விலகி எதிர்கட்சியுடன் இணைந்துகொள்வர். பிறகு ஆளும் கட்சியில் சேர்வார். இவ்வாறு பாராளுமன்ற அரசியலிலுள்ள எல்லாவிதமான பம்மாத்துகளையும் செய்வர். தற்போது மலையகத் தோட்டங்களுக்கு படை எடுத்துள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லோருமே ஆளும் வர்க்கத்தின் அடிவருடிகளாகவே உள்ளனர். ஆனால் மக்களை ஏமாற்ற அண்ணன் தம்பி அடிபிடி விளையாட்டை இடையிடையே நடாத்திக் கொள்வர். அவர்களிடம் உண்மையும், நேர்மையும் மக்கள் மீதான அக்கறை யும் இருப்பதாக எண்ணி மீண்டும் ஏமாறாது இருப்பது தான் மலையக மக்களின் கடமை. அதற்கு ஒரே வழி அரசியல் ரீதியில் சிந்தித்து செயல்பட முன்வருவதுதான்.

# தடுத்துவைக்கப்பட்டவர்களை சட்டத்தரணிகள் சந்தித்தனர்

கடந்த நான்கு மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் புதிய-ஜனநாயக கட்சியின் தோழர்கள் வெ. மகேந்திரன், ரா. ஜெயசீலன், ச. சுகேசனன், எஸ். கிருஸ்ணப்பிரியன், ச. மோகன்ராஜ், உட்பட 28 பேரிடமிருந்தும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை பெற ''பயங்கரவாத புலனாய்வு பிரிவுப்'' பொலிஸார் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி மஹிந்த ஜயவர்த்தன. இ. தம்பையா சோ. தேவராஜா, திலகவிஜேசிங்க ஆகிய சட்டத்தரணிகள் புதிய-ஜனநாயக கட்சியின் ஐந்து தோழர்களையும் புகையிர தொழிற்சங்கத் தலைவர் சரத்குமார பெர்ணான்டோ உட்பட ஏனைய ஏழுபேரையும் பூசா தடுப்பு முகாமில் சந்தித்த போது அத் தகவலைத் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் கேட்கப்படுவதாகக் கூறிய அவர்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் பற்றிய சட்ட நிலைமையை கேட்டுள்ளனர். குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களை வழங்கினால் அவை வழக்கு விசாரணைகளில் வழங்கியவர்களுக்கு எதிரான சாட்சியங்களாக பாவிக்கப்படும் என்று சட்டத்தரணிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

''பயங்கரவாத புலனாய்வு பிரிவினர்களின்'' பிரசன்னத்துடனேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சந்திக்க அனுமதிக்கப்பட்டதாகக் கூறிய சட்டத்தரணிகள் அது சுதந்திரமான சந்திப்பாக அமையவில்லை என்றும் தெரிவித்தனர். தற்போது அமுலில் இருக்கும் அவசர கால சட்ட (பயங்கரவாத எதிர்ப்பு) விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களை அவர்களின் உறவினர்களோ, சட்டத்தரணிகளோ சுதந்திரமாக சந்தித்து கலந்துரையாடுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. குடும்ப உறவினர்கள் கிராம உத்தியோகத்தர்களின் அத்தாட்சிப் பத்திரங்களை சமர்ப்பித்தே தடுத்து வைக்கப்பட்டவர்களை சந்திக்க முடிவதுடன் ஒரு சில நிமிடங்களே அவர்களுடன் கதைக்க முடிகிறது. அது சுதந்திரமாக கதைக்க முடியாதவாறு பயங்கரவாத புலனாய்வு பிரிவை சேர்ந்தவர்கள் சூழ்ந்திருந்து வருகின்றனர்.

மேற்குறிப்பிட்ட சட்டத்தரணிகள் குறிப்பிட்ட தடுத்து வைக்கப்பட்டவர்களை சந்திக்க அனுமதிக்கும் படி சில மாதங்களுக்கு முன்பே பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் பயங்கரவாத புலனாய்வு பிரிவினருக்கும் எழுதியிருந்த போதும் ஏப்ரல் மாத கடைசியிலேயே அனுமதிப்பதாக எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. சந்திப்பதற்கு திகதி குறித்து ஒதுக்கப்பட்டது மே மாத கடைசியிலேயே ஆகும்.

மேற்படி சட்டத்தரணிகள் சந்தித்த தடுத்து வைக்கப்பட்டவர்கள் சில நாட்கள் கொழும்பிலுள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் காலி நகருக்கு அருகிலிருக்கும் பூசாவிலுள்ள தடுப்பு முகாமிற்கு மாற்றப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்னும் எந்தவொரு நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நடைமுறையிலுள்ள அவசரகால சட்ட விதிகளின் படி எந்தவொரு நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படாமல் ஆகக்கூடியது ஒரு வருடத்திற்கு தடுப்பு முகாமிலோ பொலிஸ் நிலையத்திலோ தடுத்து வைக்கப்படலாம். பயங்கரவாத தடை சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஒருவர் 18 மாதங்களுக்கு தடுத்துவைக்கப்படலாம்.

பூஜா முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் அடிக்கடி கொழும்பிற்கோ, வேறு இடங்களுக்கோ அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும் அறிய முடிகிறது.

கடந்தமாதம் 28 ஆம் திகதி சட்டத்தரணிகள் சந்தித்துவிட்டு வந்த பிறகு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் சிலர் கொழும்பிலுள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டவர்களிடமிருந்து உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு குறையாக தரத்திலுள்ள அதிகாரியின் முன்பே குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருப்பின் அது ஒப்புதல் வாக்கு மூலமாக ஏற்றுக்கொள்ளப்படும் என்று அவசரகால ஒழுங்குவிதிகள் கூறுகின்றன.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் சிலரின் சார்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் கைதும், தடுத்துவைப்பும் சட்டத்திற்கு முரணாவதால் அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அம்முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அம்முறைப்பாடுகள் குறித்து 'பயங்கரவாத புலனாய்வு பிரிவு' கடிதங்களை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அனுப்பியிருந்த போதும் அவை விபரமான பதில்களாக இல்லை.

அதனையடுத்து அம்முறைப்பாடுகள் பற்றிய விசாரணைக்காக மூன்று தினங்கள் குறித்து புலனாய்வு பிரிவிலிருந்து எவருமே விசாரணைக்காக சமூகமளித்திருக்கவில்லை. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பதிலளிக்காமல் விடுவதோ, விசாரணைகளுக்கு சமூகமளிக்காமையோ இலங்கையின் உயர்நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகும் என்று ம.உ. ஆணைக்குழு அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் ப.பு பிரிவினர் விரிவான பதில்களை கொடுக்கவில்லை என்பதுடன் விசாரணைக்கான மூன்று தினங்களிலும் ஆணைக் குழுவின் முன்னிலையில் சமூகமளித்திருக்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 14 யூன் 2007 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 103
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், எரிவாயு போன்றவற்றின் விலைகள் அடிக்கடி உயர்த்தப்பட்டு வருகின்றன. அதனால் பஸ்போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. இன்னும் ஒரு மாதத்திற்குள் மீண்டுமொருமுறை அவை அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பால்மா வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கோதுமை மா, பாண் போன்ற வற்றின் விலைகளும் அண்மைக்காலமாக அடிக்கடி உயர்த்தப்பட்டுள்ளன. அரிசி, சமையலுக்கு பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகள், மரக்கறி, மீன், இறைச்சி போன்றவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டே வந்துள்ளன. இலங்கையில் தற்போது எந்தவொரு கட்டுப்பாட்டு விலையும் கிடையாது. நியாயமான விலைகள் பற்றி தீர்மானிக்க ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றபோதும் அக்குழுவினால் அத்தியாவசியப் பொருட்களுக்கு கூட நியாயமான விலைகளை விதிக்க முடியவில்லை.

1977 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட தாராள பொருளாதாரத்தின் விளைவாக அத்தியவசியப் பொருட்கள் கட்டாய விலைகளிலேயே விற்கப்பட வேண்டும் என்ற நிலை மாற்றப்பட்டது. இன்றைய உலகமயமாதல் சூழ்நிலையில் இறக்குமதியாளர்களும் விற்பவர்களுமே பொருட்களின் விலைகளை தீர்மானிக்கின்றனர். உலக சந்தையில் வெளிநாடுகளில் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதால் இலங்கையிலும் அதிகரிக்கப்படுவதாக பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் தொடர்ந்து கூறிவருகின்றன.

இலங்கையில் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவு பொருட்களின் உற்பத்தி நடவடிக்கைகள் சீரழிக்கப்பட்டுள்ளன. குறைந்த செலவில் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக விதை, உரம் போன்றன குறைந்த விலைகளில் கிடைப்பதில்லை. அதனால் விவசாயிகள் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்தியை ஏறக்குறைய நிறுத்தியே விட்டனர்.

பொருட்களின் விலை உயர்விற்கு யுத்தத்தை காரணமாக காட்டவும் ஆளும் வர்க்கம் தவறுவதில்லை. சில அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் கடந்த பத்துவருடங்களில் நூறு வீதமாக அதிகரித்திருப்பதை அவதானிக்க முடியும். இவை முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் கையாலாகத்தனத்தினதும் வங்குரோத்து தனத்தினதும் வெளிப்பாடாகும். மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைந்த நிலையில் வைத்திருப்பதற்கு நடைமுறையில் இருக்கும் பொருளாதார முறைமை இடம் கொடுப்பதில்லை. அப்பொருளாதார முறைமையை மாற்றினால் ஆளும் வர்க்கத்தின் இருப்பு பாதிக்கப்படும்.

இவ்வளவும் நடந்தேறிக் கொண்டிருக்கும் வேளையில் அங்குமிங்கும் சம்பள உயர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்ற போதும் நியாயமான சம்பள உயர்வுகள் வழங்கப்படுவதாகவும் இல்லை. அதனால் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் மக்கள் கடும் கஷ்டங்களை எதிர்நோக்கின்றனர். குறிப்பாக உழைக்கும்

**மக்களால் வாழ்க்கைச் செலவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை!**

மக்களே கடுமையான பாதிப்புகளை அனுபவிக்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டுமென்றோ கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டுமென்றோ மக்கள் சார்பில் தாக்கமான கோரிக்கைகள் முன்வைக்கப்படுவதாக இல்லை. அவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் அவை பயங்கரவாதத்திற்கு உதவும் நடவடிக்கைகளாகவே காட்டப்பட்டு அடக்கப்படும். அவ்வாறு அடக்குவதற்கு அரசாங்கத்திற்கு உள்ளும் புறமும் இருக்கும் பேரினவாதிகள் துணையாக இருப்பார்கள். மக்களின் நியாயமான கோரிக்கைகள் யாவும் யுத்தத்தின் பேராலும் பயங்கரவாதத்தின் பேராலும் மறுக்கப்பட்டு வருகின்றன.

பாராளுமன்ற அரசியலில் இருக்கும் ஐ. தே. கட்சியையும் (அரசுடன் இணைந்து கொண்டவர்கள் தவிர) தமிழ் தேசிய கூட்டமைப்பையும் தவிர எல்லாக்கட்சிகளும் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே இருக்கின்றன. ஐ.தே. கட்சி வாழ்க்கை செலவு அதிகரிப்பு பற்றி சிலநேரங்களில் பேசினாலும் அது அடக்கிய வாசிப்பே.

பாராளுமன்றத்திற்கு வெளியில் இருக்கும் இடதுசாரி, ஜனநாயக சக்திகள் மிகவும் மோசமான அடக்கு முறைகளுக்கு முகம் கொடுத்துவருகின்றன. அவற்றினிடையே ஆரோக்கியமான ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் இல்லை. இதனால் அரசாங்கம் சௌகரியமாக விலைகளையும், கட்டணங்களையும் உயர்த்தி செல்கிறது.

இலங்கையின் இலவசக் கல்வியும், இலவச சுகாதார சேவையும் சீரழிக்கப்பட்டுள்ளன. அவற்றை முற்றாக தனியார் வர்த்தகத்திற்கு உட்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும்படி அரசாங்கம் சர்வதேச நிறுவனங்களாலும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளாலும் வற்புறுத்தப்படுகிறது. இது தாராள பொருளாதாரத்தினதும், உலகமயமாதலினதும் விளைவாகும். எமது நாட்டின் தன்னிறைவுபொருளாதாரத்தை தாராள பொருளாதாரமும் உலகமயமாதலும் சீரழித்துவிட்டன. யுத்தமும் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. இதனால் ஏற்பட்ட நெருக்கடிகள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும்.

உலகமயமாதலினாலும், யுத்தத்தினாலும் ஆட்சியை நடத்தும் ஆளும் வர்க்கம் அவற்றை இல்லாமல் செய்யப்போவதில்லை. அதனால் அவை அதிகரித்துச் செல்வதற்கான வாய்ப்புகளே அதிகமாகும். அவற்றிலிருந்து முற்றாக மக்களை பாதுகாப்பதானால் அரசியலில் பாரிய அடிப்படை மாற்றங்கள் தேவை. அம்மாற்றங்கள் ஒரேயடியாக ஏற்படப் போவதில்லை. அவை நீண்டகால நடவடிக்கைகளுக்கு ஊடாகவே சாத்தியமாகும். மக்கள் தற்போது அனுபவிக்கும் வாழ்க்கைச்சுமைகளிலிருந்து ஓரளவிற்காவது விடுபட அத்தியாவசியப் பொருட்களினது விலைகளும் அத்தியாவசிய சேவைகளினதும் கட்டணங்களும் குறைக்கப்பட வேண்டும். அவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கப்படவும் வேண்டும்.

அவற்றை வென்றெடுப்பதற்கு மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளே வழிமுறைகளாகும். அவற்றை முன்னெடுக்க இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக சக்திகளின் பங்களிப்பும், தலைமையும் இன்றியமையாததாகும்.

ஆசிரியர் குழு

# இலங்கை நாடு யாருக்குச் சொந்தம்

**வெகுஜனன்**

"இலங்கை நாடு சிங்களவருக்கே சொந்தமானதாகும். தமிழர்களுக்கு இங்கு தாயகம் கிடையாது. சுய நிர்ணய உரிமை கோருவதானால் அவர்கள் தமிழகத்துக்குச் சென்று அதனைக் கோரட்டும். சிறுபான்மையினருக்கு வழங்கப்பட வேண்டும் என ஐ.நா. சபையினால் கூறப்பட்டிருப்பதிலும் பார்க்க கூடுதலான உரிமைகள் தமிழர்களுக்கு சமஷ்டி சுயாட்சி என்பனவற்றின் மூலம் அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. இந் நாடு சிங்களவர்களுடைய நாடு என்பதும் பௌத்தமதம் தேசிய மதமாக்கப்பட வேண்டும் என்பதே ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடாகும்" இவ்வாறு அதன் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்தின தேரர் அவ் இயக்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் பற்றிய விளக்கத்தை தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இத்தகைய நிலைப்பாடு ஜாதிக ஹெல உறுமயவிடம் மட்டுமன்றி ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற பிரதான சிங்கள ஆளும் வர்க்கக் கட்சிகளிடமும் இருந்து வரும் உட்கிடக்கையாகும். ஆனால் அவற்றை வெளிப்படுத்தும் வகைகள் வேறுபட்டிருக்குமே தவிர உள்ளார்ந்த நடைமுறைகள் மேற் கூறியவற்றை மையப்படுத்தியவையாகவே இருந்து வந்துள்ளன. அத்தகைய நிலைப்பாட்டின் எதிர் விளைவே இன்றைய கொடிய யுத்தமும் போராட்டமுமாகும். இச் சந்தர்ப்பத்தில் தான் இந்த நாடு யாருக்குச் சொந்தம் என்ற கேள்வி எழுப்பப்பட வேண்டியுள்ளது. இந் நாடு சிங்களவர்களுக்கு மட்டும் உரியது என்ற பேரினவாதிகளின் தர்க்கம் அடிப்படையற்றது என்பதை வரலாற்று வளர்ச்சியின் வழியாக நோக்க வேண்டி உள்ளது.

இன்றைய சிங்கள தேசிய இனத்தின் மூதாதையர்கள் இலங்கைக்கு வருவதற்கு ஆயிரம் வருடங்களின் முன்பாகவே இங்கு மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் திராவிட வழி வந்த மானிடராவர் என்பது வரலாற்றாசிரியர்களின் கூற்றாகும். அத்தகையவர்களில் தமிழர்களின் மூததையர்கள் அக்கால சூழலிக்கு ஏற்ப வாழ்ந்திருக்கிறார்கள். பின் வந்த சிங்களவர்களின் மூதாதையர்கள் அப்பழங்குடி மக்களோடு இணைந்து கலந்து வாழ்ந்து பெருகியிருக்கிறார்கள். இவ்வாறான மக்கள் இலங்கை பூராவும் பரவி வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் காலவோட்டத்தில் சிற்சில பிரதேசங்களில் செறிவாகவும் நிரந்தரமாகவும் தத்தமது வாழ்வை நிலைப்படுத்திக் கொண்ட னர். நீர் நில வளங்களும் தட்பவெப்ப நிலைகளும் உற்பத்தி முறைமைகளும் உறவுகளும் இன மொழி மத அடிப்படையில் மக்கள் செறிவாக வாழும் சூழலை உறுதிப்படுத்திக் கொண் டன.

இந்தியாவில் இருந்து காலத்திற்குக் காலம் வந்து குடியேறி இங்குள்ள மக்களோடு கலந்து கொள்வதில் பல்வேறு மக்களும் இருந்தனர். தென்னிந்தியாவில் இருந்து வந்த திராவிடத் தமிழர் வடக்கு கிழக்கில் குடியேறினர். அவ்வாறே முஸ்லீம்களும் வந்தனர். தென்னிந்தியர்களில் ஒரு பிரிவினர் சிங்களவர்களோடும் கலந்து கொண்டனர். ஆதலால் சிங்கள இனம் மேலும் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராகினர். காலச் சூழலும் உற்பத்தி உறவுகளும் நிலவுடைமைச் சமூக வளர்ச்சியை ஏற்படுத்தின. அதன் ஊடாக பௌத்த மதத்தின் வருகையானது சிங்கள மொழியின் வளர்ச்சிக்கும் சிங்கள மக்களின் நாகரீக மேம்பாட்டிற்கும் வழி வகுத்தன. அவ்வாறே தமிழ் மக்களும் எண்ணிக்கையில் இரண்டாம் இடத்தில் இருந்தவாறே தமது இன மொழி மத வளர்ச்சிகளை நிலவுடைமை உற்பத்தி உறவுகள் மூலம் சமூக வளர்ச்சியாகக் கொண்டிருந்தனர். சிங்கள மக்கள் அனுராதபுரத்திலும் அதற்கு அப்பாலான தென் பிராந்தியங்களிலும் மலையகப் பிரதேசங்களிலும் நிலைத்து வாழ்ந்து வந்தது போன்று தமிழர்கள் வடக்கு கிழக்கில் நிலைத்து நீடித்து வாழ்ந்து வந்தனர். முஸ்லீம் மக்கள் வடக்கு கிழக்கிலும் தெற்கின் கரையோரங்களிலும் நிலைபெற்றனர். பின் கொலனிய காலத்தில் மலையகத்தில் இந்திய வம்சாவழித் தமிழர்கள் தமது வாழ்வை நிலைப்படுத்திக் கொண்டனர்.

கால அளவுகளில் வேறுபாடுகள் காணப்படினும் கடந்த மூவாயிரம் ஆண்டுகளில் இலங்கையில் மனிதர்கள் மனித இனம் என்ற உயர் நிலை வாழ்வுக்கு ஊடாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிறார்கள் என்பதே அடிப்படை வரலாற்று உண்மையாகும். ஆனால் அந்நியர்களின் வருகையும் பிரித்தானியரின் பிரித்தாளும் சூழ்ச்சியும் தேசிய இனங்களின் வளர்ச்சியும் முதலாளித்துவ ஆட்சி அதிகாரப் போட்டியும் இன மத மொழி பிரதேச வேறுபாடுகளை வளர்த்து முரண்பாடுகளை மோதல்களாக முன்நிறுத்திக் கொண்டன.

இத்தகைய இனமத மொழி பிரதேச முரண்பாடு என்பது கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் தொட்டே சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்டு வந்தவைகளாகும். அவற்றின் படிமுறை வளர்ச்சியில் பெரும் தேசியவாத அகங்காரம் வளரவளர தமிழர்கள் மத்தியில் குறுந்தேசியவாதம் என்பது ஆண்டபரம்பரை என்ற பழைமைவாதப் பெருமிதத்துடன் வளர்க்கப்பட்டது. அதுவே பேரினவாத அகங்காரத்திற்கு எதிர் நிலையாக நிறுத்தப்பட்டது. பேரின வாதத்தின் வளர்ச்சியானது தமிழ்த் தேசிய இனத்தை மட்டுமன்றி முஸ்லீம்கள் மலையகத் தமிழர்கள் மத்தியிலும் தேசிய உணர்வுகளையும் தோற்றுவித்தன. அதன் மூலம் அவை இலங்கையின் தேசிய இனங்கள் என்ற நிலைக்கும் வளர்ச்சி கண்டுள்ளன.

அதேவேளை பறங்கியர் மலேயினர், வேடர்கள் ஆகிய சமூகங்கள் இன்றும் தமக்குரிய தனித்துவத்துடன் வாழ்ந்தும் வருகின்றனர். வேடர்கள் எண்ணிக்கையில் இரண்டாயிரத்திற்கும் மூவாயிரத்திற்கும் உட்பட்டவர்கள். ஆனால் அவர்களில் மூவாயிரம் ஆண்டுகளின் தொடர்ச்சியைக் காணமுடிகிறது. அவர்கள் இந் நாட்டின் பழகுடி மக்களாவர் என்பது மறுப்பதற்கில்லை.

இவ்வாறான வரலாற்று வளர்ச்சிப் போக்கினைக் காணும் போது இன்று இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் ஆகிய நான்கு தேசிய இனங்களும் பறங்கியர் மலேயினர், வேடர் ஆகிய சிறுபான்மைச் சமூகங்களும் இருந்து வருவதைக் காண முடிகின்றது.

எனவே இலங்கை யாருக்குச் சொந்தம் என்ற கேள்வியை எழுப்பினால் அது மேற்கூறிய அனைத்து மக்களுக்கும் சொந்தமானது என்பது நிரூபிக்கப்படுகின்றது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் ஒரு பௌத்த பிக்குவால் தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப எழுதப்பட்ட மகாவம்சத்தினை கையில் வைத்துக் கொண்டு அதன் ஊடாக இலங்கையின் வரலா ற்றை நோக்கும் பார்வை நேர்மையான விஞ்ஞான பூர்வ வரலாற்றாசிரியர்களால் நிராகரிக்கப்பட்ட ஒன்றாகும். அவ் வாறு நிராகரிக்கப்படும் மகாவம்சக் கட்டுக் கதைகள் திரிபுகளில் தொங்கி நின்றே ஜாதிக ஹெல உறுமயவும் ஏனைய பேரினவாதிகளும் இலங்கை சிங்களவர்களின் நாடு மட்டுமே என்று வாதிட்டு வருகின்றனர்.

இந்த நாட்டின் உண்மையான சொந்தக்காரர்கள் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் மற்றும் வேடர்கள் பறங்கியர் உள்ளிட்ட அனைத்து உழைக்கும் மக்களேயாவர். ஆண்டபரம்பரையில் வந்த உயர் வர்க்க மேட்டுக்குடியினரின் நிலபுலச் சொத்தல்ல இலங்கை. அத்தகையவர்கள் இலங்கை தனி ஒரு இனத்திற்கும் மதத்திற்கும் உரியது எனச் சொந்தம் கொண்டாடமுடியது.

எனவே முழு இலங்கை மக்களுக்கு இந்நாடு சொந்தம் என்ற உண்மையும் யாதார்த்தமும் நிலை நிறுத்தப்படுவதற்கு சமூக மாற்றத்திற்கான உழைக்கும் மக்களின் விடுதலைப் போராட்டமே வழி வகுக்கக் கூடியதாகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சுயாட்சிக்கான அதிகாரப் பங்கீடும் சுதந்திரக் கட்சி யோசனைகளும்


நமது அரசியல் நிருபர்

**சிறிலங்கா சுதந்திரக்கட்சியின** மாவட்டசபைகள் யோசனைகள் முன்வைக்கப்பட்டவுடன் அனைத்துக் கட்சிகள் கூட்டத்திற்கு சமர்பிக்கப்பட்ட நிபுணர்குழு அறிக்கைகள் பற்றிய ஆரவாரங்கள் ஓய்ந்துவிட்டன. அனைத்துக் கட்சிகளின் கூட்டத்திற்கு பொறுப்பான சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் திஸ்ஸ வித்தாரணவும் செய்வதறியாது இருக்கிறார். அரசியலமைப்பு விவகார அமைச்சர் டீ.ஈ.டபிள்யூ குணசேகரவும் மௌனமாகி உள்ளார்.

மாவட்ட சபைகளின் யோசனைகளை முன்வைத்ததன் மூலம் தேசிய இனப்பிரச்சனை என்று ஒன்று இருப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தற்போதைய தலைமைத்துவம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச ரோமிற்கு சென்றிருந்தபோது இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை இல்லை என்று தெரிவித்திருந்தார். இங்கு அக்கட்சியின் யோசனைகள் மே 30ல் வெளியிடப்பட்டபோது ஜனாதிபதி நாட்டில் இருக்கவில்லை. உலக கிண்ணத்திற்கான கிரிக்கட் போட்டியைப் பார்ப்பதற்காக அவர் மேற்கிந்திய தீவிற்கு சென்றிருந்தார். அவர் அங்கிருந்து நாடு திரும்பும் போது வெளிநாட்டு பத்திரிகையொன்றுக்கு அளித்த செவ்வியில் "எல்லோரும் அதிகாரப்பங்கீடு பற்றிப் பேசுகிறார்கள். நான் அபிவிருத்தி பற்றியே கூடிய அக்கறை கொள்கிறேன். பெரிய பிரதேசத்தினை அதிகார அலகாகக் கொண்டு அபிவிருத்தி செய்ய முடியாது. மாவட்ட அலகுகளையும் கிராம அலகுகளையும் கொண்டு அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க முடியும். அதனாலேயே சுதந்திரக் கட்சி மாவட்ட அதிகார அலகை முன்வைத்துள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நியாயமான அரசியல்தீர்வு யோசனையை அவரோ அவரது கட்சியோ முன்வைக்கப்போவதில்லை என்பது தெளிவாகிறது.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை இருப்பதாகவும் அதனை தீர்ப்பதற்கு அதிகாரப்பங்கீடு அவசியமென்றும் ஏற்றுக் கொண்டிருந்தார். அவர் பிராந்திய சபைகளே அதிகாரப் பங்கீட்டு அலகாக இருக்க வேண்டும் என்று கூறினார். அவர் பத்து வருடங்களாக ஹெலஉறுமயவும் அதிருப்திகளை வெளியிட்டிருந்தது. ஹெலஉறுமயவின் தேசிய அமைப்பாளரும் சுற்றுச்சூழல் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க இலங்கை சிங்களவர்களுடைய நாடு. சிங்களவர்களே இங்கு வாழ வேண்டும். தமிழர்களுக்கு அதிகாரத்தை பங்கிட்டுக் கொடுத்துவிட்டு சிங்களவர்களின் அபிலாஷைகளுக்கு எதிராக செயற்படக்கூடாது என்று தெரிவித்துள்ளார். இவ்வாறான நிலைப்பாட்டுடன் இணங்கும் வகையிலேயே சுதந்திரக்கட்சியின் யோசனைகளும் திருத்தங்களுடன் முன்வைக்கப்பட்டுள்ளன.



**தமிழ் மக்களின் அபிலாஷைகளை மறுத்து ஒற்றையாட்சியையும் பௌத்த மேலாண்மையையும் வற்புறுத்தும் யோசனைகளாகும்.**

சுதந்திரக்கட்சியின் மாவட்டசபை யோசனைகளை சில அமைச்சர்கள் கூட ஏற்கவில்லை. அவர்கள் இந்திய முறையிலான அரை சமஷ்டி முறையை ஆதரிக்கின்றனர். வடக்கும் கிழக்கும் மக்கள் அபிப்பராய வாக்கெடுப்பின் மூலம் இணைக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டுள்ளனர்.

ஐ.தே.கட்சி சமஷ்டி முறையை ஏற்பதாகவே அறிவிக்கிறது. அதுவும் வடக்கு கிழக்கு இணைப்பை மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்க வேண்டும் என்று கூறுகிறது.

இனமேலாதிக்கத்திற்கும் இன ஒடுக்கலுக்கும் உட்பட்டிருக்கும் தேசிய இனத்திற்கு போதியளவு அதிகாரங்களை வழங்கி அதனது சுயாட்சியை உறுதிப்படுத்தாவிட்டால் இன மேலாதிக்கமும் இன ஒடுக்கலும் தொடரும். தமிழ் மக்களின் போராட்டங்களை ஆயுதப்போராட்டமாக வளர்வதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் மீதான இன மேலாதிக்கம் இன ஒடுக்கல் இராணுவ ஒடுக்கலாக மாறியதாகும். அந்த இராணுவரீதியான ஒடுக்கலை நிறுத்தி இன மேலாதிக்கத்திலும் இன ஒடுக்கலிலிருந்து தமிழ் தேசிய இனத்திற்கு சுயாட்சியும் அதற்கான அதிகாரப் பகிர்வும் வழங்கும் வகையில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

அந்தத்தீர்வு அதிகாரங்களை மத்தியில் மட்டும் குவித்து வைத்திருக்கும் பெரும் இன ஆதிக்கம் கொண்ட ஒற்றையாட்சி முறைக்குள் சாத்தியமாகாது. மத்தியிலும் அதிகாரங்கள் இன அடிப்படையில் பகிரப்பட வேண்டும் அவ்வாறே பிராந்தியங்களுக்கும் பகிரப்பட வேண்டும். இதனை சுதந்திரக்கட்சியின் மாவட்டசபை யோசனைகளோ ஜே.வி. பியினது நிலைப்பாடோ, ஹெலஉறுமயவின் பிரதேசசபை கிராமசபை யோசனைகளோ உறுதி செய்யமாட்டாது.

இவ்வாறான யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் முடியாது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் முடியாது. நியாயமான அரசியல் தீர்வை அடிப்படையாகவும் இலக்காகவும் கொள்ளாத சமாதான நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் தரப்பிலான போராட்டங்கள் முடிவிற்கு வராது. குறிப்பாக ஆயுதப்போராட்டமும் முடிவிற்கு வராது. அரசியல் தீர்வை முன்வைக்காமல் தமிழ் மக்களின் கோரிக்கைக்கும் போராட்டங்களுக்கும் எதிராக இராணுவரீதியான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கும்போது யுத்தம் நீடிக்கப்பட செய்யும். அதனால் மேலும் மோசமான அழிவுகளே ஏற்படும்.

சுதந்திரக்கட்சியின் யோசனைகள் தமிழ்மக்களின் ஆகக் குறைந்தளவான அபிலாஷைகளையாவது பூர்த்தி செய்வதாக இல்லை. அதனால் யுத்தத்தை நிறுத்த சிறிதளவேனும் பங்களிப்பு செய்யமுடியாது.

சமஷ்டிமுறையே உகந்தது என்று பேசிவந்த சில என்.ஜி.ஓ காரர்கள் குறிப்பாக தேசிய சமாதானப்பேரவையைச் சேர்ந்த ஜெகான் பெரேரா சுதந்திரக்கட்சியின் மாவட்டசபை யோசனைகள் புலிகள் இயக்கத்தின் கடும்போக்கிற்கு எதிரான தந்திரோபாயமான அணுகுமுறை என்று கூறியுள்ளார். அதாவது மாவட்ட சபையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக சுதந்திரக் கட்சி விட்டுக் கொடுப்புகளை செய்து பெரிய பிரதேசத்திற்கு அதிகாரத்தை வழங்கும் நிலைமைக்கு மாறலாம்

# மலையகத்தின் படித்தவர்களுக்கு சமூக விடுதலைச் சிந்தனை அவசியம்!

சிவராமன்

இலங்கையில் 200 வருட வரலாறு கொண்ட மலையக சமூகம் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகமாக இருந்து வருகிறது. இன்னும் வீடில்லாத சுகாதார வசதியில்லாத கல்வி வசதியில்லாத சமூகமாகவே இருக்கிறது. 1960 களுக்குப் பின்னர் தோட்டப்புறங்களுக்கு எட்டத்தொடங்கிய இலவசக்கல்வியால் இன்று கல்விகற்ற சமூகமொன்றை அவதானிக்க முடியாது. அவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் ஆசிரியர்களாகவும் மிகச் சிறிய எண்ணிக்கையிலான தொழில்சார்ந்தவர்களும், சிறிய வர்த்தகங்களில் ஈடுபடுபவர்களும் ஒரு சிலர் அரசாங்க நிர்வாகத்துறையிலும் இருக்கின்றனர். இதனால் தோட்டத்தொழிலாளர்களிடையே சில வகை வர்க்கத்தட்டுக்கள் தோன் றியுள்ளன.

அந்த வர்க்கத்தட்டுக்களின் தோற்றமே மலையகசமூகத்தின் வளர்ச்சியாக காட்டப்படுகின்றது. அத்தட்டுக்கள் தொழிலாளர்வர்க்க அடிப்படையுடன் இருக்காமல் அதிலிருந்து தூரே விலகிச் செல்வதையே அபிவிருத்தி என்றும் கூறப்படுகிறது. இந்தப்போக்கு ஊக்குவிக்கப்படுவதையே வளர்ச்சிப் போக்கென்றும் சிலர் கூறுகின்றனர். மிகவும் பின்தங்கிய சமூகத்தில் மேற்படி மாற்றங்கள் பாரியதான தோற்றத்தை கொடுத்தாலும் பின்தங்கிய நிலைமையில் அச்சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் அவதானிக்கப்பட வேண்டும். கல்விகற்றவர்கள் அடைந்துள்ள வளர்ச்சியால் முழு சமூகமும் பயனடைந்துள்ளதா அல்லது அதேபோன்று முழு சமூகமும் வளர்ச்சியடைய முடியுமா என்பது பற்றி தெளிவில்லாமல் போதனைகளிலும் பிரசாரங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றன. கல்வியால் சுய ஈடேற்றம் அடைந்தவர்கள் அதுவே சமூக வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் வழியென்று கூறுகின்றனர். அவர்கள் அதற்குரிய பிற்போக்கு அரசியலுக்கும்

தொடர்ச்சி 11ம் பக்கம்

**தொழிலாளர்கள் வேறு தொழில்களில் ஈடுபட்டால் தான் சிறந்தளவாவது** கூடியவரு மானத்தை பெற்றுக் கொண்டு வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்பது முதலாளிவர்க்க நியதி. அதாவது தொழில்களை செய்தால் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்பது முதலாளித்துவத்தின் போதனை. அதேவேளை தொழிலாளர் வர்க்கமின்றி முதலாளி வர்க்கம் அசைய முடியாது என்பதும் அதனை சுரண்டிக் கொழுக்காவிட்டால் முதலாளித்துவம் இயங்காது என்பதும் விஞ்ஞானபூர்வமான உண்மை. அதனால் தொழிலாளர்களுக்கு முதலாளி வர்க்க எண்ணங்களும், ஆசைகளும் ஊட்டப்பட்டாலும் அனைத்து தொழிலாளர்களும் முதலாளிகளாக முடியாது. அது முதலாளித்துவ சமூக இயக்கத்திற்கு முரணானதுமாகும்.

தொழிலாளர்கள் தொழிலாளர் வர்க்கமாக இருந்து உரிய வாழ்க்கைத்தரத்தை நிலைநாட்டிக்கொள்ளும் சமூக பொருளாதார அமைப்பே தொழிலாளர் வர்க்கத்தின் இலக்காகும். அந்த சமத்துவமான சமூகம் என்ற இலக்கை அடைவதற்குரிய அரசியல் சமூக ஆதிக்கம் தொழிலாளர் வர்க்கத்திற்கு கிடைக்கும் வரை முதலாளித்துவ சமூக அமைப்பின் "அபிவிருத்தி அல்லது பொருளாதார" முறைமைக்குள் போராடிக் கொண்டு தொழிலாளர் வர்க்கம் வாழ வேண்டியதாக இருக்கிறது.

அதன் விளைவாக தொழிலாளர் வர்க்கத்தில் மிகவும் சிறுபான்மையானோர் சுயமேலாண்மை அடைவதும் அவர்களின் வர்க்கத்தட்டில் மாறுபாடு ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகிறது. அது முறைசார கல்வியினூடாகவும் உத்தியோகங்கள், பதவிகள் பட்டங்கள் மூலமாகவும் ஏற்படலாம். இந்த மாற்றத்தை அடைவதனாலேயே தொழிலாளர் வர்க்கம் வளர்ச்சியடைய முடியும் என்று போதிப்பவர்கள் முதலாளித்துவ சமூகத்தை கட்டிக்காப்பவர்களாவர்.

இந்த மாற்றத்தினூடாகத் தொழிலாளர் வர்க்கத்திற்கு பலம் சேர்க்கப்பட்டு ஏற்றத்தாழ்வுள்ள முதலாளித்துவ சமூக அமைப்பை தூக்கி எறியும் போராட்டங்களை முன்தள்ளுவது என்பது இன்னொருவகையான சிந்தனை ஆகும்.

தொழிலாளர் வர்க்கத்தில், பிற்படுத்தப்பட்டோரில் முதலாளித்துவ முறைசார் கல்வியால் ஏற்படுத்தப்படும் மாற்றம் முதலாளித்துவத்தை பாதுகாப்பதற்காகவன்றி அதனை எதிர்க்க பயன்படுத்தபட வேண்டும் என்பது சமூகமாற்றத்தினை கருத்திற் கொண்டு செயற்படுவர்களின் கருத்தாகும். இதற்கு தொழிலாளர் வர்க்கத்திலுள்ள கல்வியறிவையும் தகைமைகளையும் பெற்றவர்களின் பங்கு மிகவும் அவசியமானது.

இந்த அடிப்படைக் கருத்துகளுடன் மலையகத்தமிழ் சமூகத்தின் சமூக அசைவியக்கத்தில் படித்தவர்களின் பங்களிப்பு பற்றி அவதானிப்பது நல்லது. தோட்டத்தொழிலாளர் சமூகமாக இருந்த மலையகத் தமிழ் தேசிய இனம் இன்று தோட்டத் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்டு பல வர்க்கங்களை கொண்ட சமூகமாக மாறியிருக்கிறது. அதன் பிற்படுத்தப்பட்ட நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படாவிட்டாலும் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 13

பேராசிரியர் சி.சிவசேகரம்

## தன்மானமும் மானக்கேடும்

"மயிர் நீப்பின் வாழாக்
கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்"

என்ற குறள் ஏறத்தாழ எல்லா நிலவுடைமைச் சமூகங்களிலும் நிலவுடைமைக்கு முந்திய சமூகங்களிலும் மேல் தட்டு வர்க்கங்களுக்கும் வற்புறுத்தப்பட்டு வந்த தன்மானத்தின் உத்தமப்படுத்திய பார்வையெனலாம். எனினும் எது மானத்திற்குரியது எது மானக்கேடானது என்பது பற்றிச் சமூகங்களுக்கு இடையில் மட்டுமில்லாமல் சமூக வர்க்கங்கட்குள்ளும் வேறுபட்ட மதிப்பீடுகள் உள்ளன. நிலவுடைமைச் சமூகங்களில் ஒவ்வொருவர்க்கப் பிரிவிற்கும் கடமைகள், உரிமைகள் என்று வெவ்வேறாக விதிக்கப்பட்டுள்ளன. நடத்தை விதிகளில் ஏற்கப்பட்ட பொது நடத்தை விதிகளுக்குப் புறம்பாக ஒவ்வொரு சமூகப்பிரிவிற்குமுரிய நடத்தை விதிகள் இருந்துள்ளன.

கடமை தவறுவதை அரசு தண்டிப்பதோ எசமானன் தண்டிப்பதோ ஒரு விடயம். தன்னைத்தானே தண்டிப்பது மானம் தொடர்பான பிரச்சனை. போரிற் புறமுதுகிடாமை இந்தியத் துணைக்கண்டத்தின் பல பகுதிகளில் வற்புறுத்தப்பட்ட தன்மானந் தொடர்பான ஒரு விழுமியம். சங்ககால வீரத்தாய்க்கு புறமுதுகிட்ட மகனின் அவமானம் தனது அவமானமாகத் தெரிவது பற்றி நாம் பெருமையுடன் பேசுகிறோம். அது போன்ற தன்மானம், வீரயுகத்தின் பின்பு மாற்றம் பெறுகிறது. அது எல்லாருக்குமுரிய தேவையாக இல்லாது போயிருப்பதற்கான சான்றுகளில் ஒன்று போரிற் தோற்றவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டமை. அந்த அவமானம் சாவுக்கு வழிகாட்டவில்லை. எனினும் உயர் அதிகாரிகள் அமைச்சர்கள் படைத்தளபதிகள் போன்றவர்களிடம் அதிகம் அரச விசுவாசம் எதிர்பார்க்கப்பட்டுள்ளதைப் பல சமூகங்களிலுங் காணுகிறோம்.

எதிரிகளிடம் சரணடைவதை விடச் சாவது மேல் என்ற கருத்து நிலவுடைமைச் சமூகங்களின் மேல் தட்டு வர்க்கங்களிடையே நீண்ட காலமாக நிலைத்து வந்துள்ள ஒன்று. எனினும் இது எல்லாரிடமும் ஒரே விதமாக எதிர் பார்க்கப்பட்டது என்று கூற இயலாது.

ஆணாதிக்கம் பெண்ணை ஆணின் உடைமையாகக் கொள்ளுகிறது. நிலவுடைமைச் சமூகத்தில் பண்ணையடிமைகளும் அவர்களது குடும்பத்தினரும் நிலப்பிரபுவுக்குச் சொந்தம். ஒரு நிலப்பிரபுவின் ஆடு மாடுகள் முதலாகப் பண்ணையடிமைகளும் நிலப்பிரபுவின் மனைவியரும் வைப்பாட்டியரும் பிறரால் கவர்ந்து கொள்ளப்பட்டாலோ அவமதிக்கப்பட்டாலோ அதை ஒரு நிலப்பிரபு தனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருத இடமுண்டு. இது நிலப்பிரபு தனது உடைமைகளை நேசிப்பதாலல்லாமல் தனது ஆதிக்கத்திற்குச் சவால் விடப்பட்டதாகக் கருதுவதால் ஏற்படுகிற கோபம் தொடர்பானது. இது போர்கட்கும் தனிப்பட்ட முறையிலான சவால் கட்கும் வழி செய்துள்ளது. தமது கவுரவத்துக்காக இருவர் வாட்சண்டையிட்டு வந்த மரபு ஐரோப்பாவில் 19ம் நூற்றாண்டில் கைத் துப்பாக்கிச் சண்டையாகத் தொடர்ந்து வந்துள்ளது.

யப்பானிய நிலவுடைமைப் பண்பாட்டின் கவுரவக் கோட்பாடு யப்பான் முதலாளிய முறைக்கு மாறிய பின்பும் தொடர்ந்து வந்ததற்கு யப்பானிய முதலாளியம் நிலவுடைமைச் சமூக விழுமியங்கள் பலவற்றைத் தனக்கு வசதியாக எடுத்தாண்டமை ஒரு முக்கிய காரணமாகும். சமுராய் போர் வீரர்கள் தமது கவுரவத்துக்கு இழுக்கு ஏற்பட்டால் பகிரங்கமாகவே தமது வயிற்றைக் கட்டாரியாற் கிழித்துத் தற்கொலை செய்வது யப்பானியப் பண்பாட்டிற் சென்ற நூற்றாண்டின் இரண்டாம் உலகப் போரின் முடிவு வரை ஏற்கப்பட்ட சமூக நடவடிக்கையாக இருந்தது. கவுரவத்துக்கான தற்கொலை பிற சமூகப்பிரிவினராலும் ஏற்கப்பட்ட நடத்தையாக இருந்து வந்து இப்போது பெருமளவுங் குறைந்து விட்டது.

இந்தியக் குறுநில மன்னரின் பட்டத்தரசியும் பல சமயம் பிற மனைவியரும் தாம் எதிரியாற் பிடிபடக் கூடிய சூழ்நிலைகளிற் தற்கொலை செய்வதும் மானத்தின் அடிப்படையிலே வற்புறுத்தப்பட்டு ஏற்கப்பட்ட நடத்தையாகிற்று. இது உடன்கட்டை ஏறுவதுடன் சில ஒற்றுமைகளை உடையது என்பதையுங் குறிப்பிட வேண்டும்.

அடங்காமையைப் போன்று சொற்பிறழாமையும் மிகவும் வற்புறுத்தப்பட்டு வந்த ஒரு விழுமியம் எனலாம். எழுதா உடன்படிக்கைகள் பலவற்றுக்கு ஒருவர் தனது சொல்லுக்குக் கட்டுப்படுவதே ஆதாரமாயிருந்தது. முதலாளியத்தின் தோற்றத்தின் பின்பும் சொல்லின் வலிமை நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்துள்ளது. ஏலங்களின் போது ஒரு விலையைக் குறிப்பிட்டு ஏலம் கேட்கக் கைச் சைகைகளே பயன்படுகின்றன. தவறுதலாக ஒரு சைகை காட்டினாலும் அதை மதிக்க வேண்டிய கடமை ஏலங் கேட்பவருக்கு உண்டு. தவறினால் அதன் பின்பு கவுரமிழந்த அவர் எந்த எலத்திலும் பங்கு பற்ற இயலாது போய்விடும். இந்த விதமான வார்த்தை தவறாத செயற்பாடுகள் பங்குச் சந்தைகளிலுங் காணப்பட்டன. பதினைந்து இருபது ஆண்டுகள் முன்பு வரை லண்டன் பங்குச் சந்தை பெருமளவும் கனவான்களின் கவுரவமான நடத்தையை ஆதாரமாகக் கொண்டு இயங்கக் கூடியதாக இருந்து வந்தது. எனினும் கனவான்களிடையிலான கவுரமான உடன்படிக்கைகள் கள்வர்களிடையிலும் சூதாடிகளிடையிலுமானதை விடக் கீழிறங்கிய பின்பு வெளியிலிருந்து கட்டுப்பாடுகளைக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது.

சொல்லுக்குக் கட்டுப்படுவது என்பது இந்திய நிலவுடைமைச் சூழலில் உருவான வணிக சமூகங்களையும் கட்டுப்படுத்திய ஒன்று தான். இதன் எச்சங்களை இன்னமும் நமது சூழலிற் காணலாம். எனினும் கொலனியத்தின் வருகை நிலவுடைமைச் சமூகத்தின் அதிகார வர்க்கத்தின் கவுரவக் கோட்பாட்டைப் பெருமளவும் மாற்றியுள்ளது. கொலனிய ஆட்சி உள் நுழைந்த காலத்தில் அதை எதிர்த்து நின்ற குறுநில மன்னர்களும் அவர்கட்கு ஆதரவான நிலப்பிரபுக்களும் இருந்தனர். தன்மானம் பற்றிய அவர்களது பார்வை தம்மை அந் நிய ஆதிக்கக் காரர்கட்குக் கீழ்ப்ப டுத்த மறுக்கும் நோக்கை வெளிப் படுத்தியது. இத்தகையவர்க ளின் எதிர்ப்புணர்வுக்காகவே இன்றைய ஏகாதிபத்திய எதிர்ப்புச் சூழலில் அவர்களை மெச்சவும் போற்றவும் நேருகிறது. எனினும் கொலனி ஆதிக்கம் தன்னை நிலை நிறுத்திய பின்பு அதனுடன் சமரசம் செய்தே நிலப்பிரபுக்களால் நிலைத்திருக்க முடிந்தது. அவர்களை விடவும் கொலனியவாதிகளுக்குச் சேவகம் செய்து தம்மை மேம்படுத்திக் கொண்ட புதிய நிலப்பிரபுக்களும் உருவானார்கள். அவர்களுடைய கவுரவக் கோட்பாடுகள் அந்நிய ஆதிக்கத்திற்கு உட்படாத ஒரு சூழலில் இருந்து வந்தவற்றிலிருந்தும் வேறுபட்டவை.

அந்நிய ஆதிக்கவாதிகள் முன்னே தம்மைத் தாழ்த்திக் கொண்ட அவர்கள் தமக்கிடையேயுள்ள போட்டிகளிலும் தமக்குக் கீழ்ப்பட்டவர்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வதிலுமே தமது நிலப்பிரபுத்துவக் கவுரவத்தைப் பேணினர்.

ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் தன்மானம் என்பது நிலப்பிரபுக்களதும் அவர்களது சுற்றத்தினரதும் அதிகாரத்தின் விளைவான உரிமை மீறல்கட்குட்பட்டு வாழ்க்கை பற்றிய அவர்களது புரிதலினதும் சமுதாயத்தின் ஆதிக்கச் சிந்தனையினதும் வழிநடத்தலால் தீர்மானிக்கப்படுகிறது. அவர்கள் தமது தன்மானத்திற்கு ஏற்படுகிற இழுக்கை மறுக்கவும் அதற்கு எதிர்வினையான நடவடிக்கை எடுக்கவும் பல வேறு கட்டுப்பாடுகள் இருந்து வந்துள்ளன.

முதலாளியத்தின் வருகை பல வகைகளில் உழைக்கும் மக்கள் மீதான சமூகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்திய போதும் நிலவுடைமைச் சமூகச் சிந்தனையின் பிடி இன்னமும் முற்றாகத் தளரவில்லை. அதேவேளை முதலாளியம் உழைக்கும் மக்களுடைய சுதந்திரத்தை மட்டுப்படுத்துகிறது. அவர்களது சமூக இருப்பை உறுதியற்றதாக்குகிறது. எனவே தனிமனித அடிப்படையில் உழைப்பாளரது தன்மானம் என்பது வலுவான செயற்பாட்டுக்கு இட்டுச் செல்வது கடினம்.

அது ஒரு சமூகப் பிரிவினது இன்னுஞ் சரியாகச் சொன்னால் ஒரு வர்க் கத்தினது ஒட்டுமொத்தமான சுயமரியாதை உணர்வாக அடையாளம் பெறுகிற போது அது சமூக விடுதலைக்கான ஒரு பரிமாணத்தைப் பெறுகிறது.

தனிமனிதச் சிந்தனைக்குட் சிறைப்படாமல் அதை உணர்வு பூர்வமான வர்க்கச் சிந்தனையாக உழைக்கும் மக்களின் சிந்தனை விருத்தி பெறும் போது மானம் பற்றிய கருத்தாக்கங்கள ஒரு சமூகம் முழு வதினதும் சுயமரியாதையையும் உள்ளடக்குகின்றன. மானம் என்பது மனித சமத்துவமும் அதை மதிப்பதும் பற்றிய ஒன்றாக மறுவார்ப்புப் பெறுகிறது. இவ்வாறான மாற்றங்களை நாங்கள் வெகுசனப் புரட்சிகர எழுச்சிகளின் போதும் போராட்டங்களின் போதும் கண்டிருக்கிறோம். அந்த உணர்வை என்றெ ன்றைக்குமானதாகப் பேணுவதிலேயே ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத் தின் விடுதலையும் விடிவும் தங்கி யுள்ளது.

கிழக்காசியச் சமூகங்களில் எதிராளியை முழுமையாக அவமானத்திற்கு உட்படுத்துவதைத் தவிர்க்கிற ஒரு மரபு அரசியல், வணிகம் போன்ற துறைகளில் நடக்கும் பேரங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. "முகங்கோணாமற் பாதுகாப்பது" என்று இதைச் சொல்லலாம். ஒரு விவாதத்தின் முடிவில் ஏற்கப்படுகிற முடிவுகளில் இரு தரப்பினரும் தமக்கு வெற்றி என்று சொல்லக் கூடிய விதமாகப் பலவீனமான பகுதியினருக்கு எதையாவது விட்டுக் கொடுப்பது அல்லது முடிவில் வந்தடைகிற தீர்மானம் இருதரப்பினரதும் மனத்திருப்தியை வெளிப்படுத்துகிற விதமாக வரையப்படுவது, கிழக்காசிய நாடுகளில் அவமானம் என்பது தாங்க இயலாத ஒன்றாக இருந்து வந்ததன் பின் விளைவு என்று நினைக்கிறேன்.

**மானம் என்பது மனித சமத்துவமும் அதை மதிப்பதும் பற்றிய ஒன்றாக மறுவார்ப்புப் பெறுகிறது. இவ்வாறான மாற்றங்களை நாங்கள் வெகுசனப் புரட்சிகர எழுச்சிகளின் போதும் போராட்டங்களின் போதும் கண்டிருக்கிறோம்.**

---

தொடர்ச்சி 7ம் பக்கம்

*சுயாட்சிக்கான*

6ம் பக்க தொடர்ச்சி

என்பதே அவரின் எதிர்பார்ப்பு. இது ஒரு கபடத்தனமான பார்வையாகும். இத்தகையவர்கள் சில காலத்திற்கு முன்பு முன்வைத்த அதிகாரப் பகிர்வு பற்றிய வார்த்தைகளை நினைவு கூர்வது தேவையானதாகும்.

ஏற்கனவே நாட்டில் மாகாண சபைகளே அதிகார அலகுகளாக இருக்கின்றன. அதற்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவது பற்றியும் வடக்கையும் கிழக்கையும் எவ்வாறு இணைப்பது என்பது பற்றியும் சிந்திப்பதே அரசியல்தீர்வு காணப்பதற்கான அடிப்படையாகும். அதி தீவிரவாத பேரினவாத நிலைப்பாடு கொண்ட ஜே.வி.பி, ஹெலஉறு மய என்பவற்றுக்கு இணங்கிச் சென்று தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. நிச்சயமாக தமிழ் மக்களுக்கு ஒற்றையாட்சி பாதகமாகவே இருந்துள்ளது. சிங்கள மேலாதிக்கவாதிகள் மேலும் மேலும் பலமடையவே ஒற்றையாட்சி துணைபுரிந்துள்ளது. ஒற்றையாட்சி என்றவுடன் சிங்கள மக்களுக்கு பூரணபாதுகாப்பு இருப்பது போன்று ஒரு தோற்றப்பாட்டை கொடுத்துள்ளது. அந்த ஒற்றையா ட்சி முறையால் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழ் இலங்கை நாடும் அதன் வளங்களும் முற்றாக அந்நிய சக்திகளால் கபளீகரம் செய்யப்படுவதை தடுக்க முடியவில்லை. ஒற்றையாட்சி மக்களின் கைகளுக்கு அதிகாரம் சென்றடை வதையும் ஒப்பிட்டு ரீதியில் பரிபாலானம் ஜனநாயகப்படுத்தப் படுவதையும் மறுக்கிறது. இந்நிலை சாதாரண சிங்கள மக்களுக்கும் பாதகமானதாகும்.

அதற்காக சமஷ்டி முறை எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகாது. ஆனால் ஒப்பீட்டு ரீதியில் தேசிய இனங்களுக்கு அதிகாரத்தை செய்ய வழிவகுக்கிறது. அதன் மூலம் இன மேலாதிக்கத்திலும் இன ஒடுக்கலிலிருந்து தேசிய இனங்கள் பாதுகாக்கப்படுவதற்கான அடிப்படைகள் ஏற்படுகின்றன.

இதைப்பற்றியெல்லாம் கருத்திற் கொள்ளப்படாமலே சுதந்திரக்கட்சியின் மாவட்டசபைகள் அமைந்துள்ளது. அந்நிலைப்பாட்டை வலுப்படுத்துவது போன்றே ஹெலஉறுமய பிரதேச சபைகளையும் கிராமசபைகளையும் முன்மொழிந்துள்ளது. இவர்களின் இந்த நிலைப்பாடு தமிழ்மக்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படக் கூடாது என்பதுடன் சிங்கள மக்களுக்குரிய ஜனநாயகத்தையும் அதிகாரப்பகிர்வையும் மறுப்பதாகவே அமைந்துள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுவதை உயர்த்தி நிற்கும் சிங்கள ஆளும் வர்க்கம் சாராம்சத்தில் சிங்கள உழைக்கும் மக்களை ஏமாற்றி திசைதிருப்பி ஒடுக்கி வருகின்றது என்பதே உண்மையாகும்.

இந்நிலையில் தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டு பேரினவாதத்துடன் பேசி தமிழ் மக்களுக்கான அதிகாரப்பங்கீட்டை பெற்றுக் கொள்ள முடியும் என்று நம்பி அரசாங்கத்துடனும், ஜனாதிபதியுடனும் நெருக்கமாக இருக்கும் சில தமிழ்த் தலைவர்களின் விருப்பம் எவ்வாறு நிறைவேற்றப்படும்? முஸ்லீம் மலையகத் தலைமைகள் இந்நிலையை ஏற்றுக் கொள்கிறார்களா? இதனால் அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தினால் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக எதனையும் செய்ய முடியாது என்பது தெளிவாகிறது. அத்துடன் அனைத்துக் கட்சிகளின் கூட் டம் காலத்தை வீணடிக்கும் கடந்தகால நடவடிக்கை போன்ற தொன்றேயாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலகமயமாக்கலின் மறுபெயர்

மூலம்: அய்ஜாஸ் அஃமத்
தமிழில்: அஸ்வத்தாமா

**உலக மயமாக்கல் என்பது முக்கியமாக** சில சமயங்களில் தவறுதலாகப் பொருள் தரக்கூடிய சொற்களில் ஒன்றாக உள்ளது. அதற்குப் பதிலாக அதைச் சுருக்கமாக "சாம்ராச்சியம்" எனக் கூறலாம். அது ஒருவகையில் சரியான பொருளைத் தரக்கூடும். இன்னும் "அமெரிக்க சாம்ராச்சியம்" என்றும் கூறலாம். அது மிகத் துல்லியமான பொருளைத் தரக்கூடும். ஆயினும் ஒரு வகையில் இதுவும் தவறுதலாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. ஏனெனில் வரலாற்றில் முதன்முறையாக நிதியால், ராணுவத்தால், நிறுவனங்களால், தத்துவங்களால் மேலாதிக்கம் செய்கின்ற, அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் தலைமை தாங்கப்படுகிற மிக நிர்வாணமான முறையில் மூலதனத்தால் உலகமயமாக்கப்பட்ட சாம்ராஜ்யம் ஒன்று நம்மிடையே தோன்றியுள்ளது. எனினும் நம் நோக்கத்தை நிறைவேற்றப் போதுமானது என்பதால், மிகப் பிரபலமான அந்த "உலகமயமாக்கல்" என்ற வார்த்தையையே நாம் தொடர்ந்தும் பயன்படுத்தலாம்.

முழுமையாகவே அமெரிக்காவால் மேலாதிக்கம் செலுத்தப்படுகிற இந்த உலகம், வேறு வார்த்தைகளில் கூறுவதானால் மூலதனம், சாம்ராஜ்யம் ஆகியவற்றின் வரலாற்றில் புதிய கட்டமாகும். இந்தப் புதிய சாம்ராஜ்யம் தனித்தன்மைகள் குறித்து பிறகு பேசலாம். இப்போது கேட்க வேண்டிய கேள்வி, இவையெல்லாம் எப்படித் தொடங்கின? என்பதே. இக்கதை 1914-ன் யுத்தத்திலிருந்து இவ்விவாதத்திற்கு பொருந்துகிற நான்கு விதமான விளைவுகளுடன் தொடங்குகிறது.

அந்த யுத்தம், காலனியாதிக்கம் கலைவதற்கான நிகழ்வுகளை இறுதியில் ஏற்படுத்தியது. இருந்தாலும் காலனியாதிக்கம் கலைந்து போவதற்கான முக்கிய அலை இரண்டாம் உலக யுத்தத்திலேயே தொடங்கி, பின்னர் சில ஆண்டுகள் வரை தொடர்ந்து அடித்தது. இரண்டாவது விடயம், ஏற்கனவே உலகின் முதன்மையான தொழிற்றுறை சக்தியாக விளங்கிய அமெரிக்கா அச்சமயத்தில் தொழில் உற்பத்தி, செல்வச் செழிப்பு, ராணுவ பலம் போன்றவற்றால் ஒப்புயர்வற்ற நிலையை எட்டியது. மூன்றாவது, போல்ஷ்விக் புரட்சியானது முதல் சோசலிச அரசை உருவாக்கி, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களுக்கு பெருமளவு ஆற்றலை அளித்தது. சோவியத் யூனியன் தனிமைப்படுத்தப்பட்ட போதிலும், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னரே ஏனைய சோசலிச அரசுகள் உருவானபோதிலும், சோசலிசம் என்பது முதலாளித்துவத்திற்கு ஒரு சவாலாக விளங்கியது.



இறுதியாக, அமெரிக்காவுக்கு இணையான விதத்தில், பிரித்தானியாவையும், பிரான்சையும் விட சக்தி படைத்த ஒரு தொழிற்துறை நாடாக ஜெர்மனி உருவான விடயம். இந்த ஜேர்மனி முதல் உலக யுத்தத்தில் தோல்வியடைந்து பின்னர் நாஜிகளால் உலகையே கைப்பற்றும் அளவிற்கு எழுச்சி பெற்றும் கூட இரண்டாம் உலக யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஜேர்மனியின் தோல்வி தடுமாறிக் கொண்டிருந்த பிரித்தானிய, பிரான்ஸ் சாம்ராஜ்யங்களின் தன்மைகளை அமெரிக்காவே கைப்பற்றுவதை உறுதிப்படுத்தியது. மீண்டும் உலகின் ஒப்புயர்வற்ற அந்த நிலையை யாருக்கும் விட்டுக் கொடுக்கும் நிலை அமெரிக்காவிற்கு உருவாகவேயில்லை. இடதுசாரிக் கருத்துக்களுடன் ஒத்து போகிறவர் எனக் கூறமுடியாத கோரே விடால் (Gore Vidal) (ஜாக்குலின் கென்னடியின் உறவினர்) என்னும் அமெரிக்க நாவலாசிரியர் தன்னுடைய இந்த நிலையைத்தக்க வைத்துக் கொள்ள 1946-ம் ஆண்டு முதல் அமெரிக்கா 7.1 டிரில்லியன்டாலர்கள் செலவழித்திருப்பதாகக் கூறுகிறார். தன்னுடைய ஆளுகைக்கு கீழேயே ஜப்பானையும், மேற்கு ஐரோப்பாவையும் சுதந்திரமாக நடைபெறும் தேசவிடுதலைப் போராட்டங்களை ஒடுக்கவும், கம்யூனிசத்தை எதிர்க்கவும், மூன்றாம் உலக நாடுகளில் வெப்பத்தோடும், குளிரோடும் கூடிய போர்களை நடத்தி 20 மில்லியன் மக்களை பலியெடுக்கவும் அமெரிக்காவிற்கு இந்த முதன்மை நிலை தேவைப்பட்டது. இத்தகைய பரந்த பின்னணியில்தான் அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்கும் இடையில் நீண்டகாலம் நீடித்த முடிவுறாத மோதல் உருவாயிற்று. இந்த மோதலில் எவ்வாறு சமமில்லாத ஒரு நிலை இருந்தது என்பதை விளக்க மேலே குறிப்பிட்ட அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் நீண்டகாலம் நீடித்த தணியாத மோதல் உருவாயிற்று. இந்த மோதலில் எத்தகைய சமமில்லாத நிலை இருந்தது என்பதை விளக்க மேலே குறிப்பிட்ட அமெரிக்காவின் நிலையோடு சோவியத் யூனியனின் நிலையை ஒப்பிடுவது பொருத்தமானது. முதல் உலக யுத்தத்திற்கு பிறகு ஏற்பட்ட ஏராளமான பொருட்சேதமும், புரட்சிக்குப் பிந்தைய உள்நாட்டுப் போரும், அதைத் தொடர்ந்து சோவியத் யூனியன் மீது மேற்கத்திய நாடுகளின் கூட்டணி நடத்திய ஆக்கிரமிப்புகளும், அந்நாட்டுப் பொருளாதாரத்தை யுத்தத்திற்கு முந்தைய பொருளாதாரத்தின் அளவில் 10வீதமாக மாற்றி யது. இருந்தாலும் இரண்டு யுத்தங்களுக்கிடையே இந்தப் பூமியின் எந்தவொரு நாட்டின் பொருளாதாரத்தைவிட சோவியத் யூனியனின் பொருளாதாரம் மிக வேகமாக வளர்ந்தது. ஆனால் இரண்டாவது உலகமகாயுத்தம் அதன் பொருளா தார பலத்தில் 25% யையும் நாட்டு மக்களில் 25 மில்லியன் மக்களையும் அழித்தது. இரு யுத்தங்களிலும் அமெரிக்கப் பொருளாதாரம் ஆண்டிற்குப் 10% வரை வளர்ச்சியடை ந்தது. மேலும் அதன் மண்ணில் எந்த யுத்தமும் நடைபெற வில்லை. இரண்டாம் உலக யுத்த காலத்திலிருந்து மற்ற பகுதிகளைச் சேர்ந்த வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்தின் அடிப்படைக்கான ஆதாரங்களும் இரண்டாம் உலக யுத்த காலத்திலிருந்து அமெரிக்காவின் தயவிலேயே இருந்தன.

சமீப காலத்தில் உருவான முழு அளவிலான உலகமயமாக்கல் தோன்றியதற்கு காரணமான சில முன்நிபந்தனைகளைப் பற்றி சுருக்கமாகக் கூறமுடியும்.

**1. பிரிந்து கிடக்கும் பழைய கொலனிய சாம்ராஜ்யங்களிலிருந்து அது வெளிவருவதன் மூலம் உலக முதலாளித்துவம் ஒரு தனி மேலாதிக்கத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.**

**2. இதைச் செய்து முடிக்க அதற்கு ஏற்ற தயார் நிலையிலுள்ள ஒரு ஒப்புயர்வற்ற அதிகாரம் தேவை.**

**3. சோசலிச அரசுகள் கலைக்கப்பட்டு அவை மீண்டும் முதலாளித்துவச் சந்தைக்குள் கொண்டுவரப்படுவதன் மூலம் உலகம் உண்மையிலேயே உலகமயமாக வேண்டும்.**


**4. முன்னாள் கொலனிகள் முதலாளித்துவச் சந்தையை ஆழமாக்கும் வகையில் தொழில்மயமாக வேண்டும்.**

**5. உலக அளவில் முதலாளியச் சந்தைகளை ஒருங்கிணைக்கவும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு தொழில் மூலதனத்தைக் கொண்டு செல்லவும் புதிய வகையிலான தொழில்நுட்பம் தேவை.**

**6. அதுபோல, உலகம் முழுவதும் பெருகி வருகிற பெருமளவில் மறைந்திருந்து தாக்கு கிற சிறிய எதிரிகளை சக்தி வாய்ந்த முறையில் வேகமாகத் தாக்கியழிக்கக் கூடிய புகழ் வாய்ந்த "தானியங்கிப் போர்க்களம்" போன்ற தொழில் நுட்பங்கள் தேவை.**

**7. கடைசியாக, எல்லாவித அரசுசாரா தன்னார்வ அமைப்புகளிலிருந்து துவங்கி அறிவு ஜீவிகளின் பின் நவீனத்துவம் வரை வரலாற்றின் முடிவு என்ற தத்துவக் கண்ணோட்டத்துடன் ஒருங்கிணைந்த ஒரு சிக்கலான வலைப்பின்னல் போன்ற அமைப்பு ஒழுக்க ரீதியில் நெருக்கடி கொடுக்கவும் தத்துவ அடிப்படையில் அங்கீகாரம் வழங்கவும் கலாசார ரீதியில் ஏற்கச் செய்யவும் தேவைப்படுகிறது.**

மூலதனத்தின் நேரடி ஆதிக்கத்திலிருந்து இந்த உலகின் எந்தவொரு முக்கிய இடமும் தப்பவில்லை என்கிற வகையில், சோவியத் யூனியன் கலைந்து போனதும், சீனா உலகச் சந்தையோடு முழுமையாக ஐக்கியமடைந்ததும், எல்லைகளற்ற வகையில் இந்த சாம்ராஜ்யம் உலகம் முழுவதும் விரிந்துபரவ வழிவகுத்தது. சந்தை பரவலாக விரிவுபடுத்தப் பட்டதோடு தீவிரமாக ஆழப்படுத்தப்பட்டது. எனவே முன்னாள் காலனிகள் ஓரளவு தொழில்மயமாவதும், உலகின் பெரும்பகுதி விவசாயம் பணப் பொருளாதார அடிப்படையில் மாறுவதும் பணச்சந்தைக்கல்லாத விவசாய உற்பத்தி உலகில் குறைந்து வருவதும் உலகம் முழுவதும் ஒரேவித மதிப்பு விதியின் கீழ் திறமையாக கொண்டு வரப்பட்டதைக் குறிக்கிறது. ஆயினும் இந்த விதியானது உலகம் முழுவதும்



அந்தந்தப் பகுதிக்கான மற்றும் தேசத்திற்கான ஊதியங்கள் மற்றும் விலைகள் என்ற அளவிலேயே நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

வாஷிங்டன் டி. சி. இந்த சாம்ராஜ்யத்தின் தலைநகராகும். இது நியூயார்க் நகரத்தோடு சேர்ந்து, அமெரிக்காவின் தலைநகராக மட்டுமின்றி, ஏகாதிபத்திய இறையாண்மைக்கான முக்கிய நிறுவனங்களின் தலைமையிடமாகவும் உள்ளது. வால் வீதி (Wall Street), சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund), உலக வங்கி (World Bank), உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organisation), ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இதுபோன்ற பல நிறுவனங்கள் உலகத்தை நிதி மூலதனம் மூலமாக ஒன்றிணைப்பது என்பது குறைபாடுகள் நிறைந்த சுயமான ஒன்றோடொன்று பூட்டப்பட்ட தேசிய சந்தைகளை ஒன்றிணைப்பதல்ல. மாறாக பூஜ்ய கால அளவுக்குள் முக்கியமான நிதிநிலை குறித்த முடிவுகளை உலகின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு அனுப்பி வைக்கும் திறமை பெற்ற தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு தனிப்பட்ட அமைப்பை ஒருங்கிணைப்பதாகும். இந்த முழுக் கட்டிடமும் சிக்கல் மிகுந்த விதிகள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றுடன் கூடிய அமைப்பில் ஒன்றுடன் ஒன்று இடைவெட்டுகின்ற இரண்டு அம்சங்களின்மேல் எழுப்பப்பட்டுள்ளது. முதலில் உலகைச் சுற்றி, குறிப்பாக ஏகாதிபத்திய ஆளுகைக்கு உட்பட்ட உலகில், சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனங்கள் போன்ற கட்டுப்படுத்தும் அமைப்புகளின் வாயிலாக பல்வேறு கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கும் ஒரு உலக அரசாங்கம் மிக வேகமாக உருவெடுத்து வருகிறது. மூன்றாம் உலகில் உலகமயமாக்கல் என்பதை இந்த அமைப்புகள் 1970களிலும், 1980 களிலும் உருவான கடன் நெருக்கடியைப் பயன்படுத்தி நவீன தாராளமயம் என்ற உலகரீதியிலான கட்டுப்பாட்டு அமைப்பு மூலம் நடைமுறைப்படுத்தின.

தேசிய அரசு அல்லது அவற்றின் கூட்டணி போன்றவை தான் போர்களை உருவாக்குகின்றன. போர்களுக்கான புறவயக் காரணமாக தேசிய அரசுகளே அமைகின்றன. இருப்பினும் உலகமயமாக்கலானது தேசிய அரசுகள் மறைந்து வருவதாகக் கற்பனை செய்யச் சொல்கிறது. வளர்ச்சிய


தொடர்ச்சி 9ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க சாம்ராச்சியம்

டைந்த நாடுகளின் கடவுச் சீட்டுக்களையும் குடியுரிமை களையும் தங்களிடம் வைத்திருப்பவர்களின் வாயிலிருந்து உலகக் கிராமம் மற்றும் "உலகக் குடிமக்கள்" போன்ற வார்த்தைகளை நாம் கேள்விப்படுகிறோம். சோசலிச நாடு கள் இருந்த காலத்தில், மேற்கத்திய நாடுகளின் கொள்கை யாளர்கள் "மக்களின் சுதந்திரமான பயணம்" என்கிற உரிமை குறித்து அடிக்கடி பேசுவது வழக்கம். ஆனால் உலக அளவில் நவீன தாராளமயம் கோலோச்சும் இன்று தங்களுக்குத் தேவைப்படும்போது சுங்கச் சுவர்களை எழுப்பி பொருட்களின் வரவைத் தடுக்கும் வளர்ச்சியடைந்த நாடுகள் மூலதனம் மற்றும் பண்டங்களின் சுதந்திரமான



பயணம் குறித்தும் பேசக் கேட்கிறோம். "மக்களின் சுதந் திரமான பயணத்திற்குச்" செய்ய வேண்டிய ஒரே காரியம் கடவுச் சீட்டுக்களை ஒழிப்பதே. பிறகு எல்லா மேற்கத்திய மூலதனமும் இந்தியாவிற்குள் வரமுடியும். இந்திய உழைப் பாளிகள் ஏகாதிபத்திய நாடுகளுக்குள் நுழைய முடியும்.

உண்மையில் ஏகாதிபத்தியத்தின் தேவை மூன்றாம் உலக நாடுகளின் தேசிய அரசுகளை அழிப்பதல்ல; மாறாக அவற் றை தனக்கு ஏற்றவாறு பலப்படுத்தி, பயன்படுத்துவதாகும். உண்மையில் நடைபெற்றது என்னவென்றால் சோசலிச நாடுகளின் தோல்வி தொழிலாளர் இயக்கங்களின் பின்ன டைவு ஆகிய காரணங்களால் அரசு என்ற அமைப்பின் மூலம் குடிமக்களின் குறைந்தபட்சத் தேவை களைக்கூட நிறைவேற்ற வேண்டிய அவசியம் பூர்ஷ்வாக் களுக்கு இல் லாது போயிற்று. வலதுசாரித் தாக்குதல்கள் துவங்கிய 1970களின் மத்திய காலத்திலிருந்து அரசுகள் உலகம் முழுவதும் தங்களை மக்கள் நலப் பணிகளிலிருந்து துண்டி த்துக் கொண்டு அவற்றைக் கொடூரமான முறையில் சந் தையிடம் ஒப்படைக்கும் போக்கு தொடர்கிறது. இருப்பி னும் மக்கள் நலன்களை சீர்குலைப்பதும், உலகெங்கிலும் உள்ள நாடுகளில் தாராளமயத்தை நடைமுறைப்படுத்து வதும் அரசேயாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதா னால் தேசிய அரசு என்பது மூலதனத்திடம் மிகவும் பலவீன மாகவும், அதன் எண்ணங்களை மிக அநாகரீகமான முறை யில் நடைமுறைப்படுத்த வேண்டிய ஒன்றாகவும் உள்ளது. தொழிலாளர்களுடனான உறவில் அதே அரசு தொழிலாளர் களின் நலன்களை நடைமுறைப்படுத்துவதில் பலவீனமா கவும். அவர்களை வெறுப்புடன் புறக்கணிக்கிற ஒன்றாகவும் உள்ளது. மேலும் வேறு வார்த்தைகளின் சொல்வதானால், அரசு என்பது எவ்விதப் பாசாங்கும் இன்றி ஒட்டுமொத்த பூர்ஷ்வாக்களின் – அது மட்டுமின்றி எல்லை கடந்த பூர்ஷ் வாக்களின் நிர்வாகக் குழுவாகவும் உள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் இப்போது அரசு என்பது ஏகாதிபத்தியத் தை எதிர்ப்பதுபோல் நடிப்பதுகூட இல்லை. மாறாக அது மக்களிடம் ஏகாதிபத்திய நலன்களைக் கொண்டு செல்லும் ஒன்றாக உள்ளது.

மக்கள் நலத்துடன் தொடர்புடைய நல்வாழ்வு கல்வி, வேலை வாய்ப்பு இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாத் தல் போன்றவற்றிலிருந்து "அரசு பின்வாங்குவது" என்ற அம்சம் பலவித பக்க விளைவுகளை உருவாக்குவதோடு, ஒரு பெரிய வெற்றிடத்தையும் உருவாக்குகிறது. இத்திட்டங் கள் குறுகிய பார்வையும், பிரதேசப் பார்வையும் வெளிநாட்டு நிதி உதவியைச் சார்ந்தும் இயங்குகிற அரசுசாரா தன்ன ார்வ அமைப்புகள் மூலமாகவும் சமூக இயக்கங்கள் மூலமா கவும் நிறைவேற்றப்படுகின்றன. தேசிய – அரசு நிறைவேற்ற வேண்டிய சமூகக் கடமைகள் என ஒரு காலத்தில், கருதப் பட்டவைகளை தாங்கள் செய்வதாக இந்த அரசுசாரா அமைப்புகள் கூறிக்கொண்டு வரலாற்று ரீதியான வெகு ஜன மக்கள் அமைப்புகளின் வடிவங்களான தொழிற்சங்கங் களின் கட்சிகளின் இருந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டு கொள்கைப் பிடிப்புள்ள இளைஞர் சமுதாயத்தை திசை திருப்புகின்றன. இந்தப் பல்வேறு அமைப்புகளுக்கான நிதியை ஏகாதிபத்திய மையங்கள், உலக வங்கி மூலம் வழங்குகிறது. தேசிய அரசுகளுக்கான அவற்றின் எதிர்பா ர்ப்பு பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதில் தனக்கு ஆர்வமில்லை என்பது ஒரு கட்டுக்கதை. உண்மையில் இந்த ஆர்வமின்மை என்கிற விஷயத்தில் நிதியை வழங் குபவரும், பெறுபவர்களும் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். இதன்மூலம் ஏகாதிபத்திய மையங்கள், அந்தந்தப் பகுதிக ளைச் சேர்ந்த "காட்டுமிராண்டித்தனமான" அரசுகளை விட தங்களுக்கு மக்கள் மீது அக்கறை அதிகம் என்ற கருத்தை வலுப்படுத்துகிறார்கள். இதில் பங்கேற்ப வர்களு க்கோ ஒழுக்க ரீதியான அரசியலையும், சந்தர்ப்பவாத அரசிய லையும் பிரித்தறிவது கடினமான பணியாகிவிட்டது. இது சாம்ராஜ்யத்தின் ஒழுக்கரீதியிலான பொருளாதாரத்தை அமுலாக்கும்போது உருவாகும் எதிர்ப்பை சமூக சேவகர் களிடம் ஊழலாக மாற்றும் ஏகாதிபத்திய நிர்வாக முறை யாகும்.

இதற்கிடையில் வளர்ச்சியடைந்த நாடுகளில் நவீன தாராள மயத்தின் வெளிப்பாடுகளாக "மிக அதிகமான அரசாங் கத்தனம்" என்கிற கூப்பாடும், "அரசு பின்வாங்குதல்" என்பதற்கு மகிழ்ச்சியாரவாரமும் செய்யப்படுகிறது. அதே நேரம் உலகமயமாக்கலுக்கு ஆதாரமாக விளங்குகிற தகவல் தொழில்நுட்பம் முழுக்க முழுக்க அரசின் நிதியுதவியோடு உருவாகிறது. காட்டுத்தனமான ஊகங்களுக்கு மத்தியில் அரசே பணத்தின் ஸ்திரத்தன்மையை மேற்பார்வையிடுகி றது. இராணுவத் தொழில் நிறுவனங்களுக்கு முதலீடுக ளை அமைத்துக் கொடுக்கிறது. மிகவேகமாக தொடர்ச்சி யான சீரான முறையிலான சட்டங்களை இயற்றி ஏழை மக்களிடமிருந்து அவர்களின் வருமானத்தைப் பிடுங்கி பணக் காரர்களுக்கு கொடுக்கிறது.

அமெரிக்க மூலதனம் உலகிலேயே மிக வேகமாகப் பாய்ந்து செல்லக்கூடிய வலிமைமிகுந்தாயிருப்பது ஏனெனில் உல கின் எந்த மூலையிலும் அதன் பாதுகாப்பை உத்தரவாத ப்படுத்தும் இராணுவ பலம் அமெரிக்காவிற்கு உள்ளது. ஜப்பானிய மூலதனம் தேச எல்லைகளைக் கடந்து செல்வ தாகவும் ஜப்பானியத் தன்மையோடு வலிமையுள்ள தாகவும் இருக்கிறது. ஜேர்மனி தனது விரிவடைந்த எல்லைக ளோடு கூடிய தேச இணைப்பை இப்போதுதான் அமைத் தது. ஜேர்மானிய அரசு மற்றும் மூலதனத்தின் ஒருங்கிணை ந்த முயற்சியின் விளைவாக சோசலிச அரசுகள் தோற்றுப் போனதின் பின்னணியில் கிழக்கிலும் தெற்கிலும் உள்ள பகுதிகள் அதன் ஆதிக்க பலத்தின் கருணையில் விடப்பட் டுள்ளன.

மேலும் மூலதனம் சர்வதேச மயமாக்கும்போது தொழிற்சங்க ங்களை கட்டுப்படுத்தும் அமைப்புகளை தேசிய அரசுகள் மூலம் உருவாக்குகிறது. ஒப்பீட்டளவில் மூலதனம் உழைப் பை இடம்விட்டு இடம் பெயரச் செய்தபோதிலும் உழைப் பைக் காட்டிலும் மூலதனமே அதிக வேகமாக ஓரிடத்தை விட்டு மற்றோர் இடத்திற்கு வேகமாக மாறிச் செல்வதாக உள்ளது. இத்தகைய சமன்பாட்டில் உழைப்பு எப்போதும் ஒப்புநோக்கிப் பெரிய அளவுக்கு இடம்பெயராத ஒன்றாகவே உள்ளது. வெளிநாட்டில் குடியேறியவர்கள் உள்ளிட்ட – உழைப்பாளி மக்களைக் கட்டுப்படுத்தும் காரியத்தை அந்த ந்தப் பகுதிகளில் உள்ள தேசிய அரசுகள் செய்கின்றன. இந்தப் புதிய சாம்ராஜ்ய இறையாண்மை என்னும் பின்ன ணியில், தேசிய அரசுகளின் சட்டம் சாம்ராச்சிய சட்டத்திற்கு இயைபான ஒன்றாக மாற்றப்படுகிறது.

இந்த சாம்ராஜ்யத்தின் சமூக கலாசார, கோட்பாட்டு விஷ யங்களைப் பற்றி பலவற்றைக் கூறமுடியும். இந்த ஆட்சி முறையில் உலகமயமாக்கல் இன்று இருக்கும் நிலையைப் போல ஒரு காலத்தில் சர்வதேசியம் என்பது இருந்தது. உலகமயமாக்கல் நமது காலத்தின் உலகச் சந்தை என்கிற வடிவில் கணக்கற்ற போட்டிகள் நிறைந்த ஓர் அமைப்பாகும். புரட்சிகரமான தத்துவம் என்ற வகையில் சர்வதேசியம் என்பது இனம், மதம், மொழி எல்லைகளைக் கடந்து மனி தநேயத்தைத் தேடிச் செல்வதாகும். உலகமயமாக்கல் வேக ம் நிறைந்த தொழில்நுட்பம் மூலம் நிதிப் பரிவர்த்தனைக ளில் வேகமான மாறுதல்களை உருவாக்கி உலகை மாற் றியமைக்கும் என்று கூறப்படுகிறது. சர்வதேசியம் மனித ர்களின் முகத்துக்கு முகம், தேசத்துக்கு தேசம் இதற்கும் மேலாக உலகம் முழுவதற்குமான மனித இனத்தின் கூட் டுச் செயல்பாடாகும்.

தொழிலாளர்களின் பணியிடங்களிலும் குடியிருப்புளிலும் மதம், பிரதேசம், சாதி – சர்வதேச அளவுகோல்களின்படி தேசியம், இனம் – ஆகியவை தொழிலாளி வர்க்க ஒற்றுமையை உடைக்கவும், அல்லது ஒற்றுமை உருவாவதைத் தடுக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. முன்னாள் சோசலிச நாடுகளில் மதம், மற்றும் இனம் சார்ந்த வெறுப்புணர்வை மீண்டும் கண்டுபிடித்து வளர்ப்பது என்பது சோசலிசத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறிவர ஓர் அடிப்படை அவசியமா கக் கருதப்படுகிறது. பகுத்தறிவின்மை என்பதே இன்றைய சட்டம். ஏனெனில் மனிதர்கள் பகுத்தறிவில்லாமல் இருக்கும் விஷயம் சந்தைப் பகுத்தறிவின்றி இயங்குகிற விஷயத் தோடு ஒத்துப் போகிறது. அதேசமயம் உலகமயமாக்கல் என்பது சந்தைகளை ஒன்றிணைத்து மனிதர்களைப் பிரிக்கி றது. ஏனெனில் மனிதர்கள் ஒன்றுபடாமல் அவர்கள் தனித் தனியான நுகர்வோராக இருக்கும்போதுதான் அவர்களை உலகச் சந்தையின் நோக்கத்திற்காக சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். சமத்துவ அரசியலை அகற்றி அந்த இடத்தில் வேற்றுமை அரசியலை உருவாக்கும் போர்க் கருவிகளாக உலக அளவில் பின் நவீனத்துவக் கோட்பாடும் மூன்றாம் உலக நாடுகளின் அளவில் பின் கொலனியக் கோட்பாடும் மற்றும் எல்லையற்ற போட்டிகளும் சமூகத்தில் உருவாக்கப்படுகிறது.

புரட்சி நடைபெறுவதற்கான சாத்தியம் குறித்து மக்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் இவையெல்லாம் பலன்தராது. உலகமயமாக்கலின் தத்துவம் இந்த நம்பிக்கையை அழிக்க வேண்டும். இத்திட்டத்தின் ஒரு பகுதியை பின்நவீனத்துவக் கோட்பாடு நிறைவேற்றுகிறது. ஒவ்வொரு சிறு குழுவையும் மற்றவற்றிலிருந்து அவற்றின் தனித்தன்மை என்கிற வகை யில் தனித்தனியே பிரித்து வைக்க முடிந்தால், புரட்சிக்கான ஒன்றிணைந்த ஒரு சமுதாயம் சாத்தியமற்றதாகிவிடும். இவ் வகையில் சர்வதேச நாணய நிதியம் மட்டுமே ஒன்றிணை ந்து விளங்கும். அதற்குப் பலியாகிறவர்களை கணக்கின்றி மீண்டும் மீண்டும் பிரிக்க முடியும். அந்த வகையில் "வரலாற் றின் முடிவு" என்ற கோட்பாடு இதைச் செய்து முடிக்கிறது. அது புரட்சி என்பது சாத்தியமற்ற ஒன்று எனவும் சோச



லிசம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது எனவும், மூலதனத்தின் வெற்றியே இறுதியானது எனவும் கூறுகிறது. இந்தக் கோட்பாட்டை உருவாக்கியவர்களின் பட்டியலில் பல புகழ் பெற்ற அமெரிக்கர் இடம் பெறுகின்றனர். ஆயினும் இவற் றை தினமும் நமது தலைவர்கள் வாதயிலிருந்து கூறக் கேட்காவிடில், நாம் இதைப் பொருட்படுத்த மாட்டோம். வெளி விவகாரத்துறை அமைச்சர் ஜஸ்வந்த சிங் நமது கடந்த கால வரலாற்றின், கூட்டுச் சேராக் கொள் கையை "வீணடிக்கப்பட்ட பல பத்தாண்டுகள்" எனக் குறிப்பிடும் போது அவர் மிகச் சரியாக சொல்ல வருகிற விஷயம் சுய சார்பான தேசிய வளர்ச்சி ஒரு கற்பனை என்பதும், நாம் அனைவருமே சந்தையின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுமாகும். முழு தேசத்தையும் தாராளமயக் கொள்கையின் வாயிலாக ஏகாதிபத்தியத்தி ற்கு உட்படுத்தும் நடவடிக்கையின் மற்றொரு பகுதியே நாட்டை மதரீதியாக இனரீதியாக பிரிப்பது.

புனித அகஸ்டின் உலகமயமாக்கல் குறித்து புரிந்துகொள்ள வேறொரு பொருளில் கூறியதை இங்கு நாம் கூறமுடியம். "இந்தப் பூமியில் சொர்க்கம் போன்ற நகரம், அது மேற்கொ ள்ளும் புனிதப் பயணத்தில் கலந்து கொள்ள எல்லா மக்க ளையும் அழைக்கிறது. எனவே எல்லா மொழிகளையும் பேசக்கூடிய வேற்றுலகவாசிகளின் ஒரு சமூகத்தை திரட்டு கிறது" இதில் குறிப்பிடப்படும் "வேற்றுலக மக்களின் சமூ கம்" என்னும் பொதுவான ஒற்றுமையுடன் கூடிய முன் னோக்கிப் பார்க்கிற மக்களைத் திரட்டுவதே நம்முன் உள்ள பணியாகும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கருணாநிதியின்: குடும்பச் சொத்தும் வாரிசு உரிமையும்

நரசிம்மா

அண்ணாதுரைக்கு அப்படி ஒரு பேர் அமைந்தது எவ்வளவு வசதியாகப் போனது. தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்த முழுக் குடும்பத்துக்கும் அவர் அண்ணா. தம்பிமாருக்கெல்லாம் திராவிடநாடு செய்தி ஏட்டில் தம்பிக்கு என்று மடல் எழுதுவார். இந்த அண்ணா, தம்பி உறவு பாசம் எல்லாம் தேர்தல் அரசியல் என்று வந்த பிறகு விடுபட்டுப் போய்விட்டது. 1960 அளவில் சோவியத் யூனியனுக்குப் பயணம் போய் வந்த ஈ.வெ.கி சம்பத் (பெரியாரின் தமையனாருடைய மகன் பெரியப்பாவைப் பிரிந்து அண்ணாவுடன் வெளியெறியவர்) திராவிட நாடு வேண்டாம் என்றும் சோவியத் யூனியனில் உள்ளது போல முழுமையான அதிகாரங்கள் கொண்ட சுயாட்சிகள் தான் தேவை என்று சொன்னதன் பிறகு அண்ணாதுரையுடன் முரண்பட்டுக் கழகத்திலிருந்து பிரிந்து போனார். அவர் தனிக்கட்சி தொடங்கினாலும் முடிவில் காங்கிரஸுக்கு நெருக்கமாகி விட்டார்.

தி.மு.க வின் தலைவர்கள் மனதில் திராவிடநாடு பற்றி இருந்த வலுவான நம்பிக்கை காரணமாக சம்பத் சொன்னது அவர்கட்குப் பிடிக்கவில்லை என்று சொல்ல இயலாது. ஏனெனில் சீன இந்திய எல்லைப் போரை அடுத்து 1963ல் நேரு பிரிவினைத் தடைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதும் கழகத்தைக் காப்பாற்றுவதற்காக தனிநாட்டுக் கொள்கையைக் கைவிடுவதாக அண்ணாதுரை அறிவித்தார். இது தான் திராவிட விடுதலையின் இறுதி அரசியல் அத்தியாயம். தி.மு.க தமிழகத்தின் பிராமணரல்லாத நடுத்தரவர்க்கத்தை தளமாகக் கொண்டு வளர்ந்த கட்சி. காலப் போக்கில் காங்கிரஸ் வலுவிழந்து போக தி.மு.க பிராமணருடனும் தமிழகப் பெருமுதலாளிகளுடனும் சமரசம் செய்து வர்க்க மேம்படு கண்டது.

1968ல் அண்ணாதுரையின் திடீர்ச் சுகவீனமும் சாவும் கருணாநிதியை அவரது 'வாரிசாகக்' கொண்டு வந்தது. அண்ணாதுரையின் மனைவியான ராணி அண்ணாதுரை சில காலம் பின்பு அரசியலில் காலை வைக்க முயன்று பின்வாங்கிக் கொண்டார். அண்ணாதுரையின் வளர்ப்புப் பிள்ளைகளுக்கு அரசியலில் நாட்டம் இருக்கவில்லை. சினிமாக் கவர்ச்சியால் வளர்ச்சி கண்ட தி.மு.கவில் கருணாநிதியின் எழுச்சிக்கும் சினிமா உலகத் தொடர்புகள் உதவின. அதை விடவும் முக்கிய தலைவர்களான நெடுஞ் செழியன், அன்பழகன் போன்றவர்களுக்கு வெகுசனத் தொடர்பு குறைவு. எனவே ஸ்தாபன வேலைகளில் அதிகம் ஈடுபட்ட குள்ளநரியான கருணாநிதிக்கும் தலைமைப்பதவி எளிதாகவே கிட்டியது. 1967ம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.கவை அதன் பின்பு அசைக்க இயலாத நிலைக்குக் காங்கிரஸ் தள்ளப்பட்டு விட்டது. பார்ப்பன இந்தி ஆதிக்க அடையாளம் காங்கிரஸுக்கு இருந்து வந்தது. காமராஜரால் ராஜகோபலாச்சாரியை விழுத்த முடிந்தாலும் பார்ப்பன ஆதிக்கத்தை முற்றாக முறியடிக்க முடியவில்லை. இவையெல்லாம் காங்கிரஸுக்கு எதிராகச் செயற்பட்டன.

எப்போது தி.மு.க ஒரு வலுவான சட்டமன்ற அரசியற் கட்சியாக நிலைபெற்றதோ அப்போதே உட்பூசல்களும் அதிகாரத்துக்கான போட்டியும் தி.மு.க அரசியலுக்கு வேரோயிருந்த மொழிவழித் தேசியவாதத்துக்கும் பார்ப்பனிய விரோதத்துக்கும் ஆப்பு வைக்கத் தொடங்கிவிட்டன. காமராஜ்,

## தமிழின் பெயரால் கோடிகள் சேர்த்த கலைஞர்

அண்ணாதுரை காலத்தில் பணவிஷயத்தில் இருந்த நல்ல ஒழுக்கங்கள் எல்லாம் மெல்ல மறைந்து அரசு என்றாலே ஊழல் என்கிற நிலை கருணாநிதி காலத்தில் வந்துவிட்டது. தமிழகத்தில் தி.மு.கவை காங்கிரஸால் ஒன்றுஞ்செய்ய இயலவில்லையே ஒழிய மத்திய அரசில் அதிகாரத்திலிருந்த காங்கிரஸால் நிறையவே செய்ய இயலுமாலிருந்தது.

கருணாநிதியின் பலவேறு ஊழல்களும் கருணாநிதியிடம் கழகக் கணக்குக் கேட்டு விலகிய தி.மு.க பொருளாளர் எம்.ஜி.ராமசந்திரனுடைய (எம்.ஜி.ஆர்) வருமானவரி ஏய்ப்பு விடயங்களும் டில்லி அதிகாரத்திற்கு வாய்ப்பாகின. எனவே தி.மு.கவைக் கட்டுப்படுத்த மட்டுமன்றி தி.மு.கவிற்குப் போட்டியாக அதை மீறி வளர்ந்த அ.தி.மு.கவைக் கட்டுப்படுத்தவும் குற்ற விசாரணைக் கமிஷன்களின் அறிக்கைகளும் வருமான வரித் திணைக்களக் கோப்புக்களும் மிகவும் பயன்பட்டன. டில்லிக்குக் கட்டுப்படாத போது மாநிலத்தில் தி.மு.க, அ.தி.மு.க ஆட்சியைக் கலைத்து ஆளுனர் ஆட்சியை நிறுவவும் டில்லி அதிகாரத்துக்கு இயலுமாயிருந்தது.

எம்.ஜி.ஆர் உயிரோடு இருந்த வரையும் தி.மு.க வால் ஆட்சிக்கு மீள இயலவில்லை. அது வரை தி.மு.கவைக் கட்டியெழுப்புவதற்கு உதவியாக இருந்தவர்களை மரியாதையுடனேயே நடத்துகிற தேவை கருணாநிதிக்கு இருந்தாலும் தனக்குச் சவாலாக வரக்கூடியவர்களை லாவகமாக ஓரங்கட்டி வந்தார். (இருதிசைகளிலும்) நெடுஞ்செழியன் உட்படப் பலர் அ.தி.மு.கவுக்குப் போக அதுவே காரணமுமாயிற்று எனினும் இருதிசைகளிலும் கட்சித் தாவல்கள் அன்று முதல் இன்று வரை தொடர்ந்து வருகின்றன.

1987ல் எம்.ஜி.ஆர் இறந்த பின்பு கருணாநிதி ஈழத்தமிழர் பிரச்சனையில் விடுதலைப் புலிகளுடைய பிரதம ஆதரவாளர் என்ற தோற்றத்தைத் தனதாக்கிக் கொண்டார். ஐந்து ஆண்டுகள் பின்பு ராஜீவ் காந்தி கொலை வரை நீடித்த ஆட்சிக் காலத்திலேயே கருணாநிதியின் வாரிசுப் பிரச்சனை முன்னணிக்கு வந்தது. ஈழத்தமிழர் பிரச்சனையை கோபாலசாமி (வை.கோ) கையாண்டவிதம் தி.மு.க ஆதரவாளர்களிடையே அவருக்குச் செல்வாக்கையும் காங்கிரஸ் உயர் மட்டங்களில் அதிருப்தியையும் ஏற்படுத்தியது. அதன் விளைவாகவே தி.மு.க வாரிசு உரிமைக்கு வை.கோ என்கிற சவாலைச் சமாளிக்க, அவர் தருணம் பார்த்து விரட்டப்பட்டார்.



கருணாநிதியின் மு.க. முத்துவை எம்.ஜி. ஆரின் சினிமா வாரிசாக்க 1970 களின் தொடக்கத்தில் எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. எம்.ஜி.ஆர் பிரிந்த பின்பு முத்து யார் என்பதையே சினிமா உலகம் மறந்துவிட்டது. கருணாநிதியின் மனைவிமாரிடையிலான போட்டி அரசியல் வாரிசுரிமை பற்றிய பூசல்களுக்குக் காரணமாயிற்று. மூத்தாள் மகன் மு.க. அழகிரியை இளையாள் மகன் மு. க. ஸ்டாலின் மேவத் தொடங்கியதோடு அழகிரி தென்பகுதிகளில் தன்னுடைய அரசியல் செல்வாக்கைக் காட்டி ஒரு அரசியல் பாகப்பிரிவினையை நடத்தியுள்ளார். கருணாநிதியின் அரசியல் ரவுடித்தனத்திற்கு ஏற்ற இந்த இரண்டு அசல் ரவுடி வாரிசுகளும் போர் நடத்துகையில், கண்ணியமான அரசியல் வேடம் போட்டக் கருணாநிதியை விமர்சிக்கிறவர்களுக்கு நல்லவராயும் கருணாநிதிக்கு விசுவாசமானவராயும் வேடமிட்டு வந்த மகள் கனிமொழியும் டில்லிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளார்.

கருணாநிதியின் கவனம் தமிழக அரசியலில் குவிந்திருந்தாலும் 1987க்குப் பின்பு டில்லியுடன் சமரசத்துக்கும் மத்திய ஆட்சி அதிகாரத்தில் பங்கு வாங்கவும் ஒரு தேவை இருந்தது. எனவே அந்தப் பொறுப்பு நன்கு ஆங்கிலம் தெரிந்த மருமகன் முரசொலி மாறனுக்குக் கொடுக்கப்பட்டது. மாறனுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் கோபாலசாமியை ஓரங்கட்டவும் உதவியது. மாறன் தனது டில்லித் தொடர்புகளைத் தனக்கென்று ஒரு தளத்தை அமைக்கப் பயன்படுத்திக் கொண்டார். அதேவேளை ஒரு ஊடக சாம்ராச்சியமும் மாறன் குடும்பத்தின் ஆதிக்கத்தின் கீழ் உருவாகி வளர்ந்தது. மாறனின் வளர்ச்சி கருணாநிதிக்கும் ஸ்டாலினைத் தனது வாரிசாக்குகிற திட்டத்துக்கும் மிரட்டலாக இருக்கவில்லை. ஆனால் மாறனின் பிள்ளைகள் கருணாநிதி தாத்தாவுக்கு விசுவாசமாயிருந்தாலும் ஸ்டாலினுக்கு விசுவாசமாயிருக்க நியாயமிருக்கவில்லை.

முரசொலி மாறனின் எதிர்பாராத மரணத்தையடுத்து தயாநிதி மாறன் முக்கிய அமைச்சர் பதவியைப் பெற்றார். மாறன் குடும்பத்திடம் சன்.டி.வி என்கிற தொலைக் காட்சிச் சாம்ராச்சியம் மட்டுமில்லாமல் பலவேறு பத்திரிகைகளும் இருந்தன. சில ஆண்டுகள் முன்பு கருணாநிதிக்கு வேண்டிய ஒருவரால் தொடக்கப்பட்ட தி.மு.க. அனுதாப நாளேடான தினகரனையும் மாறன் குடும்பம் சென்ற ஆண்டு தனதாக்கிக் கொண்டது. அதை விடவும் டாட்டா நிறுவனம் உட்பட்ட பலவேறு நிறவனங்களிலும் கருணாநிதி மாறன் குடும்பத்தினர் பங்காளிகளாகினர். எனவே அதிகாரத்திற்கான போட்டி வலுப்படவும் குடும்பத்தில் விரிசல் ஏற்படவும் வழி உண்டாயிற்று.

தயாநிதி மாறன் டில்லியில் தன்னுடைய செல்வாக்கைப்பாவித்து தமிழக தி.மு.க ஆட்சியைக் கவிழ்க்க முயன்றதாகக் கூறப்படும் அளவுக்கு வெகுவேகமாகவே உறவுகள் சீர்குலைந்தன. தி.மு.கவினுள் மாறனின் வாரிசுகளின் கை ஓங்குவதைக் கருணாநிதி விரும்பவில்லை. தயாநிதிமாறன் தகவல்தொழில்நுட்ப தொலைத்தொடர்பாடல் அமைச்சர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்ற ஆணைக்குக் காரணம் அவரது தமையன் கலாநிதி மாறனின் கட்டுப்பாட்டிலுள்ள தினகரன் உற்பத்தி செய்த ஒரு கருத்துக் கணிப்பு. அதில் கருணாநிதியின் வாரிசாக வரும் தகுதி ஸ்டாலினுக்குத்தான் உண்டு என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து ஸ்டாலினின் 'அன்புச் சகோதரர்' அழகிரியின் அடியாட்கள் மதுரையில் "தினகரன்" அலுவலகத்தை ஒரு கை பார்த்தார்கள். பத்திரிகை ஊழியர்கள் மூவர் கொல்லப்பட்டனர். அதற்கு வகை சொல்ல ஒரு பலிக்கடா தேவைப்பட்டது. எனவே ஒரே கல்லில் இரண்டு மாங்காயகளாக தயாநிதி மாறன் மீது பழி சுமத்தப்பட்டது. அதன் மூலம் தயாநிதி மாறனின் வளர்ச்சி தடுக்கப்பட்டது. அழகிரியின் குற்றத்திலிருந்து கவனம் திசை திருப்பப்பட்டது.

தயாநிதி மாறன் "தாத்தாவுக்குத் துரோகம் நினைப்பேனா" "கழகத்துக்குத் துரோகம் நினைப்பேனா?" என்று அலறுவது கோபாலசாமிக்குக் குழிபறிக்கக் கருணாநிதி பதினைந்து ஆண்டுகள் முன்பு காய்நகர்த்தத் தொடங்கிய போது கோபாலசாமி "கலைஞருக்குத் துரோகம் நினைப்பேனா? கழகத்துக்குத் துரோகம் நினைப்பேனா?" என்று கதறியதன் மறுவடிவமாகத் தான் தெரிகிறது.

எனினும் கலாநிதி மாறன் கருணாநிதி உறவில் இப்போது வெளிவெளியாகவே ஒரு வெடிப்பு ஏற்பட்டு விட்டது. சன்டி. வி. நிறுவனமே தினகரனும் சேர்ந்து "சூரியக்" குடும்பம் கருணாநிதியின் வாரிசு அரசியலுக்கு கொஞ்சம் இடைஞ்சலாகத் தான் இருக்கும். ஏற்கெனவே கருணாநிதி தன் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அத்திவாரம் போட்டுவிட்டார்.

மாறன் குடும்பத்துக்குத் தமிழகத்தில் அரசியல் வலிமை இல்லை. ஆனால் தென்னிந்தியாவிலும் வெளியிலும் விரிந்து பரந்திருக்கும் ஒரு ஊடக சாம்ராச்சியம் உண்டு. டில்லித் தொடர்புகளும் உண்டு. எனவே தமிழக அரசியலில் கருணாநிதி- ஜெயலலிதா மோதலைப் பார்த்து அலுத்தவர்கட்குச் சுவையான விடயங்கள் கிடைக்கும். ஆனால் கருணாநிதியின் வாரிசு ஸ்டாலினா, அழகிரியா, கனிமொழியா அல்லது ஒரு வேளை தப்பித்தவறி தயாநிதி மாறனா என்பதெல்லாம் இப்போதைக்கு முக்கியமில்லை. எப்போதைக்கும் முக்கியமில்லை.

தமிழகத்தின் ஊழல்மிக்க தி.மு.க பாரம்பரியத்தினின்றும் டில்லியில் உள்ள காங்கிரஸ் ஆதிக்கத்தினின்றும் தமிழகம் முதலில் விடுதலை பெற வேண்டும். அதற்கான மாற்று வழி பாராளுமன்ற இடதுசாரிகள் வசமில்லை. நேர்மையான இடதுசாரிகளும் புரட்சிகர மாக்ஸியலெனினியவாதிகளும் மேலும் ஊக்கத்துடன் செயற்படவேண்டிய காலம் வந்து விட்டது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தலைவிரித்தாடும் லஞ்சமும் ஊழலும்

## பண முதலைகளுக்கு கொண்டாட்டம்!

சண்முகம்

இலஞ்சம் ஊழல் மோசடி அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றில் இந்தியாவை விட இலங்கை எவ்வளவோ முன்னேற்றகரமானது என்று ஒப்பிட்டுக் கூறப்பட்ட ஒரு கால கட்டம் இலங்கையில் இருந்தது. ஆனால் அந்த நிலை இன்று தலைகீழாக மாற்றமடைந்து விட்டது. ஊழலில் ஈடுபட்டு அது அம்பலமாகிய சூழலில் யப்பானிய அமைச்சர் ஒருவர் அண்மையில் தற்கொலை செய்து கொண்டார். அவ்வாறே லஞ்சம் பெற்றுவந்த ஒரு சீன அரசாங்க உயர் நிலை அதிகாரிக்கு மரணதண்டனை கிடைத்துள்ளது. இவ்வாறு இலங்கையில் இடம் பெறுமாயின் பெரும் தொகையான ஆளும் வர்க்கப் பிரதிநிதிகள் தற்கொலை செய்ய வேண்டியும் மரணதண்டனை பெற வேண்டியும் ஏற்படும் நிலையே இன்று காணப்படுகின்றது. அந்தளவிற்கு லஞ்சம் ஊழல் மோசடி அதிகாரதுஷ்பிரயோகம் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

பொது நிறுவனங்கள் சம்மந்தமாக ஆராய்ந்து அறிக்கை செய்யும் பாராளுமன்ற தெரிவுக்குழு (COPE) தனது முதல் கட்ட அறிக்கையைத் தயாரித்துள்ளது. அவ் அறிக்கை இன்னும் பாராளுமன்றத்தில் பாராப்படுத்தப்படவில்லை. ஆனால் அதன் தலைவர் வெளியிட்ட தகவலில் 25 அரசாங்க பொது நிறுவனங்களில் 150 பில்லியன ரூபாய்கள் மோசடிக்கு உள்ளாகி இருப்பதாகக் கூறியுள்ளார். தற்போது இரண்டாம் கட்ட அறிக்கையில் மேலும் 5 நிறுவனங்களில் இடம் பெற்ற ஊழல் மோசடிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இத்தகைய ஊழல் மோசடிகள் முறைகேடுகளில் சம்மந்தப்பட்டுள்ளோர் யார் என்பது முக்கிய கேள்வியாகும். அமைச்சர்கள் உயர்நிலை அரசாங்க அதிகாரிகள் நிர்வாகிகள் போன்றோரே சம்மந்தப்பட்டுள்ளனர் என்பது தெட்டத் தெளிவான தாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வழங்கப்பட்ட கையூட்டு 150 கோடி ரூபாய்கள் என்ற தகவலை அண்மையில் பதவி விலக்கப்பட்ட அமைச்சர் அதிர்ச்சியூட்டும் தகவலாக வெளியிட்டமை நெருப்பின்றி ஏற்பட்ட புகையல்ல. அவ்வாறே மிக் 27 ரக விமானக் கொள்வனவிலும் ஏனைய ஆயுதக் கொள்வனவுகளிலும் தரகுப்பணம் லஞ்சப் பணம் ஊழல் பணம் எனத் தாராளமாகப் புளங்கியுள்ளன.

சிலமாதங்களுக்கு முன்பு ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து 18 பா. உறுப்பினர்கள் அரசாங்கப் பக்கம் சென்று அமைச்சர் பெருமக்களாகிக் கொண்டனர். அதில் ஒருவர் திரும்பி வந்து பழைய வீட்டில் புகுந்துகொண்டார். ஏனையோர் தொடர்ந்தும் எவ்வித தனித்துவமும் முக்கியத்துவமும் இன்றி அங்கு இருந்து வருவதற்கு ஏதோ வலுவான காரணம் இருந்தாக வேண்டும் என்ற சந்தேகம் பலதரப்பிலும் கிளப்பப்பட்டது. அதில் ஒன்று தான் அவர்கள் புரிந்த லஞ்ச ஊழல் முறைகேடுகள் பற்றிய கோப்புகள் அரசாங்கத்தின் கைகளில் இருந்து வருவது தான் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் அதனைக் கையில் வைத்திருப்போர் ஏதோ புனிதமான கனவான்கள் என்று யாரும் அர்த்தம் கொண்டு விடவும் முடியாது.

இதேபோன்றதே அரசாங்கத்தில் போய்ச் சேர்ந்த மலையகத் தலைமைகளுக்கும் சிகப்புக் கோப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதனாலேயே அவர்களால் எதுவும் செய்ய முடியாது கால் கட்டுப் போடப்பட்ட எருதுகள் போல் இருந்து வரவேண்டியுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

கிழக்கில் மாவிலாறு அணைக்கட்டுப் பிரச்சினையின் காரணமாக விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது. அதனை வழங்க வேண்டிய அதிகாரிகள் சிலர் சேர்ந்து அப்பணத்தில் சுமார் அறுபத்தேழு லட்சத்தை ஏப்பமிட்டுக் கொண்ட சம்பவம் வெளிவந்தது. அவர்கள் இப்போது சந்தேக நபர்களாக விளக்க மறியலில் இருந்தும் வருகின்றனர்.

இவற்றின் நடுவே லஞ்ச ஊழல் மோசடிக்கான திணைக்களத்தின் ஆணையாளர் கடந்தவாரம் வெளியிட்ட தகவல் பலரையும் திடுக்கிட வைத்துள்ளது. கடந்த ஜனவரியில் இருந்து ஐந்து மாதங்களில் தமது திணைக்களத்திற்கு 600 முறைப்பாடுகள் கிடைத்துள்ளது என்றும் கூறியுள்ளார். இதில் அமைச்சர்கள் உள்ளூராட்சித்தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திணைக்கள ஊழியர்கள் பொலிசார் அதிபர்கள் ஆசிரியர்கள் உள்ளடங்கு கின்றனர்.

இவர்களில் முன்னாள் இந்நாள் அமைச்சர்கள் 30 பேர். பா. ம உறுப்பினர்கள் 8 பேர் மாகாண முதலமைச்சர்கள் 3 பேர். மகாணசபை முதல்வர்கள் 5 பேர். மாகாண அமைச்சர்கள் 2 பேர். மாநகர முதல்வர்கள் 14 பேர் பிரதேசசபைத் தலைவர்கள் 23 பேர் அதன் உறுப்பினர்கள் 10 பேர் இவர்களை விட பொலிசாருக்கு எதிரான முறைப்பாடுகளே அதிகமாம். இவ்வாறான லஞ்ச ஊழல் மோசடியின் முறைப்பாட்டு எண்ணிக்கை கடந்த வருடத்தை விட 35 வீதம் கூடுதலானது எனவும் அவ் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவற்றை விட நாளாந்தம் இவ் லஞ்ச ஊழல் மோசடி பற்றிய செய்திகள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இவை பற்றி அரசாங்கத்தரப்பை குறை கூறி விமர்சனம் செய்யும் எதிர்க் கட்சியினர் சுத்தமானவர்கள் அல்லர். அண்மையில் ரெலிக்கொம் தொலைத்தொடர்பு நிறுவனப் பங்குகளை மலேசியக் கம்பனி ஒன்றிற்கு விற்கும் விடயத்தில் அரசாங்கத்தின் அதி உயர் பதவியில் உள்ள ஒருவருக்கு 10 மில்லியன் தரகுப்பணமாக வழங்க உறுதியளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இக்குற்றச் சாட்டை பாராளுமன்றத்தில் தனது உரையில் ஜே.வி.பி யின் பா.உ. விமல் வீரவன்சா குற்றம் சுமத்தினார். சில நாட்கள் கழித்து அதே விமல் வீரவன்சாவின் வர்த்தக ஊழல் பற்றிய கோப்பு ஜனாதிபதியின் கைவசம் இருப்பதாகச் செய்திகள் வெளிவந்தன. இவ்வாறே ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியமானவர்களுக்கும் ஏதோ ஒரு கோப்பு இருக்கவே செய்யும். ஏனெனில் லஞ்சம் ஊழல் மோசடி ஏமாற்று வழிகளில் பணம் பண்ணுவதே முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறையின் அடிப்படை இலச்சணமாகும். இலங்கையில் கடந்த 25 வருட கால யுத்தம் இவற்றுக்கான வாய்ப்பு வசதிகளை தாராளமாக வழங்கியுள்ளது. யுத்த முனையில் செத்து மடிவது சாதாரண சிங்கள விவசாயிகளின் உழைக்கும் மக்களின் பிள்ளைகளேயாவர். ஆனால் உயர் நிலை அதிகாரிகளும் தலைமைத் தளகர்த்தர்களும் தமக்குரியவற்றைத் தேடிக்கொண்டுள்ளனர்.

"பயங்கரவாதத்திற்கு எதிரான புனிதப் போருக்கென" வாங்கப்படும் ஆயுதக் கொள்வனவில் தரகுப்பணமாக லஞ்சப் பணமாக லட்சம் கோடி எனச் சேரவேண்டிய இடங்களுக்குச் சென்றடைகின்றன. இது பற்றி அடிக்கடி செய்திகளும் எதிர்ப்புக்குரல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை போதாதென்ற நிலையில் ஆட்கடத்தல்கள் மூலம் கப்பமாகவும் கோடி கோடியாகப் பணம் வசூலிக்கப்படுகின்றன. இவை பற்றி பல வகை ஊகங்கள் அடிபடுகின்றன. அந்தளவிற்கு யுத்தம் பெரும் பெரும், புள்ளிகளையெல்லாம் மேன்மேலும் பண முதலைகளாக வளர்த்து வருகின்றது.

ஆனால் இவ்வாறு ஒரு சிலரின் கைகளிலும் பைகளிலும் முறிலும் முறையற்ற விதத்தில் சென்றடையும் பணம் இந் நாட்டு மக்களுடைய பணமும் செல்வமுமாகும். சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எதிராக திசை திருப்பப்பட்டுள்ளனர். அவ்வாறே தமிழ் மக்கள் சாதாரண சிங்கள மக்களை எதிரிகள் என்று கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். சாதாரண உழைக்கும் மக்கள் சிங்களவராயினும் தமிழராயினும் முஸ்லீம்களாயினும் அல்லது மலையகத்தமிழராயினும் ஒட்டு மொத்தத்தில் சொத்துசுகம் படைத்த உயர் மேட்டுக்குடி வர்க்க சக்திகளாலும் அவர்களாது ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளாலும் ஏமாற்றப்படுபவர்களாகவே உள்ளனர். இதற்குப் பாராளுமன்ற முதலாளித்துவ ஆட்சி முறை பாதுகாப்பும் வசதிகளும் அவர்களுக்கு வழங்கி நிற்கிறது. ஆனால் மக்கள் ஏமாறும் நிலையில்தான் உள்ளனர். இச் சூழலைப் பயன்படுத்தி தரகுமுதலாளிகளும் பெரும் பணக்காரர்களும் மேன்மேலும் பணம் பொருள் சொத்து சுகம் தேடிக் கொள்கின்றனர். புதிய பணக்காரர்கள் உருவாகிக் கொழுத்து வருகின்றனர். அதே வேளை ஏழைகள் மேலும் ஏழைகளாகின்றனர். வறுமையும் வேலையின்மை ஏனைய இல்லாமை என்பன மக்களை பிடித்தாட்டி வருகின்றன. இவையாவும் முதலாளித்துவ அமைப்பினது விளைவானவை என்பதை மக்கள் உணர்ந்து கொள்வது அவசியமகின்றது.



நன்றி : டெய்லி மிரர் 15-05-2007

---

மலையகத்தின் படித்தவர்கள்

6ம் பக்க தொடர்ச்சி ....

அரசியல் தலைவர்களுக்கும் சப்பை கட்டுகின்றனர். முதலாளித்துவ சமூகத்தில் படித்தவர்களின் மேலாண்மைக்கும் இருப்பிற்கும் அவ் அரசியலையே அவர்கள் முன்னெடுக்கின்றனர் அல்லது ஆதரிக்கின்றனர்.

எந்த வொரு பொதுச்சிந்தனையுமில்லாமல் படித்து மேனிலை அடைந்தவர்கள் தங்களை நியாயப்படுத்திக் கொண்டே இருப்பர். அவர்கள் ஆதிக்க நிலையால் அவர்கள் சமூகத்தின் "மேய்ப்பவர்களாக" (இயேசுவை மேய்ப்பர் என்று கூறும் அர்த்தத்தில் அல்ல) இருக்கின்றனர். பிற்போக்குத்தனங்களைச் சுமந்து கொண்டு அவர்களின் ஊழல்கள் மோசடிகளை மூடி மறைக்கவும் இருப்பை பாதுகாத்துக் கொள்ளவும் பிற்போக்கு அரசியல் தலைமைகளிடம் சரணடைந்திருப்பர் அல்லது அத்தலைமைகளை வழிநடத்துவர்களாக இருப்பர். இன்றைய மலையகத்தில் இ.தொ.கா, ம.ம.மு போன்ற அமைப்புகளின் தலைமைகளுக்கு பின்னால் சில படித்தவர்கள் இருந்து கொண்டு அவர்களது சௌகரியங்களை பெற்றுக் கொண்டு ஏனையோரையும் அதே வழியில் நடக்கும்படி பிரசாரம் செய்வதுடன் நிர்ப்பந்தித்தும் வருகின்றனர். இதேபோன்று சுகாதார பிரதியமைச்சர் சுரேஷ் வடிவேலுக்கு பின்னால் சிலரும் மத்தியமாகாண கல்வியமைச்சர் அருள்சாமிக்கு பின்னால் சிலரும் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பிரதேசசபை உறுப்பினர்கள் என ஒவ்வொருவருக்கு பின்னால் ஒரு சில படித்தவர்கள் அவர்களின் இருப்பிற்காக இருக்கின்றனர். அவ்வாறு இருக்கும் படித்தவர்கள் பிற்போக்கு அரசியலை நியாயப்படுத்திக் கொண்டு சமூக விடுதலைக்கு எதிராக செயற்படுகின்றனர்.

இவர்களுக்கு மாறானர்வர்களாக காட்டி இவர்களை விமர்சித்துக்கொண்டு இவர்களின் வழியிலேயே மறைமுகமாக சென்று வேறு சிலர் தனிப்பட பயனடைகின்றனர். இந்த சில படித்தவர்களும் மிகவும் ஆபத்தானவர்களே. கிளர்ச்சிக்காரர்களாக காட்டிக்கொண்டு சமூக கிளர்ச்சி உணர்வுகளை மழுங்கடிக்கும், சமூக கிளர்ச்சியே ஏற்படாத வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருகிறார்கள். இவர்களிடத்தில் காழ்ப்புணர்வுகளும் வக்கிரங்களும் மிகையாகவே இருக்கும். இத்தகையோர் சமூகத்தின் ஐக்கியத்திற்கு மட்டுமன்றி படித்தவர்களின் ஐக்கியத்திற்கும் தடையான வர்கள். இவர்களை அடையாளம் காண்பது கடினம். முற்போக்கு அரசியல் இலக்கியப் பண்பாடென்றெல்லாம் பேசிக் கொண்டு படுபிற்போக்கான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டிருப்பர்.

மேற்கூறப்பட்ட இரண்டுவகையறாக்களுக்கும் அப்பால் சமூக அக்கறையுடன் சமூக விடுதலையை நோக்கி செயற்படும் கல்விகற்றவர்கள் இருக்கின்றனர். இவர்கள் கற்ற க்கல்வியை கொண்டு சமூக மேம்பாட்டிற்கு உழைக்கின்றனர். இவர்கள் பிற்போக்கு அரசியல் கலை இலக்கியப் போக்குகளை நிராகரித்து நிற்கின்றனர். மாக்சிச லெனினிச அரசியலை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இந்தப்பிரிவினருடன் இணைந்திருக்காவிட்டாலும் சமூக அக்கறையுடன் செயற்படும் பெரிய எண்ணிக்கையிலான கல்விகற்றவர்கள் இருக்கின்றனர். கற்றகல்வியை கொண்டு சமூக விடுதலைக்காக உழைப்பதை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றனர். பிற்போக்குத்தனங்களை கண்டு கொதிப்பவர்களாக இருக்கின்றனர்.

பரந்தளவில் பார்க்கின்றபோது கல்வி கற்றவர்கள் விழிப்புடன் செயற்படுவதால் சமூகத்திற்கு விழிப்பு ஏற்படுத்துபவர்களாகச் செயற்பட்டாலே சமூகத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்த முடியும். பிற்போக்கு சமூக அமைப்பை பாதுகாப்பவர்களாகவன்றி அதன் அகோரம் பற்றி விழிப்பூட்டுபவர்களாகவும் அதற்காக மாற்றுகள் பற்றிய சிந்தனைகளை ஊட்டுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

கல்விகற்றவர்கள் சமூகத்தில் அனைவருக்கும் கல்வி கிடைப்பதற்கும் அதன் பயனை மக்கள் அடைவதற்கும் பாடுபட முடியும். அதற்கு தேவையான சமூக, அரசியல் பண்பாட்டு சூழ்நிலையை ஏற்படுத்த அவர்கள் உழைக்க வேண்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தீர்வுக்கு எதிரான போக்குகளும் தீர்வுக்கான போராட்டமும்

**தேசபக்தன்**

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள தீர்வுத் திட்ட ஆலோசனைகள் தீர்வு ஏற்படக் கூடாது என்பதற்கு உத்தர வாதம் தருகிற ஆலோசனைகள் என்று தான் சொல்ல வேண்டும். அதை ஆலோசனைக்கு எடுக்காமல் முற்றாகவே அலட்சியஞ் செய்வது ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் செலுத்தக் கூடிய குறைந்தபட்ச மரியாதை என்று சொல்லலாம். ஏனெனில் இதற்கு முன்னம் பலவேறு சந்தர்ப்பங்களில் பரிந்துரைக்கப்பட்ட தீர்வுகளையும் எந்த அரசாங்கமும் உடன்பட்டு அல்லது தானாக முன்வைத்த ஆலோசனைகளை விடப் போததாகவே உள்ளது என்பதில் ஒரு ஐயத்திற்கும் இடம் இல்லை. ஜே.ஆர். ஜயவர்தன த.வி. கூட்டணித் தலைமையைக் கேவலப் படுத்த அறிமுகப்படுத்திய மாவட்ட சபைகள் கூடப் பரவாயில்லை என்று சொல்லுமளவுக்குத் தமிழ் மக்களின் பிரதேச உரிமைகள் அலட்சியஞ் செய்யப்பட்டுள்ளன. அதுவும் போதாமல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறது போல ஒற்றை ஆட்சி என்ற கருத்து மேலதிகமாகப் புகுத்தப் பட்டுள்ளது.

ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஆலோசனைகளை யாருக்காகவும் மாற்றப் போவதில்லை என்று சொன்னாலும் அவை ஜே.வி.பி.யை மகிழ்விக்க மாற்றப்படும் என்பதே உண்மை. இதற்கு முன்பு எப்போதுமே அரசாங்கத்துக்கு ஆதரவான தமிழ்க் கட்சிகளும் தனிமனிதர்களும் இவ்வளவு சங்கடமான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுவது கடினம்.

மனித உரிமைகட்காகப் பேசுகிறதாகச் சொல்லிக்கொண்டு விடுதலைப் புலி எதிர்ப்புப் பிரசார அறிக்கைகளை வெளியிடுகிறவர்களும் அரசாங்கத்தின் கூட்டாளிகளாகச் செயற்படுகிற தமிழ்த் தலைவர்களும் பிரமுகர்களும் வாயடைத்துப் போயுள்ளனர். அவர்களிற் பலரும், சனாதிபதி நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஆலோசனைகள் அமையும் என எதிர்பார்த்தனர். ஆனாலுஞ் சனாதிபதி அந்த அறிக்கையைக் கையாண்ட விதமே அது பற்றிய ஐயங்கட்கு இடமளித்திருக்க வேண்டும். அந்த அறிக்கையைப் பெருமையாகச் சனாதிபதியிடம் சமர்ப்பித்த சமசமஜாக் கட்சி அமைச்சர் திஸ்ஸ விதாரணவுக்கு அது எப்போதோ விளங்கியிருக்க வேண்டும். மெல்லவும் இயலாத விழுங்கவும் இயலாத ஒரு நிலையை அவருக்கு ஸ்ரீ.ல.சு.க ஆலோசனைகள் ஏற்படுத்தியுள்ளன.



பலவேறு சமாதான என்.ஜி.ஓ. முகவர்களைப் பற்றி வருத்தம் தெரிவித்து எழுதி வருகிறார்கள். எதிர்பார்த்த விதமாக யூஎன்.பி அதைக் கடுமையாக விமர்சித்துள்ளது. ஆனால் இடைக்கால நிருவாக ஏற்பாடு பற்றி விடுதலைப் புலிகள் முன்வைத்த ஆலோசனைகளைப் பற்றி இதுவரை எதையுமே சொல்ல இயலாத யூஎன்.பி எந்த விதமான தீர்வை மனத்தில் வைத்திருக்கிறது என்று யாருக்கும் இதுவரை சொல்லப் படவில்லை. ஜே.வி.பியும் உறுமயவும் விடுதலைப் புலிகளைப் போர் மூலம் அழிப்பதைவிட வேறெந்த விதமான தீர்வையும் தமது கருத்திற் கொண்டிருக்கவில்லை என்பது ஒவ்வொரு சிறு அலுவலிலும் வெளிப்படையாகவே தெரிந்த விடயம்.

சர்வகட்சி மாநாடு என்பது பயனற்றுப் போன விடயம் என்பதை மேலும் உறுதிப்படுத்துமாறே ஸ்ரீ.ல.சு.க ஆலோசனைகள் அமைந்துள்ளன. எனவே தீர்வுக்கான ஒரே வழி போர் என்கிற அண்மைக்காலச் செயற்பாடுகட்கு வலுச் சேர்க்கிற விதமாகவே இந்த ஆலோசனைகள் அமைந்துள்ளன.

கிழக்கில் கொடுமையான கனரக ஆயுதப் பிரயோகத்தாலும் மக்கள் வாழும் பகுதிகள் மீது மூர்க்கத்தனமான குண்டு வீச்சுக்களாலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் பல அரச படைகள் வசமானது. இதை வைத்துப் போர் மூலம் விடுதலைப் புலிகளை அழித்துத் தமிழ் மக்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்கலாம் என்கிற சிந்தனை ஸ்ரீ.ல.சு. கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் வலுவாக உள்ளது என்பதையே மேற்படி ஆலோசனைகள் சுட்டிக் காட்டுகின்றன. 1995 முதல் 2002 வரை பொதுசன முன்னணி ஆட்சி போர் மூலம் விடுதலைப் புலிகளை முறியடிக்க எடுத்த முயற்சிகள் அதற்கு நேரெதிரான விளைவுகளையே ஏற்படுத்தியிருந்தது. அந்தப் பின்னணியில் "விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க இயலாது" என்ற கருத்துத் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமில்லாமல் சிங்கள மக்கள் மத்தியிலும் ஏற்பட்டிருந்தது. அதை ராஜபக்ஷ ஆட்சி மாற்றிவிட்டது என்ற பிரசாரம் மிகவும் தீவிரமாக வேலை செய்கிறது. எனவே இறுதி வெற்றிக்கு நாளை எண்ணுகிற ஒரு மனநிலை உருவாகியுள்ளது. முழு அளவிலான போரொன்று மூண்டு எரியும் வரை எளிதான வெற்றிகள் பற்றிய மயக்கங்கள் மேலுந் தொடர்வது தவிர்க்க இயலாதது.

எனினும் தீர்வு பற்றிப் பேசுகிற பலரும் கண்ணுக்கு முன்னால் தெரிகிற உண்மைகளைத் தவிர்த்து வருகிறார்கள். அரசாங்கம் சாதாரண மக்களை இலக்குவைத்தே பெரும்பாலான தாக்குதல்களைத் தொடுத்து வந்துள்ளது என்ற உண்மையை விளங்கிக் கொள்ள இயலாதளவுக்கு யாரும் மூடர்களல்ல. எனினும் ஒரு நாக்கால் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பேணுகிற விதமான தீர்வு பற்றிப் பேசிக் கொண்டே கவனமாகக் குறி வைக்கப்பட்ட இலக்குகள் மீது அரச படைகள் தொடுக்கும் தாக்குதலுக்குப் பலர் ஆதரவு தெரிவிக்கின்றனர். இந்த வரிசையில் இங்கிலாந்தின் திருச்சபையின் ஆண்டகையும் வந்து சேர்ந்திருப்பதாக மே மாதத்தில் அவரது வருகை உணர்த்தியது.

> 'பொருளாதாரம் சீரழிந்தாலும்
> பரவாயில்லை
> அந்நிய ஆதிக்கம் வந்தாலும்
> பிரச்சனையில்லை
> நாடு எக்கேடு கெட்டாலும்
> எமக்கென்ன
> தமிழ் மக்களை சமத்துவம் மிக்க
> தேசிய இனமாக ஏற்கமாட்டோம்.
> இதுவே அனைத்து
> பேரினவாதிகளதும் நிலைப்பாடாகும்.

சம்பூரிற் சென்ற வருட முற்பகுதியில் குண்டு வீச்சுக் காரணமாக ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர நேர்ந்த வேளையில் வாய் திறக்காதவர்களிடமிருந்தும் செஞ்சோலைப் படுகொலைகளைக் கண்டுங் காணாமல் விட்டவர்களிடமிருந்தும் அதை நியாயப்படுத்திய சமாதானத் தூதுவர்களிடமிருந்தும் நாம் எந்த விதமான நேர்மையை எதிர்பார்க்க இயலும்.

விடுதலைப் புலிகளின் பதிற் தாக்குதல்கள் அரசாங்கத்தை நிலைகுலையச் செய்கிற அளவுக்கு அமையாவிட்டாலும் சில தாக்குதல்களது பாதிப்புப் பெரியது. எனினும் வெறுமனே ராணுவப் பதிலடிகள் மூலம் தமிழ் மக்களின் இருப்பைப்பாதுகாக்க இயலாது. இது இன்று வரையிலான போராட்ட அனுபவம். மக்களின் பாதுகாப்பையும் நலன்களையும் முதன்மைப்படுத்துகிற விதமாகக் காரியங்கள் மேற்கொள்ளப்பட்ட காலங்கள் இருந்துள்ளன. ஆனாலும் அவை மக்களை முதன்மைப்படுத்துகிற முறையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூற இயலாது. தமிழ் மக்களுக்குத் துரோகமாக நடக்கிறவர்கள் எனக் கருதப்படும் எல்லாரையும் அழித்து விடுதலையை வெல்ல இயலாது. மனிதர்களது தவறுகளை அவர்களது சூழ்நிலைகளில் வைத்துப் பார்ப்பதும் அவர்களை விடுதலைப் போராட்டத்தின் தரப்பிற்கு வென்றெடுப்பதும் ஒரு விடுதலைப் போராட்டத்தின் முக்கியமான தேவை. இவ் விடயத்தில் தமிழ் மக்களின் நலனும் பாதுகாப்பும் பற்றி அக்கறையுள்ள அனைவருமே கவனங்காட்டவேண்டும். தவறினால் போரை யார் வென்றாலும் வெல்லாவிட்டாலும் மிக அதிகம் இழப்போர் தமிழ் மக்களாகவே இருப்பர்.

விடுதலைப்புலிகளின் பதிலடிகளையிட்டுக் கைகொட்டி மகிழ்வோர் அதன் தொடர்விளைவுகள் மூலம் போருக்குள் சிக்கியுள்ள தமிழ்ச் சமூகம் எவ்வாறு முகங்கொடுப்பது என்பது பற்றி எவ்விதமான கவனமுங் காட்டுவதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இன்று தவிர்க்க இயலாத ஒரு வரலாற்றுத் தேவை. ஆனால் அது ஆயுதம் தாங்கிய போர் என்ற ஒற்றைப் பரிமாணத்திலிருந்து விடுபட வேண்டும். அதைப் பரந்துபட்ட மக்கள் போராட்டங்களாகவும் மக்கள் யுத்தமாகவும் வெகுசன அரசியல் இயக்கமாகவும் விரிவுபடுத்துவதற்கான வழிகள் தேடப்பட வேண்டும். அதன் மூலமே தமிழ்மக்களிடையே அதிக பட்ச போராட்ட ஒற்றுமையையும் பங்குபற்றலையும் பெற இயலும்.

இலங்கையின் பொருளாதாரம் பூரணமாகவே சீரழிந்தாலும் பரவாயில்லை, இலங்கை முழுவதும் அந்நியரது ஆதிக்கத்துக் குட்பட்டுப் போனாலும் பரவாயில்லை, ஒரு தேசிய இனமாகத் தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களது சமத்துவத்தையும் அடிப்படை உரிமைகளையும் ஏற்கமாட்டோம் என்ற நோக்குடனேயே இன்று ஆட்சியிலுள்ள பேரினவாதிகள் செயற்படுகின்றனர். எதிர்க்கட்சிப் பேரினவாதிகளிற் சிலருக்கு அது போதாததாயுள்ளது. வேறு சிலருக்கு அது பற்றிய அக்கறை இல்லை. இதை விடத் திறமையாகப் போரை நடத்தக் கூடியவர்களையே யூ என். பி தேடுகிறது. பேரினவாதப் பாராளுமன்றக் கட்சிகளையும் தலைவர்களையும் பாராளுமன்ற அரசியலையும் நம்பி ஏமாற இனியும் இயலாது.

ஏகாதிபத்திய 'சர்வதேச சமூகத்தின்' ஆசிகளுடன் பேரினவாதம் தமிழ்மக்களை ஒடுக்குகிற காரியத்தில் முனைப்பாக இயங்குகிறது. எனவே அதில் எப்பகுதியினதும் நல்லெண்ணத்தை நம்பித் தமிழ் மக்கள் ஏமாற இயலாது. ஆனால் தனது அடக்குமுறையைத் தமிழ் மக்களுடன் நிறுத்திக்கொள்ள இயலாமல் பேரினவாத அதிகார பீடம் தடுமாறுகிறது. சிங்கள மக்கள் எதிர் நோக் குகிற பொருளாதாரப் பிரச்சனைகள் புதிய எதிர்ப்புச் சக்திகளைக் கிளறிவிடுகிற அபாயம் பற்றி அது அறியும். எனவே சிங்களப் புலிகள், தொழிற்சங்கப் புலிகள், ஊடகப் புலிகள் என்று முத்திரை குத்தி அந்த எதிர்ப்பின் விதைகள் முளை விடாமலே சாகடிக்க முயல்கிறது. இதைத் தமிழ்த் தலை மைகள் என்றுமே உணருமா என்பது பற்றி மிகுந்த ஐயத்துக்கு இடமுண்டு.


எனவே தான் மூன்றாவது சக்தி ஒன்று எழுச்சி பெறுவதற்கான தேவையை மட்டுமில்லாமல் அதற்கான வாய்ப்பையுங் கொண்டதாக இன்றைய காலகட்டம் அமைந்துள்ளது. இடதுசாரித் தோழர்களும், சமூக அக்கறையும் துணிவுமுள்ள பத்திரிகையாளர்களும் தொழிற்சங்கவாதிகளும் கடத்தப்படுவதும் பொது எதிரியின் வலிமையின் அடையாளமல்ல. அவை எதிரியின் இயலாமையின் வெளிப்பாடுகள். அதைக் கண்டு நாட்டின் சனநாயக முற்போக்கு இடதுசாரிகள் தயங்கி நின்றால் நாடு ஃபாஸிஸத்தை நோக்கித் தள்ளப்படும். மாறாக அவற்றை எதிர்த்து நிற்கப் புதிய தந்திரோபாயங்களையும் புதிய வகையிலான வெகுசனப் போராட்டங்களையும் வகுத்து முன்னேற முயல்வார்களாயின் பொது எதிரியின் பலவீனங்கள் வேகமாகவே அம்பலமாகி நாட்டின் மக்கள் புது நம்பிக்கை பெறுவர். இது சோதனை மிகுந்த காலமாகத் தோன்றலாம். ஆனால் இதுவே எதிர்காலத்தின் வெற்றிகட்கான உறுதியான அத்திவாரங்களை இடுவதற்கான காலமுமாகும்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## எல்லாம் முடிந்த பிறகு

பலஸ்தீன பகுதிகளினூடு இஸ்ரேல் சட்ட விரோதமாக அமை த்த சுவர் தொடர்பில் பலஸ்தீனத்திற்கு ஏற்பட்ட சேத விபரங்களை திரட்ட ஐ.நா. செயலாளர் நாயகம் ஒரு நிபு ணர் குழு ஒன்றை பலஸ்தீனத்திற்கு அனுப்பி உள்ளார். இஸ்ரேலானது சட்ட விரோதமாக சுவரை கட்டத் தொட ங்கும் போதோ, கட்டிக் கொண்டிருக்கும் போதோ நடவடி க்கைகள் எதனையும் எடுக்காத ஐ.நா. இப்போது மட்டும் சேத விபரங்களை அறிந்து என்னத்தைச் செய்யப் போகிறது?

## அதிகாரம் என்பதும் உரிமை என்பதும்

சர்வதேச வலு ஏஜென்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தனது வலுத்தேவைகளுக்காக அணு சக்தியை பயன்படுத்தும் உரிமை ஈரானுக்கு இருப்பதாகக் கூறியுள்ளார். அதேவேளை ஐ. நா வின் பாதுகாப்புச்சபை ஈரானது அணுச்சக்தி ஆற்றல் தொடர்பில் ஈரானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண் டும் என வலியுறுத்தி வருகிறது. அமெரிக்காவோ, ஈரானின், அணுசக்தியானது உலகத்திற்கே பேராபத்து எனவும் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய கடமையும் அதிகாரமும் தனக்கு உண்டென சொல்லிக்கொள்கிறது. ஆக அதிகாரம் என்பது உரிமை என்பதும் அவரவருக்கேற் றால் போல் வேறு வேறு வழிகளில் மொழி பெயர்க்கப்படும்.

## ஜனநாயகம் கோலோச்சுதல்

அமெரிக்காவில் இங்கிலாந்துக் குடியேற்றங்கள் அமைக்கப்ப ட்ட 400வது ஆண்டு நிறைவு நிகழ்வில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி "அமெரிக்க வரலாறு சுதந்திரத்தின் உண்மையான வடிவத்தை எடுத்துக் காட்டுவதாகும். எங்களது அரும் முயற்சியால் ஈராக்கிலும் ஆப்கானிலும் ஜனாநாயம் கோலோ ச்சுகிறது. உலகின் அதியுயர் சுதந்திரத்தை அம்மக்களுக்கு ஏற்படுத்திய பெருமை அமெரிக்காவையே சாரும்" உண்மை தான் பல இலட்சக்கணக்கான செவ்விந்தியர்களின் புதை குழிகளில் மீது நிலைநாட்டப்பட்ட அமெரிக்க சுதந்திரம் இன்று பல இலட்சம் ஈராக்கிய ஆப்கானிய மக்களின் இரத்தத்திலும் கண்ணீரிலும் உயர்வடைந்திருக்கிறது.

## யார் வந்தால் என்ன

உலக வங்கியின் தலைவர் பெண் ஒருவருடனான ஊழல் குற்றச்சாட்டு அடிப்படையில் பதவி விலக்கப்பட்டதை (அது நாகரிகமான முறையில் அவரே பதவி விலகுவதாக சொல்லப்பட்ட) மேற்குலக ஊடகங்களும் நமது ஊடகங்க ளும் நேர்மையாக உலக வங்கி செயற்பட்டிருப்பதாக புகழா ரம் சூட்டி உள்ளனர். நேர்மையான தலைவரே உலக வங்கிக்கு அவசியம் எனவும் அதுவே 3ம் உலக நாடுகள் வளர்ச்சியடைய உதவும் எனவும் சொல்கின்றன.

உலக வங்கி என்ற கள்வர் குகையில் ஒரு கள்வன் போனால் அவனிடத்தை நிரப்ப அதைவிடத் திறமையான இன்னொரு கள்வன்.

## ஜனநாயகத்தின் நான்காவது தூண்

இந்திய ஜனநாயகத்தின் நான்காவது தூணாகச் சித்தரிக்க ப்படுகின்ற ஊடகத்துறை இந்திய மக்களுக்கு மிக மிக அத்தி யாவசியமான உடனடித் தகவல்களை மக்களுக்குக் கொடுத்து அண்மையில் அதனைத் தூக்கி நிறுத்தின. ஒரு வாரகாலமாக நேரடிக் காட்சிகள், உடனடித் தகவல்கள், தொலைக்காட்சி விவாதங்கள் முன்பக்கத்தில் கலர் கலப் படங்கள், அசத்தலான தலைப்புகள் என இந்திய மக்களுக்கு அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவத்தை கணப் பொழுதும் தவறவிடாமல் ஊடக சேவையாக அருமையாகச் செய்திருந்தன.

அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம்: ஐஸ்வர்யா ராய்- அபிஷேக் பச்சன் திருமணம்!

# நக்சல்பாரி எழுச்சி வசந்தத்தின் இடி முழக்கம்



40வது ஆண்டு நினைவாக

நக்சல்பாரி- அது இமயமலை யின் அடிவாரத்திலுள்ள ஒரு சிறு கிராமத்தின் பெயர். மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டம் சிலி குரி வட்டத்திலுள்ளது அந்தக் கிராமம். பண்ணை நிலப்பிரபுக்கள், கந்துவட்டிக்காரர்கள் அரசு அதி கார வர்க்கத்தினர், போலீசு ஆகி யோரின் சுரண்டல் ஒடுக்கு முறைக் கொடுமைகளை மௌ னமாக அனுபவித்துக் கொண் டிருக்கும் இலட்சக்கணக்கான இந்தியக் கிராமங்களில் ஒன்றா கத்தான் நாற்பதாண்டுகளுக்கு முன்பு அந்தக் கிராமம் இருந்தது. 1967- ஆம் ஆண்டு மே 23- ஆம் தேதிக்குப் பின்னரோ அது கோடான கோடி உழைக்கும் மக்களின் இலட்சியக் கனவு. நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் நிலம் கிடைக்குமென்று அரசு அதிகார வர்க்கத்தை அண்டிக் காத்துக்கிடப்பதா. அல்லது ஆயு தம் ஏந்திப் போராடி நிலப்பிரபுக்க ளின் நிலங்களைப் பறிமுதல் செய் வதா என்ற கேள்விக்கு விவசா யிகள் அங்கே விடைகண்டனர். அதுதான் நக்சல்பாரி உழவர்க ளின் ஆயுதம் தாங்கிய பேரெழு ச்சி சி.பி.எம் கட்சிக்குள்ளிருந்த கம்யூனிசப் புரட்சியாளர்களால் வழி நடத்தப்பட்ட எழுச்சி மார்க்சிய லெனினிய- மாசேதுங் சிந்த னையை உயர்த்திப் பிடித்த மாபெ ரும் எழுச்சி "துப்பாக்கிக் குழாயி லிருந்து அரசியலதிகாரம் பிறக்கி றது." என்று முழங்கிய எழுச்சி. சிலிகுரி வட்டத்தின் ஆயிரக்கண க்கான விவசாயிகள் கிராமக் கமிட் டிகளை நிறுவி ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். தங்கள் கூலிக் காக மட்டும் போராடும் தொழிற்ச ங்க வாதத்தைக் கைவிட்டு தேயி லைத் தோட்டத் தொழிலாளர்க ளும் அவர்களோடு இணைந்து ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். நிலப்பிரபுக்களின் பட்டாக்களும் கடன் பத்திரங்களும் தீயிட்டு எரிக் கப்பட்டன. வில்லும் அம்பும் துப்பா க்கியும் ஏந்திய விவசாயிகள் அதி காரத்தைத் தங்கள் கையில் எடுத் துக் கொண்டனர். மக்கள் நீதிமன் றம் அமைத்து எதிரிகளைக் கூண் டிலேற்றி விசாரித்துத் தண்டனை வழங்கினர். சாட்டைகள் முதன் முறையாகக் கொழுத்த தசைக ளைச் சுவைத்தன. கொடிய நிலப் பிரபுக்களுக்கு அங்கே மரணதண் டனை விதிக்கப்பட்டது. அறுவ டை செய்யப்பட்ட தானியங்கள் போகவேண்டிய இடத்திற்கு கூலி ஏழை உழவர்க ளின் குடிசைக்கு முதன் முறையாகப் போய்ச் சேர் ந்தன. குத்தகை விவசாயிகளின் அனுபோக உரிமை நிலைநாட்டப் பட்டது. வயல்களெங்கும் பட்டொ ளிவீசிப் பறந்து கொண்டிருந்த செங்கொடிகள் நிலப்பிரபுக்களை எள்ளி நகையாடின.

1967 மார்ச் மாதத்திலிருந்து படிப்ப டியாக முன்னேறிய நக்சல்பாரி எழுச்சியைக் கண்டு ஐயோ "பய ங்கரவாதம்!" என்று ஆளும் வர்க் கங்கள் அலறின. மே 23- ஆம் நாளன்று தங்களது தலைவர்க ளைக் கைது செய்ய வந்த போலீ சு படையை நக்சல்பாரி விவசாயி கள் திருப்பித் தாக்கி விரட்டினர். பின்னர் பெருபடையுடன் வந்து நரவேட்டையாடியது போலீசு. இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப் பட்ட போதும் நக்சல்பாரி தன் நிறத்தை மாற்றிக் கொள்ளவில் லை.

நக்சல்பாரி- வெறுமனே நிலத்திற் கான போராட்டமல்ல அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம் "உழுபவனுக்கே நிலம் உழைப் பவருக்கே அதிகாரம்!" நக்சல்பாரி எழுப்பிய இந்த மந்திரச் சொற்கள் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எதிரொலித்தன. முஷாகரி, கோபிவல்லபூர், லக்கிம்பூர் கேரி, சிறீகாகுளம், தெலிங்கானா, கேர ளா, தமிழ்நாடு.... என நாடெங்கி லும் வர்க்கப் போராட்டம் காட்டுத் தீயாகப் பற்றிப் படர்ந்தது.

"வேலை நிறுத்தம் செய்தால் ஆலையை மூடிக் கதவடைப்பு செய்வோம்" என்று மிரட்டிய ஆலை முதலாளிகளை அவர்க ளது அறைக்குள்ளேயே கதவ டைப்பு செய்து முற்றுகையிட்டா ர்கள் தொழிலாளர்கள். நக்சல்பாரி தொழிற்சங்கங்களின் போர்க்குண மிக்க போராட்ட வடிவமாக "கேரோ" எனும் முற்றுகைப் போராட்டம் நாடெங்கும் பரவியது நாடெங்கும் மாணவர்கள் கல்வி யை கல்லூரியைத் துறந்து நக்சல் பாரி இயக்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டனர். விவ சாயிகளை அரசியல் உணர்வூட்டி அணிதிரட்டி கிராமங்களை நோக் கிச் சென்றனர்.

போராட்டங்களைக் கட்டியமை த்து வழிநடத்திய 'குற்றத்திற் காக' கைது செய்யப்பட்ட புரட்சி யாளர்கள் குற்றுயிரும் கொலையு யிருமாக நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டார்கள். "ஆம்! நாங்கள்தான் பண்ணையாளர்களைக் கொன் றோம். மக்கள் எதிரிகளை அழித் தொழித்தோம். தூக்கு தண்ட னையா அதற்கு நாங்கள் அஞ்ச வில்லை. தீர்ப்பை எழுதிவிட்டு ஏன் விசாரணை நாடகமாடுகி றாய்?" என்று கலகக் குரல் எழுப் பினார்கள், நீதிமன்றங்களின் புனி தம் நாடாளுமன்ற- சட்டமன்றங்க ளின் மீதான மாயை. போலீசின் மீதான அச்சம் அனைத்தையும் ஒரே அடியில் தகர்த்தெறிந்தது நக்சல்பாரி.

தகர்ந்தவை ஆளும் வர்க்க நிறு வனங்கள் மட்டுமல்ல. நாற்காலி புரட்சி செய்யும் இடது வலது போலி கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தான். நக்சல்பாரி பேரெழுச்சியை ஆதரித்தும் அதை ஒடுக்கி அவ தூறு செய்த சி.பி.எம் கட்சியின் துரோகத்தையும் நிராகரித்தும் நாடெங்கும் கம்யூனிசப் புரட்சி யாளர்கள் ஒருங்கிணைந்தனர். மார்க்சிய- லெனினிய- மாசேதுங் சிந்தனையே எங்களின் சித்தாந் தம். தரகு அதிகார முதலாளித்து வம் நிலப்பிரபுத்துவம், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் ஆகியவற்றைத் தகர்த்தெறிந்து புதிய- ஜனநாயகப் புரட்சியைச் சாதிப்பதே எங்களது உடனடி இலட்சியம். போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம். ஆயுதப் போராட்டப் பாதையில் மக்கள் யுத்தத்திற்கு அணிதிரள் வோம்- எனத் தமது கொள்கைக ளைப் பிரகடனம் செய்த புரட்சியா ளர்கள், இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) என்ற புரட்சிகரக் கட்சியை லெனினது நூற்றாண்டு தினத் தில்-1969 ஏப்ரல் 22 ஆம் நாளில் தோற்றுவித்தனர். அது. நக்சல் பாரி பேரெழுச்சி ஈன்றெடுத்த போராளி.

2007- நக்சல்பாரி எழுச்சியின் நாற்பதாம் ஆண்டு கடந்த 40 ஆண்டுகளில் நக்சல்பாரி இயக் கம் கற்றுக் கொண்டதும் சாதித் திருப்பதும் ஏராளம். அளவில் மட் டுமல்ல அதன் முதிர்ச்சியும் அரசி யல் செல்வாக்கும் பெருகியிருக்கி றது. நக்சல்பாரி என்ற சொல் இனி மே. வங்கத்திலுள்ள சிறு கிராமத்தை மட்டும் குறிக்கவி ல்லை. அது. உலகப்புரட்சி வரலா ற்றில் அழிக்க முடியாத இடத்தைப் பெற்றிருக்கிறது. அது ஒரு மாபெ ரும் அரசியல் இயக்கத்தைக் குறி க்கிறது. ஒரு ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியைக் குறிக்கிறது. நாடாளுமன்ற போலி ஜனநாயகத் துக்கு வெளியே உழைக்கும் மக் கள் அணிதிரளும் அரசியல் மைய மாகத் திகழ்கிறது. அதிகாரவர்க்க- இராணுவ அரசியலமைப்பைத் தாக்கித் தகர்ப்பதற்கான போரா யுதமாக எழுகிறது. உழைக்கும் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கான ஒரே பாதையாக விள ங்குகிறது.

1970- களில் கல்கத்தா வீதிகளில் ஆயிரக்கணக்கான புரட்சிகர இளைஞர்களைச் சுட்டுக் கொன்ற சித்தார்த்த சங்கர்ரே அதன் பிறகு கிராமங்கள்- நகரங் கள்- சிறைச்சாலைகளிலும் புரட்சி யாளர்களின் ரத்தம் குடித்த பாசிச க்காளி இந்திரா, 80-களில் தரும

தொடர்ச்சி 15ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கிலும் தெற்கிலும் மடிந்து மாழ்வோர் மக்களே

நமன்

யுத்தம் தனது அகோரத்தை உச்சப்படுத்தியே வருகிறது. எரியும் யுத்தத்திற்கு எண்ணெய்வார்க்கும் முயற்சிகளும் நிகழ்ச்சிகளும் மும்மரமாக நடந்தேறி வருகின்றன. இதனால் நாளாந்தம் வடக்கு கிழக்கிலுல் மட்டுமன்றி தெற்கிலும் பல விதமான தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன. இவற் றில் பெருமளவிற்கு கொல்லப்படுபவர்கள் படுகாயங்கள் படுவோர் மக்களாகவே உள்ளனர். இவற்றிற்கு ஆட்படு வோரும் அவர்களது குடும்பங்களும் நிர்க்கதியாகி வாழ்வை யே இழந்து கொள்கின்றனர். இத்தகையோர் யுத்தத்திலோ தாக்குதல்களிலோ பங்குபெறாத மக்களாவர் இவர்களை யே அப்பாவி மக்கள் என்று கூறிக் கொள்ளப்படுகின்றது. இவர்கள் தத்தமது அன்றாட வாழ்வுக் கான செயற்பாடுகளி லும் பற்றாக்குறை இல்லாமை என்பன வற்றிற்கும் உட்பட்ட மக்களாவர். இவர்கள் வாழும் பிரதேச ங்களாலும் பேசும் மொழியாலும் வணங்கும் கடவுளார்களாலும் வேறுபட்டவ ர்கள் போன்று தோற்றமளித்தாலும் சாராம்ச த்தில் மனிதர்க ளாவர். அதுவும் இந் நாட்டின் உரிமைக்குரிய உழைக்கும் மக்களாவர்.

வடக்கு கிழக்கிலே யுத்தத்தின் மூலம் கொல்லப்பட்ட மக்களி ன் எண்ணிக்கை ஒரு லட்சத்தை தாண்டிவிட்டது. படுகாய ங்கள் பட்டு அரைகுறை வாழ்க்கையில் துன்பமுறுவோர் பல்லாயிரமாக உயர்ந்துள்ளது. உள்நாட்டில் இடம் பெயர்ந் தோர் ஐந்து லட்சமாக உள்ளனர். வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தோர் பத்து லட்சம் எனக் கூறப்படுகின்றது. இந் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியதில் தமிழ்கள் முஸ்லீம்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் உள்ளடங்குவர். இவ்வாறான மக்கள் சாதாரண விவசாயிகளும் தொழிலாளர்களும் அன் றாட உழைப்பாளிகளுமாவர். இவர்களது அழுகை ஓலங் களும் இரத்தமும் கண்ணீரும் ஒரே விதமானவைகளா கும். இவர்களது மரண ஓலங்களும் ஏக்கங்கள் எதிர்பார்ப்பு கள் போர் வெறி கொண்டு அலையும் பேரினவாதிகளுக்கு கேட்பதும் இல்லை தெரிவதும் கிடையாது.

வடக்கு கிழக்கிலே பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான தாக்கு தல் எனக்கூறி ராணுவ நடவடிக்கைகள் ஈவிரக்கமின்றி எடுக்கப்படுவதால் சாதாரண மக்களே நாளாந்தம் கொல் லப்பட்டும் கொடுமைகளுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். அதற்குப் பழி வாங்கும் விதத்தில் தெற்கிலே குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றது. அங்கே பயங்கரவா திகளை இலக்கு வைப்பதாகக் கூறப்படுகிறது. இங்கே படையினரை இலக்கு வைத்தே குண்டுத்தாக்குதல் எனக் கூறப்படுகின்றது. ஆனால் அங்கும் சரி இங்கும் சரி கொல்ல ப்படுவோரில் பெரும்பாலோர் சாதாரண மக்களாகவே உள் ளனர்.

வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் மற்றும் எப்பகுதியி லாவது பொது மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அதற்குள்ள ஒரே வழி யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். யுத்தம் நிறுத்தப்படுவதற்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அரசியல் தீர்வுக்கு நியாயமான தீர்வு யோசனைகள் முன் வைக்கப்பட்டு பேச்சு வார்த்தை இடம் பெற வேண்டும். அதற்கு ஆளும் தரப்பில் பேரினவாத வெறிகொண்ட சக்திகள் முன்வருவதாக இல்லை. யுத்த நிறுத்தம், நியாயமான தீர்வு யோசனைகள், பேச்சுவார் வார்த்தை, முடிவில் முழுமையான தீர்வும் சமாதானமும் ஏற்பட வேண்டும். இதனை வலியுறுத்தக் கூடிய சக்தி அனைத்து மக்களுக்கும் மட்டுமே உண்டு.

# அமெரிக்காவின் நீதிமன்றத் தீர்ப்பு

உயர் வகுப்பு மாணவர்களுக்கு முதலாளித் துவ ஜனநாயகத்தில் நீதித்துறை சட்டவாக்கத் துறை என்பன சுதந்திரமாக இயங்குகின்றன என்பதாகப் பாடம் படித்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் சட்டம் நீதி சகலருக்கும் சமம் என்றும் கூறப்படு கிறது. நீதியென்பது எப்பொழுதும் ஆளும் வர்க்கத்தின் நீதியாகவே இருந்து வருவதை நாம் நடைமுறையில் காண் கின்றோம். இதற்கு அண்மைய உதாரணத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். அமெரிக்காவில் புதிதாகப் பதவியேற்கும் ஜனாதிபதி முதலில் செய்யும் வேலை நாட்டின் வழக்குத் தொடுநரை அதாவது சட்டமா அதிபரை மாற்றுவதாகும். புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்டவருக்கு விசுவாசமான ஒரு சட்டமா அதிபர் நியமிக்கப்படுவார். நீதித்துறையானது புதிய நிர்வாகத்திற்கு இடைஞ்சல் தரும் தீர்ப்பு எதனையும் மேற் கொள்ளாதிருப்பதற்கான முன் எச்சரிக்கை ஏற்பாடே இது வாகும்.

அமெரிக்காவின் தற்போதைய சட்டமா அதிபர் அல்பேர் ட்டோ கொன்சாலெஸ் தனது பணிப்புரைகளுக்கு மதிப்பளி க்கத் தவறிய பல நீதிபதிகளை அண்மையில் பதவி நீக்கியமை இங்கு கவனிக்கத்தக்கது. ஏப்பிரல் 6ம் திகதி சமஷ்டி நீதிபதி கத்லீன் கார்டோன் சர்வதேசப் பயங்கரவாதியான **லூயிஸ் பொசாடா கரிலெஸ்** என்பனை இரண்டரை இலட்சம் ரொக்கப்பிணையில் அல்லது ஒரு கூட்டுத்தாபனத்தின் உத்தரவாதப் பிணையில் செல்ல அனுமதிக்கும் தீர்ப்பினை வழங்கினார்.

பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட பொசாடா பல பயங்கர குற்றச் செயல்களுக்கு சூத்திரதாரி. அவன் அமெரிக்க இராணுவ அதிகாரியாய் இருந்ததோடு அமெரிக்க உளவு நிறுவனமான சீ.ஐ.ஏ யின் கையாளாகவும் செயல்பட்டு வந்தவன்.

**அவனுடைய குற்றச் செயல்கள் சில:-**

1976ல் கியூபாவின் விமானப் பயணிகள் 73 பேர் கொல்லப் படக் காரணமாக இருந்தவன். 1997ல் ஹவானாவில் உல்லாசப் பயணிகள் மீதான குண்டுத் தாக்குதல் இடம்பெறச் சூத்திரதாரியானான். ஜோன்.எவ். கெனடி யின் கொலையிற் கூட சம்பந்தப்பட்டவன் எனக் கூறப்படுகிறது.

இத்தகைய பயங்கரவாதச் செயற்பாட்டாளரான பொசாடா பிணையில் செல்ல அனுமதிப்பதற்கான காரணங்கள் பின்வ ருமாறு நீதிபதியால் கூறப்பட்டது:-

"வயதாகிவிட்டபடியாலும் பலவீனமாய் உள்ளதாலும் சமுதா யத்துடன் நெருக்கமான உறவு வைத்திருப்பதாலும் அவ னால் பயங்கரவாதச் சம்பவங்கள் இடம் பெறும் என வழக் காளிகள் போதிய ஆதாரங்களை சமர்ப்பிக்கத் தவறியுள் ளனர்."

இதுமட்டுமல்ல குறித்த குற்றச் செயல்களின் தன்மையும் சூழல்களும் பிரதிவாதியின் சார்பாகவே உள்ளது.


அவன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அவனால் சமுதாயத்திற்கு கேடு விளைவிக்கு மென்பதாகக் குறிப்பி டப்படவில்லை. மேலும் தீர்ப்பின் முக்கியமான பகுதி பின்வ ருமாறு அமைந்துள்ளது.

"இவன் வேறு ஒரு நாட்டிற்கு ஓடினால் பிரதிவாதிக்கு இந்த நாட்டில் (அமெரிக்காவில்) உள்ள உரிமைகளும், நன்மைகளும், இந்த நாட்டில் கிடைக்கும் ஆதரவும் இல் லாது போய்விடும் என்பதாக" கூறப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பும் பிணை விடுதலையும் எதனைக்காட்டுகின்றது. அவனது குற்றச் செயல்கள் அமெரிக்காவிற்கு வெளியே அமெரிக்க அரசின் ஆசீர்வாதத்துடன் நடைபெற்றதால் அமெரிக்க 'நீதி' யின் படி பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டான்.

அதே சமயம் **ஐந்து கியூபா போராளிகளை** அமெரிக்காவில் மிகமோசமான தனித்தனியாக சிறைச்சாலைகளில் அடை த்து வைத்துள்ளது அமெரிக்க நிர்வாகம். ஏனெனில் அந்த ஐந்து போராளிகளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த் துப் போராடியவர்களாவர்.

## நீங்காத நினைவுகளின் வரிசையில்



தோழர் மு. முத்தையா நினைவில் நீங்காத ஒரு பொது வுடைமை வாதியாக வாழ்ந்து மறைந்தவர் சமூக அக்கறை யாளனாகி மனித நேயத்தை யும் பகுத்தறிவுப் போக்கையும் கடைப் பிடித்து விரைவிலேயே மாக்சிசத்தை உள்வாங்கி அதனையே சமூக மாற்றத்திற் கும் வாழ்வுக்கும் வழிகாட்டி யாக ஏற்றுக் கொண்டவர் முததையா. ஒரு மாக்சிச லெனி னிச வாதியின் நிலைப்பாடு மார்க்சிச உலக நோக்கினை முழுமையாக விளங்கி உள்வாங்கிக் கொள்வதாகும். அதன் மூலம் சொல்லாலும் செயலாலும் அதன் கொள்கை வழி நின்று இறுதிவரை வாழ்வை முன்னெடுப்பதாகும். தோழர் முத்தையா அவ்வாறு வாழ்ந்த ஒரு பொதுவுடைமை வாதி யாவார்.

அறுபதுகளின் நடுக்கூறிலே அவருடனான தொடர்பும் நெரு க்கமும் எமக்கு ஏற்பட்டது. ஒரு போராட்டச் சூழலும் நெருக்கடிகளும் கொண்ட அக் காலகட்டத்தில் தோழர் முத்தையா கட்சியுடன் இணைந்து நின்று பல்வேறு தளங்க ளில் கட்சி வேலைகளில் பங்கு கொண்டவர். தொழிற்சங்கத் திலும் வெகுஜன இயக்கத்திலும், கட்சி முன்னெடுத்த போரா ட்டங்களிலும் அவரது நடுத்தர வயதுக் காலத்தில் இளம் தோழர்களோடு இணைந்து நின்று செயலாற்றியவர். அவரை நாம் அவ்வேளை "முத்தையாண்ணை" என்று மிக வாஞ்சையோடு அழைப்போம். அந்தளவிற்கு கொள் கைப் பிடிப்பும் கட்சி வேலைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற துடிப்பும் மிக்க ஒருவராக இருந்து வந்தார். தோழமை யுணர்வுடனும் அக்கறையுடனும் கட்சித் தோழர்கள் குறிப் பாக கட்சி ஊழியர்கள் மீது அக்கறை செலுத்தி வந்தவர். கடுமையான எந்தவொரு கட்சி வேலையையும் தானாகவே முன் வந்து ஏற்றுக் கொள்ளும் பண்பு கொண்டவர். தியாக உணர்வு மிக்கவர்.

தனது வாழ்வை தான் வரித்துக் கொண்ட பொதுவுடமைக் கொள்கைக்கு ஏற்ப வாழ்வு நடைமுறையாக்கி வாழ்ந்தவர். எளிமையும் அமைதியும் கொண்ட அவர் நூல்களை வாசி ப்பதில் எப்போதும் ஆர்வம் காட்டி வந்தவர். விவாதங்களின் போது மிகவும் தெளிவாகவும் யதார்த்த நிலைமைகளைக் கணிப்பில் கொண்டும் தனது கருத்துக்களை முன்வைப்ப வர். தொழிற்சங்கத் தலைமைப் பதவியிலும், வெகுஜன இயக்க தலைமைக் குழுவிலும், கட்சியின் நகரக் கிளையிலும் அங்கம் பெற்று முன்னிலைத் தோழராக முத்தையா செயல் பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது நினைவுகள் அவர் மறைந்து ஏழாண்டுகள் பின்பும் பசுமையானவைகளாவே நெஞ்சத்தில் இருந்து வருகின் றன. வடபுலத்தின் சிதறுண்ட வாழ்வுச் சூழலும் தொடர்புகள் அறுந்த நிலைமைகளும் தொடரும் யுத்தமும் முறையாக நினைவு கூர வேண்டிய தோழர்களின் நினைவுகளை எல்லாம் தூர வைத்துள்ள சோகத்தை கூறியே ஆக வேண்டும். தோழர் முத்தையாவின் மாக்சிச லெனினிச வழி நின்ற வாழ்வும் பணியும் புதிய தலைமுறை மாக்சிச லெனினிச வாதிகளுக்கு முன் உதாரணம் தருவதாகும்.

சி. கா. செ

## அமெரிக்காவின் வறுமை

ஐ.அமெரிக்கா பெரிய செல்வந்த நாடு என்று போற்றிப் புகழ்ப்படுகிறது. ஆனால் இலட்சக்கணக்கான- ஏன் கோடிக்கணக்கானவர்களுக்கு அந்த நாட்டின் "செல்வச் செழிப்பு" எவ்வகையிலும் பயன் தருவதாய் இல்லை. அமெரி க்க அரசாங்கத்தின் அண்மைய உத்தியோகப்புள்ளி விபரத்தி ன்படி மூன்று கோடி எழுபது இலட்சம் பேர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் வாழ்வதற்கு நாள் ஒன்றிற்கு 54- 72அ. டொலர்கள் தேவை. அதற்குக் கீழ் உள்ளவர் களே வறு மைக் கோட்டின் கீழ் அடங்குவர்.

ஒன்பது கோடிக்கு மேற்பட்ட அமெரிக்கர்கள் முழுச் சனத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர். இவர்கள் வாழ்க் கைச் செலவைச் சமாளிக்க முடியாது கஷ்டப்படுகின்ற னர். இவர்களுடைய வருமானம் தினமொன்றிக்கு 109 டொலர்களுக்கு கீழேயுள்ளது. பல இலட்சம் அமெரிக்கர்கள் நோயாளிகளின் மலசல கழிப்பை அப்புறப்படுத்தியும், அற்ப ஊதியத்திற்காக சிறுசிறு தொழில்களிலும், இரவு பூரா வும் காரியாலய மண்டபங்களை துப்பரவு செய்தும் மிகச் சொற்ப ஊதியத்தையே பெறுகின்றனர். கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் சில தொழில்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது.

வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்கு மிடையேயான இடைவெளி பெருமளவில் அதிகரித்த வண்ணமிருக்கின்றது. 2005ம் ஆண்டு வெளிப்பட்ட தகவலின்படி அமெரிக்காவின் 20 வீத வருமானத்தை அமெரிக்காவில் ஒரு வீதத்தினரே அனுபவிக்கின்றனர். அதே சமயம் வறிய 20 விதத்தினர் 3.4 வீத செல்வத்தை மட்டுமே பகிர்ந்து கொள்கின்றனர். பலதொழில்களுக்கு மிகச் சொற்ப ஊதியமே வழங்கப்படுகி றது. ஒரு நபர் முழுநேர வேலையை வருடம் பூராகவும் செய்தாலும் வறுமையிலிருந்து விடுபடமுடியாது. தொழிற் சங்கம் உள்ள இடங்களில் இவர்கள் நடுத்தர வருமான குடும்பமாயிருப்பார்கள் அல்லாவிடில் வறியவர்களாயிருக்க வேண்டும்.

நியூயோக் ரைம்ஸ் செய்தித் தாளிலிருந்து

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# திராவிட இயக்கமும் திரைப்பட ஆபாசமும்

சிவா

தணிக்கை இல்லாமல சில திரைப்படங்கள் எடுக்க அனுமதிப்பார்கள் என்றால் குறுகிய காலத்திலேயே திராவிட நாட்டைப் பெற்றுத் தருவேன் என்று அண்ணாதுரை சொன்னது நினைவிலுள்ளது. சரியான மேற்கோள் கைவசமில்லை. அண்ணாதுரை சினிமாவின் வெகுசனக்கவர்ச்சியைச் சரியாகவே அறிந்து வைத்திருந்தார். ஆனால் அது ஒரு சமூக மாற்றத்தைக் கொண்டு வரும் ஆற்றலை உடையது என்பதில் அவரது புரிதல் தவறாகவே இருந்தது. ஒரு புரட்சிகரச் சூழலில் அல்லது ஒரு வெகுசன எழுச்சியின் போது ஒரு நாடகமோ சினிமாவோ வலிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஏன் ஒரு பாடல் மட்டுமே ஒரு வலுவான உந்துதலை வழங்கலாம். ஆனால் அடிப்படையான அரசியற் பணிகள் இல்லாத ஒரு சூழலில் எந்த உன்னதமான கலை இலக்கியப் படைப்பும் பயனற்றது.

திராவிட இயக்கம் என்பது என்றுமே திராவிடரது இயக்கமாக இருந்ததில்லை. ஈ.வெ.ரா. அவர்கள் திராவிடர் என்ற பேரைப் பாவித்தது அன்றைய சென்னை மாகாணத்தில் பிராமணர் ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை உருவாக்கும் நோக்கிலேயே தான். அதன் வர்க்க அடிப்படை அதன் அரசியலைத் தீர்மானித்தது. எனினும் ஈ.வெ.ரா. தனது இயக்கத்தில் மற்ற எவரையும் விடப் புரட்சிகரமான சமூகச் சீர்திருத்த நோக்குடையவராக இருந்தார். பிராமணிய எதிர்ப்பு சாதிய எதிர்ப்பு, பெண்ணுரிமை, பகுத்தறிவுச் சிந்தனை என்பனவற்றில் அவருக்கு இருந்த தீவிரமும் ஆழமான ஈடுபாடும் அவருடைய பேரில் அரசியல் நடத்திய எவரிடமும் இருந்ததாகச் சொல்லுவது கடினம். தேர்தல் அரசியலின் அபாயங்களை அறிந்ததால் அவர் அதைத் தவிர்த்துத் திராவிடர் கழகத்தின் சமூகச் செயற்பாடுகட்கே அழுத்தம் கொடுத்தார். சட்டமன்றத்தில் அதிகாரத்தைப் பிடிக்கிற ஆசையினாலே தான் அண்ணாதுரையும் பிறரும் பிரிந்தார்கள். அண்ணாதுரையினதும் தம்பிமாரினதும் யோக்கியம் தெரிந்ததால் தான் பாடுபட்டுச் சேர்த்த சொத்து கழகத்தின் சமூக அரசியற் பணிகட்குப் பயன்படாமல் வேறு திசைகளில் விரயமாகும் என்பதை மனதிற் கொண்டே ஈ.வெ.ரா. மணியம்மையாரைத் திருமணஞ் செய்து தனக்குப் பின்பு கழகச் சொத்துக்களை அவரது பொறுப்பில் விட்டார். அந்தத் திருமணத்தைக் காரணங்காட்டி அது பகுத்தறிவுக் கொள்கைக்கு உடன்பாடானதல்ல என்று பிரசாரஞ் செய்து அதன் காரணமாகவே பிரிந்து தி.மு.க அமைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டு வந்த பொய் இன்னமும் பலரால் நம்பப்படுகிறது.

ஈ.வெ.ரா. அறவே வெறுத்தவற்றுள் பிராமணியத்திற்கு அடுத்ததாகச் சொல்லக்கூடிய சிலவற்றுள் ஒன்று தமிழ் சினிமா. அதன் சீரழிவுத் தன்மையை அவர் அடையாளங் கண்டதாலும் சினிமாத் துறையில் இருந்து வந்தவர்களைப் பற்றி அறிந்திருந் ததாலும் சினிமாத் துறையை அவர் வெறுத்தார். தனிப்பட்ட முறையில் என்.எஸ். கிருஷ்ணன், எம்.ஆர். ராதா போன்ற சிலரை அவர் மதித்தார். ஆனால் அண்ணாதுரைக்கு கருணாநிதிக்கும் சினிமா மூலம் சம்பாதிக்கலாம் என்று தெரிந்திருந்தது. சினிமாவை அவர்கள் தமது அரசியல் நோக்கங்கட்காகப் பயன்படுத்தினாலும் அரசியலை மிகவும் அளவறிந்தே செய்தனர். சமூக சீர்திருத்த கருத்துக்களை முன்வைத்த போதும் அவர்களது திரைக்கதைகள் எல்லாம் ஓர் அளவு வசதியுள்ள நடுத்தர வர்க்கத்தை மையப்படுத்தியும் ராஜா ராணிக் கதைகளாகவே அமைந்தன. கற்பு, பெண்மை போன்ற விடையங்களில் "தமிழ்ப் பண்பாட்டு" விழுமியங்கலையா அவர்கள் உயர்த்திப் பிடித்தனர் காதலுக்கு சாதியும் சமூக அந்தஸ்த்தும் தடையாக இருக்கக் கூடாது என்பதை அவர்கள் வற்புறுத்தியதைவிட அதிக மாகவற் புறுத்திய காங்கிரஸ் சார்பு சினிமா முதலாளிகளும் இருந்தார்கள். சிலர் பிற சமூக அநீதிகளையும் தொட்டார்கள். எனவே சினிமாவைக் கொண்டு சமூகச் சீர்திருத்தச் சிந்தனை களை வளர்த்ததில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்கு முன் னோடியானதோ முதன்மையானதோ என்று கூற இயலாது.

திராவிட நாட்டுக் கொள்கைக்கோ திராவிடப் பிரிவினைக் கொள்கைக்கோ சாதகமாகப்பிரசாரஞ் செய்வதற்குத் திரைக் கதை வசனங்களிலும் பாடல்களிலும் "டில்லி அதிகாரத்துக்கு" எதிரான ஒரு சில கருத்துக்களும் நாத்திகத் தன்மையுடைய கருத்துக்களும் திராவிடம் என்கிற சொல்லின் பயன்பாடும் இருந்தாலும் சினிமா ஒரு வெகுசனக் கவர்ச்சிச் சாதனம் என்பதில் அவர்கள் கவனமாகவே இருந்தார்கள். இவ்விடயத்தில் அவர்களுக்கும் பிற நவீன சினிமாத் துறையினருக்கும் ஆழமான வேறுபாடு இருக்கவில்லை. எனினும் ஒரு சில விடயங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தினருக்கு இருந்த ஈடுபாடு அவர்களது சமூக அக்கறையை விடவுங் கூடுதலாக ஒரு வக்கிர சிந்தனையை அடையாளங் காட்டுவ தாகவே இருந்தது. அண்ணாதுரையும் கருணாநிதியும் கதைவசனம் எழுதிய பல திரைப்படங்களில் பெண்கள் மீதான பாலியல் பலாத்காரம் ஒரு முக்கிய காட்சியாக அமைந்திருந்ததைப் பற்றி 1950களிலேயே குறிப்பிடப்பட்டிருந்தது. "திருமணத்துக்குத் தாலி அவசியமா?" என்று கேள்வி எழுப்பியவர்கள் பராசக்தி படத்தில் அதை ஒரு இடத்தில் கூறியதற்கு மேலாக ஒரு சீர்திருத்தக் கருத்தாகச் சினிமா மூலம் வற்புறுத்தியதாக நினைக்கவில்லை. 1960களில் காமராஜர் ஆட்சியில் தாலிக்குத் தங்கம் இல்லை என்று ஆட்சேபனை எழுப்பும் அளவுக்குத் தாலி பற்றிய அவர்களது பகுத்தறிவு நிலைப்பாடு தலைகீழாக மாறி விட்டது.

திரைப்பட வசனங்களில் பெண்களை வர்ணிக்கிறபோது பெண்களை நுகர்வுப் பொருட்களாகவும் ஆண்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் காட்டும் பழமைவாதம் திராவிட இயக்கத்தினரிடம் வேகமாகவே வலுப்பெற்று வந்தது. ஏதோ வகையில் பெண்கள் சமத்துவத்தை ஏ.வி.எம் முதலாளி மெய்யப்பச் செட்டியார் வற்புறுத்திய அளவுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திரைப்படத் துறையினர் எதையுமே செய்யவில்லை எனலாம்.

திரைப்படப் பாடல்களில் பெண்ணை நுகர்வுப்பொருளாகக் காணுகிற தன்மைக்கும் மேலாக அன்றைய சூழலில் ஆபாசமானவையாகக் கருதக்கூடிய பாடல்கள் முக்கியமாகக் கண்ணதாசனிடமிருந்தே வரத் தொடங்கின. கட்டில்- தொட்டில் என்று கிளுகிளுப்பை ஒருபுறமும் குடும்பத்தில் பெண்ணின் இடத்தை இறுக்கமாக வரையறுத்தும் எழுதப்பட்ட வரிகள் திராவிட முன்னேற்றக் கழகம் பெண்ணுரிமை விடயத்தில் ஈ.வெ. ராவிடமிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்று விட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. பின்பு கண்ணதாசன் பக்திப் பெருங்கடலில் ஆழ்ந்தாலும் ஆபாசம் அவரை விட்டு விலகவில்லை.

ஈ.வெ.ரா தெளிவான அரசியல் நோக்குடன் மணியம்மை யாரைத் திருமணம் செய்ததை ஆட்சேபித்த தி.மு. கவினர் தமது பாசறையின் பிரதான சினிமா நடிகராயிருந்த எம்.ஜி. ராமச்சந்திரன் தனக்குப் பேத்தியாக இருக்கக் கூடிய வயதுடைய இளம் பெண்களை அணைத்து அனைத்து ஆபாசமாக ஆடுவதில் எந்தந் தவறும் இருப்பதாகக் காணவில்லை. எம்.ஜி. ராமச்சந்திரனுக்கு வயது ஏற ஏற அவரது கதாநாய கிமாரு க்கு வயது குறையக் குறையப் போகத் தொடங்கியது பற்றித் தி.மு.க பிளவுபடும் வரை அங்கே யாரும் விமர்சித்ததாகவும் தெரியவில்லை. இன்றைய சினிமாவின் ஆபாசத்தின் வேர்கள் 1950களிலி ருந்து தொடங்குகின்றன எனலாம். தி.மு.க இல்லாது போயிருந்தால் சினிமாவில் ஆபாசம் பெருகியிராது என்பது என் வாதமில்லை. ஆனால் ஈ.வெ.ரா வுடைய அரசியலுக்கும் சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகட்கும் வாரிசுரிமை கொண்டாடித் தம்மைத் தமிழ்ச் சமூகத்தில் நிலை நிறுத்திக் கொண்ட ஒரு அரசியல் தலைமை தனது திரையுலகச் செல்வாக்கைத் திரைப் படங்களின் சீரழிவுக்கு எதிராகப் பயன்படுத்தத்தவ றியது அத்துடன் அச் சீரழிவுக்கு உடந்தையாகவும் முன்னோடியாகவுமே பயன்படுத்தியுள்ளது என்பது வருத்தத்தக்க ஒரு உண்மையாகும். ஈ.வெ.ரா அவர்களது மனித விடுதலைச் சிந்தனைகளது சுவடே இல்லாது போன கட்சிகளைத் தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.க போன்றவை இருந்துவருவது போகத் திரவிடர் கழகம் என்ற பேரில் இயங்குகிற அமைப்புக்களும் சீரழியத் தொடங்கிச் சில காலமாகிவிட்டது. தமிழகத்தில் ஒரு மாற்று அரசியலைக் கட்டியெழுப்புகிற பணி வலுப்பெறும் வரை சினிமா என்கிற சமூகச் சீரழிவின் பிடியிலிருந்து தமிழகத்தை மீட்பது சிரமமான காரியமே.

## பேயும் பெருமரமும்

மேகம் பேயாகி
கட்டுக்கடங்காமல்
நீண்ட பெருமரத்தை
ஆனமட்டு மசைத்து
அது முடியாதுபோக
பூவையும் பிஞ்சையும்
காயையுமாகப்
பெருமரத்திலிருந்து
பெயர்த்து வீழ்த்தி
வேகமாய் ஓடிய
வெள்ளத்தோடிழுத்து;

வாய்க்காலில்
பனைவெளியில்
தெருவோரச் சந்திகளில்
வெய்யில் கொளுத்தி
விறகாய் அடுக்கியது.
பூவும் பிஞ்சும்
காயும் கனியுமென்று
காலத்தை வீணடிக்காது
"காரியமாற்ற" என்று
பிஞ்சுகளைப் பிடுங்கி
மெல்ல, எங்கோ,
கோறகாலியில்
பெட்டகத்தின் மூலையில்
வைக்கோலிடும்
சிற்சில முயற்சிகள்
பழுக்கலாம் வெம்பி
பயனற்றனவாய்!

மண்ணில் வேர்பரப்பி
நின்ற பெருமரம்
காற்றில் கலைந்து
வெய்யிலில் கருகி
வெள்ளத்தில் அழுகிய
தன்னுயிர்ச் சுவடுகளை
ஆழமாய் புதைத்த
அடி வேர்களினூடாக
நின்று உறிஞ்சி
நிமிர்ந்த தோள்களினூடு
கிளைகளில் தொங்கிய
பூவுக்கும் பிஞ்சுக்கும்
பாலூட்டி மகிழ்ந்து
கனத்து நிற்கும்.
காய்கள் பழுத்து
நிறைந்து மகிழும்.
விதைகள் நிலத்தில்
புதைந்து எழுந்து
மீண்டும் மீண்டும்
நிமிரும் நிலைக்கும்.

● சோ. தேவராஜா

தாயகம் 8
ஜூன்- ஜூலை 1984

## நக்சல்பாரி எழுச்சி

13ம் பக்க தொடர்ச்சி

புரி வடஆற்காடு மாவட்டங்களில் புரட்சியாளர்களை நரவேட்டையாடிய பாசிச எம். ஜி. ஆர்- தேவாரம் கும்பல் ஆந்திராவில் வெங்கல்ராவ், சென்னாரெட்டி என்.டி.ஆர். சந்திராபாபு நாயுடு என தொலை வெறியாட்டம் போட்ட ஆட்சியாளர்கள்..... "ஒழித்து விட்டோம்" என எதிரிகள் ஒவ்வொரு முறை மார்தட்டும் போதும் "எழுந்து விட்டோம்" என அவர்களது நெற்றிப் பொட்டில் தன் துப்பாக்கியை அழுத்துகிறது நக்சல்பாரி.

இன்று தனியார்மயம், தாராளமய, உலகமயம் எனத் தொடரும் மறுகானியாக்கத்துக்கு எல்லா ஓட்டுக்கட்சிகளும் ஓரணியில் நின்று தமது எசமானர்களான ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசமாகச் சேவை செய்கின்றன. 70- களில் நிலவிய கொள்கை வேறுபாடுகளோ அரசியல் குழப்பங்களோ இப்போது இல்லை. இடது வலது போலி கம்யூனிஸ்டுகளும் தங்களது ஆடைகளைக் களைந்துவிட்டு அம்மணமாக நிற்கிறார்கள். இருப்பது இரண்டே முகாம்கள்தான் ஒன்று ஆளும் வர்க்கங்கள்- ஓட்டுக் கட்சிகளின் விரிந்த ஐக்கிய முன்னணி. மற்றொன்று. நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையிலான உழைக்கும் மக்களின் புரட்சிகப் போரணி.

அளப்பரிய தியாகத்தால் சிவந்து ஒளிரும் நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தைத் தோற்கடிக்கவோ மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவோ ஒருக்காலும் முடியாது. நாடாளுமன்றப் பாதைக்கு வெளியே ஆக்கப்பூர்வமான அரசியல்- பொருளாதாரத் தீர்வை முன்வைத்து நாட்டையும் மக்களையும் விடுதலை செய்யும் மாபெரும் புரட்சிக்குத் தலைமை தாங்கி வழி நடத்தும் தெளிவும் துணிவும் வேறெந்த அரசியல் இயக்கத்திற்கும் கிடையாது.

மறையாது மடியாது நக்சல்பாரி! மரணத்தை வென்று எழும் நக்சல்பாரி!

**ஆசிரியர் குழு**
**புதிய ஜனநாயகம்**
**மே 2007**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

யூன் 2007

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org

## ஈராக் ஆப்கானிஸ்தான் பலஸ்தீனம் லெபனான் உள்ளிட்ட வேறும் நாடுகளில் யுத்தம் இரத்தம் உயிரிழப்பு அகதி வாழ்வு அனைத்திற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமே மூலகாரணமாகும்!



இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளரிடம் மண்ணையும் வீட்டையும் இழந்த பாலஸ்தீன அகதி ஒருவர் தனது வீட்டுத்திறப்பை பத்திரமாக வைத்திருவதைக் காட்டுகிறார்.



துருக்கியில் இடம் பெற்ற மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



தமது குடும்ப உறுப்பினர்களை இஸ்ரேலியப் படைகளின் தாக்குதல்களுக்குப் பலிகொடுத்த பின் அவர்களது இறுதி நிகழ்வில் கதறி அழும் காட்சி




தனது குழந்தையைத் தோழில் சுமந்தபடி ஆப்கானிஸ்தானிய அகதி ஒருவர்



அமெரிக்காவை எதிர்த்து ஈராக் பெண்கள்



பிலிப்பீன்ஸ்சில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தை வெறுப்புடன் கடந்து செல்லும் அந்நாட்டு முஸ்லிம் யுவதிகள்




வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.